விலை : 20.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 26 புதன்கிழமை (08.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 172



கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


## ஆயுத வெடி விபத்து துரதிர்ஷ்டவசமானது

(கொழும்பு)

கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் அமைந்துள்ள ஆயுதக் கள்ஞ்சியசாலையில் ஏற்பட்ட வெடி விபத்தினை தடுக்க முடியாது என குறிப்பிட முடியாது எனவும், எனினும் துரதிர்ஷ்டமாக இந்த சம்பவம் நிகழ்ந்துவிட்டதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மக்கள் மத்தியில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு 'தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

# என்ன மனநிலையில் சம்பந்தன் செயற்படுகிறார்?

## 2016க்குள் தீர்வு என்பது வெறும் கணிப்பே - சுரேஸ் சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய முக்கிய பிரச்சினைகள் பலவற்றிற்கு இதுவரை தீர்வு எதுவும் வழங்கப்படாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் என்ன மனநிலையில் செயற்பட்டு வருகிறார் எனச் சாடிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அரசாங்கம் தனது கணிப்பின்படி எல்லாம் செய்யும் என சம்பந்தன் நம்புவதாலேயே 2016க்குள் தீர்வு என குறிப்பிட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.(23-ம் பக்.)





## "களஞ்சியசாலை வெடித்துள்ளது நான் கானில் பதுங்கியிருக்கிறேன்"

### மரணித்த இராணுவ வீரரின் இறுதி வார்த்தைகள்


(கொழும்பு)

அவிசாவளை கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் கடந்த 5-ம் திகதி ஏற்பட்ட தீ விபத்தினால் உயிரிழந்த இராணுவ வீரர் இறுதியாக தனது அண்ணா மற்றும் மனைவிக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு உரையாடியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த, உயிரிழந்த இராணுவ வீரரின் அண்ணா, சம்பவதினம் மாலை 6.29 மணியளவில் எனது தம்பியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, அப்போது தம்பி என்னிடம் அண்ணா இராணுவ முகாமின் ஆயுத களஞ்சயத்தில் தீ பற்றி வெடித்துக் கொண்டிருக்கின்றது.

24ஆம் பக்கம் பார்க்க....

## சுகாதார தொண்டர்களின் நியமனம் வட.சுகாதார அமைச்சர் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி எந்தவொரு நியமனங்களையும் வழங்க முடியாது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள வட மாகாண சுகாதார திணைக்களத்தின் உப அலுவலத்தில் அவரை

23ஆம் பக்கம் பார்க்க....

## அதிகாரி நெவில் விசாரணைக்கு ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் பிரதம பாதுகாப்பு அதிகாரி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகியுள்ளார்.

மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றிய மேஜர் நெவில் வன்னியாரச்சியே நேற்றைய தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகியுள்ளார்.

என்ன விடயம் தொடர்பில்

23ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேசத்தின் நல்லெண்ணத்தை வென்று ஈழக்கனவை இல்லாது ஒழிப்பேன்

## ஜனாதிபதி சூளுரை



(கொழும்பு)

சர்வதேச ரீதியாக அனைத்து நாடுகளினதும் நல்லெண்ணத்தினை வெற்றி கொள்வதன்மூலம் இதுவரை தோல்வியுறச் செய்ய முடியாதுபோன இலங்கையின் ஈழக் கனவுபற்றிய எல்ரீரீயின் கொள்கையினை சர்வதேசத்திலிருந்து இல்லாதொழிக்கச் செய்வதற்கு முயற்சி எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால

24ஆம் பக்கம் பார்க்க....

## பிரித்தானிய பிரதிநிதிகள் சம்பந்தனை சந்தித்தனர்



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலக வதிவிட துணைச் செயலாளர் சைமன் மெக்டொனால்ட் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான இங்கிலாந்து திணைக்களத்தின் நிரந்தர வதிவிட துணைச் செயலாளர் மார்க் லோவ்கொக் ஆகியோர், எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை, நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் உடனிருந்தார். இலங்கை மற்றும் பிரித்தானியாவுக்கு இடையிலான இராஜதந்திர தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்குடன் இவ்விருவரும் இலங்கைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மாளிகையை இனி பொதுமக்கள் பார்வையிடலாம்

### ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் கோல்டன் பூங்கா என்பவற்றை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

இதன்படி இன்று 8-ம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14-ம் திகதி வரை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு அதனை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## கிழ. முதலமைச்சருக்கு எதிராக மனு தாக்கல்


(கொழும்பு)

கடற்படை அதிகாரி ஒருவரை அச்சுறுத்தியதன் மூலம் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் இலங்கை அரசியல் யாப்பை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பி. லியனாராச்சி மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இதில், பிரதிவாதிகளாக கிழக்கு மாகாண முதலமைச்சர், சட்ட மா

24ஆம் பக்கம் பார்க்க....

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...



உ
சிவமயம்

# விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர் !

சுபமங்களம் நிறைந்த துர்முகி வருடம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (09.06.2016) வியாழக்கிழமை பஞ்சமித் திதியும், பூச நட்சத்திரமும், வியாதீபாத யோகமும், கௌலவ கரணமும், அமிர்த்சித்த யோகமும், கடக லக்கினமும், சுக்கிரவோரையும் குருவருளும் திருவருளும் கூடிய காலை 8.45 தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

சிவஸ்ரீ சுப்பையாக் குருக்களின் பூட்டனும்
சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்களின் பேரனும்
சிவஸ்ரீ சண்முகரெத்தினக் குருக்களின்
சிரேஷ்ட புத்திரனுமாகிய

## சிவஸ்ரீ பிரசன்னன் குருக்கள்

அவர்களுக்கும்



சிவஸ்ரீ கந்தையாக் குருக்களின் பூட்டியும்
சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களின் பேர்த்தியும்
சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்களின்
கனிஸ்ட புத்திரியுமாகிய

## சங்கீர்த்தனி

அவர்களுக்கும்

வேதவேதாரணிய சுவேதவனப் பெருமானின் திருவருளுடனும் ஆதிவேதாரணிய குருபரம்பரையும் பரம்பரைத் தெய்வமாகிய திருகோணமலை ஆலடிப் பிள்ளையாரினதும் அருள்மிகு ஸ்ரீமாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானினதும் திருவருளும் குருவருளும் நிறைந்த அருளாசியுடன் தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் தங்காலய வீதியில் அமைந்துள்ள **"இத்திநின்றபிலவு"** என்ற எமது இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழ பெரியோர்கள் நிச்சயித் திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

சிவஸ்ரீ சண்முகரெத்தினக் குருக்கள்
அருளரசி அம்மா தம்பதியினர்
பிரதமகுரு திருக்கோணேஸ்வரம் ஆலயம்,
திருகோணமலை.
தொ.பே : 0777574477

வரவேற்பு உபசாரம் 11.06.2016 சனிக்கிழமை
மணமகன் இல்லத்தில் நடைபெறும்

(இரு வீட்டார் அழைப்பு)

சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
புவனேஸ்வரி அம்மா தம்பதியினர்
தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன்
தேவஸ்தான ஆதீனகர்த்தா
நெல்லண்டை, தும்பளை.
தொ.பே : 0776202716, 0776383314

(C-4828)

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

(C-4825)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## ஏல விற்பனை

யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் முற்றத்தில் 20/06/2016 காலை 10 மணியளவில் பொருட்களை விற்பதற்கான ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

\- அதிபர்

(4888)

ALREADY ISSUED 24000 CERTIFICATES

**நெல்லிப்பழையில் யாழ்ப்பாணத்தில் கொழும்பில்**

MICOM THE GREAT

**School of English**

SINCE 1997 IN COLOMBO



1.IELTS -
- ❖Academy- Course Fee Rs. 20,000
- ❖General-Course Fee Rs. 15,000
- ❖Life Skills-Course Fee Rs. 20,000

Spoken English With Grammer Diploma
In English - English A/L, O/L Course Fee
Rs- 15,00 Monthly
English Literature A/L, O/L Course Fee Rs- 25,00 Monthly
Foreign Degree Programmes Will Commence Very Soon

*Conducted by*

Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
LL.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

An old Student of Honourable Prof. Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee michal - the Chief Editor of daily mirror



Contacting Numbers:
077 395 0215,
076 707 7558,
077 284 2556.
Contactable person
Mr.Joganantham

(C-4827)

Lectured on Law at, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College, London Business School, MICOM International

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கராணி நவரத்தினசாமி



யாழ்.வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை திக்கத்தை வதிவிடமாகவும் கொண்ட தங்கராணி நவரத்தினசாமி அவர்கள் கடந்த 04.06.2016 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - விசாலாட்சி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற செல்லையா - கண்டு தம்பதிகளின் அன்பு மருமகளும், நவரத்தினசாமி அவர்களின் அன்பு மனைவியும், தவமணிதேவி (உதயம் - இலங்கை), திருச்செல்வம் (லண்டன்), மகேந்திரராணி (அல்லி - இந்தியா), விசியராணி (இந்தியா), இன்பராணி (லண்டன்), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணபாலசிங்கம் (சாமி - லண்டன்), செல்வராணி (இந்தியா), புஸ்பராணி (இந்தியா), மதுபாலசிங்கம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ரவீந்திரராசா (ரவி), வேதநாயகி (லதா), அருந்தவராசா, கண்ணன், ரமேஷ், இந்திரகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கட்டி (இந்தியா), சகுந்தலா (இலங்கை), சுதா (சுவிஸ்), விமலா (இலங்கை), துரை (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாந்தா, காலஞ்சென்ற ராசு மற்றும் கரண், ரூபன், பகி, லதீவன், மீனகா, தூயவன், கோபு, அனு, விதுஷா, ஜனா, தமிழ்ச்செல்வன், வசந்தன், இமேனா, இனிஷா, இனிதா, விசாலி, இனியவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சுபத்திரன், சுஷ்மிதா, சதுர்சிகா, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 08.06.2016 புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப. 03.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நவரத்தினசாமி (கணவர்)
0776044625

தகவல்:
குடும்பத்தினர்

(C-4829)

# இராணுவத் தளபதி பதவிவிலக வேண்டும்

## முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய வலியுறுத்து

(கொழும்பு)

**கொஸ்கம- சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்துக்குப் பொறுப்பேற்று, இலங்கை இராணுவத் தளபதி உடனடியாக பதவிவிலக வேண்டும் என்று, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.**



"சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிவிபத்துக்கான முழுப் பொறுப்பையும் இராணுவத் தளபதி தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மிகவும் முக்கியமான அந்த ஆயுதக் கிடங்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இராணுவத் தளபதி தவறியதால் தான் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு உடனடியாக பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் அவரை பதவிநீக்கம்செய்ய வேண்டும்.

சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் பனாகொட இராணுவத் தளத்தில் இருந்த ஆயுதக் கிடங்குகள், சாலாவ இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டன.

நான் பாதுகாப்புச் செயலராகப் பொறுப்பேற்ற போது, ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகளை உணர்ந்து, ஒரு பகுதி கனரக ஆயுதங்களையும், வெடிபொருட்களையும், தியத்தலாவ மற்றும் மாதுறுஓயா இராணுவத் தளங்களுக்கு மாற்றினேன்.

அதற்குப் பின்னர், கொஸ்கம இராணுவ முகாமின் பாதுகாப்பு அப்போதைய இராணுவத் தளபதியால் அதிகரிக்கப்பட்டது.

முன்னர், சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில், 25 ஆயிரம் தொன வெடிபொருட்கள் இருந்தன.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அங்கிருந்த பெருமளவு ஆயுதங்கள், வியாங்கொட இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டன. வியாங்கொட இராணுவ முகாம் பகுதி கூட பொதுமக்கள்செறிவாக வாழும் பகுதி தான்.

இதனால் பொதுமக்கள் அதிகம் செறிவாக வாழாத, அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ஓயாமடுவ மற்றும் ரம்பேவ பகுதியில் உள்ள பளுகஸ்வெவ பகுதிகளில், இரண்டு ஆயுதக் கிடங்குகளைக் கட்டத் தீர்மானித்தேன்.

அந்தப் பகுதிகளில், கால் நடைத் திணைக்களத்தின் பழைய பண்ணைகள் இருந்தன. அதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளை மேற்கொண்டிருந்த போது தான், தேர்தலில் நாம் தோல்வியடைந்தோம்.

அதற்குப் பின்னர் இராணுவத் தளபதியாக வந்தவர், குறைந்தளவு மக்கள் வாழும் பகுதிக்கு ஆயுதக் கிடங்குகளை மாற்றும் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தவறியிருந்தார்.

எமது திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தால், கொஸ்கம, வியாங்கொட ஆயுதக்கிடங்குகள் பல மாதங்களுக்கு முன்னரே மூடப்பட்டிருக்கும்.

நான் ஆயுதங்களின் கையிருப்பைக் குறைத்ததால் இழப்புக் குறைவாக இருந்தது. இல்லாவிட்டால், அழிவுகள் மோசமானதாக இருந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# சாலாவ முகாமில் பொசுங்கிப்போன ஆயிரம் கோடி ரூபா வெடிபொருட்கள்



கொஸ்கம- சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிவபத்தில், 1000 கோடி பெறுமதியான வெடிபொருட்கள் அழிந்து போனதாக, கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த வெடிவிபத்தினால், 9 ஆயிரம் தொன் வெடிபொருட்கள் முற்றாக நாசமாகின. இதன் பெறுமதி 10 பில்லியன் (1000 கோடி) ரூபாவாகும்.

இந்த வெடிபொருள் கிடங்கு சரியான நிபுணத்துவத்துடன் அமைக்கப்படவில்லை என்று அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொஸ்கம உப ஆயுதக் கிடங்கு, 1990களின் ஆரம்பத்தில்- முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

போரின் போது, இங்கு 20 ஆயிரம் தொன் வெடிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அதில் பாதி, பின்னர் வியாங்கொட உப ஆயுதக் கிடங்குக்கு மாற்றப்பட்டது என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-10)

# 10 வீத வெடிபொருட்களே ஆயுதக்கிடங்கில் இருந்தன

## மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க விளக்கம்

(கொழும்பு)

கொஸ்கம- சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் வெடிவிபத்து ஏற்பட்ட போது, 10 வீத வெடிபொருட்களே அங்கு இருந்ததாக இராணுவத்தின், மேற்குப் பிராந்திய படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம்செய்தியாளர்களிடம் விளக்கமளித்த அவர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி வரை ஆயுதக் கிடங்கில் வெடிப்புகள் இடம்பெற்றன. தற்போது அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. ஆனால ஒரு கி.மீ. சுற்றளவுள்ள பிரதேசத்துக்குள் பொதுமக்கள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

போர் நடந்த போது, கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்ட ஆயுதங்களை களஞ்சியப்படுத்துவதற்குப் பொருத்தமான இடமாக, கொஸ்கம இராணுவ முகாமே இருந்தது. இங்கிருந்தே ஏனைய பகுதிகளுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டன.

போர் முடிந்த பின்னர் அங்கிருந்த ஆயுதங்கள் ஏனைய பகுதிகளுக்கு மாற்றப்பட்டு வந்தன. வெடிப்பு நிகழ்ந்த போது, 10 வீதமான ஆயுதங்களே அங்கு எஞ்சியிருந்தன. இன்னும் ஆறு மாதகாலத்தில், இவை வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கும்.

இந்த விபத்தினால் சாலாவ இராணுவ முகாமின் பிரதான கட்டடம் மற்றும் ஆயுதக் கிடங்கு என்பன முற்றாகவே அழிந்து போயுள்ளன. சாலாவ இராணுவ முகாமுக்குள் வேறு எந்த உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

அனைத்துலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான முறைப்படியே ஆயுதக் கிடங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த விபத்துக்கான நேரடிக் காரணத்தை உறுதியாக இப்போது கூற முடியவிட்டாலும்; மின் இணைப்பில் ஏற்பட்ட ஒழுக்கு, அல்லது மின்னல் தாக்கம் காரணமாக இது நேரிட்டிருக்கலாம்.

இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுககவுள்ளனர். விசாரணைகளின் முடிவிலேயே காரணத்தைக் கூறக்கூடியதாக இருக்கும்.

இந்த விபத்தில் சேதமடைந்த வீடுகளை மீளக்கட்டிக் கொடுக்கும் பொறுப்பை இராணுவத்தினர் ஏற்றுள்ளனர்.

ஏனைய பகுதிகளில் உள்ள ஆயுதக் கிடங்குகளையும் ஆய்வு செய்வதற்கு இராணுவத் தளபதி சிறப்புக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

இராணுவ முகாம்கள் மாத்திரமன்றி கடற்படை மற்றும் விமானப்படை முகாமகளில் உள்ள ஆயுதக் கிடங்குகளும் ஆய்வு செய்யப்படும்.

வெடித்துச் சிதறிய ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களின் பாகங்களை இராணுவத்தினர் சேகரித்து வருவதுடன், அயலில் உள்ள மக்களின் வீடுகள் மற்றும் காணிகளைச் சுத்தப்படுத்தும் பணிகளையும் இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# மீட்புப் பணியின் போது வெடித்து சிதறிய குண்டு


கொஸ்கம - சாலாவ இராணுவ முகாமில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள குப்பைகளை அகற்றுதல் மற்றும் பாதிப்புக்குள்ளான வீடுகளை சுத்தம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் படையினரால் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது நேற்று குண்டு ஒன்று வெடித்தமையால் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த வெடிப்பு சம்பவத்தின் போது காயமடைந்த வர் ஹோமாகமை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராணுவ முகாமில் இடம்பெற்ற தீப்பரவல் மற்றும் குண்டு வெடிப்பினால் இராணுவ முகாமிற்கு 500 மீற்றர் தூரம் வரை உள்ள பிரதேச மக்கள் வெளியேற்றப்பட்டதுடன், தற்போது அவர்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஜயந்த ஜயவீர தெரிவித்துள்ளார். (இ-10)

# கோபா அமெரிக்க கால்பந்தாட்டம் சிலியை வென்றது ஆர்ஜென்டினா



கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் பிரிவு டிக்கான போட்டியில் ஆர்ஜென்டீனா அணி, சிலியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தங்களது கணக்கைத் தொடங்கியது.

போட்டியின் ஆட்டநாயகனான ஏஞ்சல் டி மரியா, கொன்சாலோ ஹிகுவெய்ன், எவர் பனேகா ஆகிய வீரர்கள் ஆர்ஜென்டீன அணியின் தாக்குதல் ஆட்ட சுமையை சுமந்து அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றனர்.

மெஸ்ஸி காயத்திலிருந்து குணமடைந்து கொண்டிருப்பதால் இந்தப் போட்டியில் ஆடவில்லை. அடுத்த போட்டியில் ஆடுவார் என்று கூறப்படுகிறது.

மெஸ்ஸிக்குப் பதிலாக ஆடிய நிகலஸ் கெய்டன், டி மரியாவுடன் இணைந்து சக்தி வாய்ந்த கூட்டணி அமைத்தார்.

ஆட்டம் தொடங்கிய 2ஆவது நிமிடத்திலேயே டி மரியாவின் கிராஸை கெய்டன் தலையால் கோலை நோக்கி அடிக்க அது மேல் பாரைத் தாக்கியது.

8ஆவது நிமிடத்திலும் கெய்டன், டி மரியா கூட்டணி கோல் நோக்கி அச்சுறுத்தல் மேற்கொண்டது.

ஆனால் டி மரியா, பனேகா இருவரது கோல்களும்தான் ஆர்ஜென்டீனாவுக்கு வெற்றி தேடித் தந்தது.

ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் பனேகா அடித்த பந்தை எடுத்த டி மரியா அதனை கோலாக மாற்றினார்.

சிலி கோல் காப்பாளர் கிளாடியோ பிரேவோ இன்னும் கொஞ்சம் முயன்று தடுக்க முனைப்பு காட்டியிருக்கலாம். டி மரியாவின் பாட்டி சில மணிநேரங்களுக்கு முன்னர் தான் உலகை விட்டு பிரிந்தார்.

அவருக்கு அர்ப்பணிப்பு செய்யும் விதமாக டி மரியா இந்த கோலை அடித்தவுடன் சில செய்கைகளைச் செய்தார், பிற்பாடு ஆட்டம் முடிந்த பிறகான நேர்காணலில் டி மரியா தன் பாட்டிக்காக கண்ணீர் சிந்தினார்.

முதல் கோலுக்கு 6 நிமிடங்கள் கழித்து நடுக்களத்தில் பந்தை அற்புதமாகச் சேகரித்த டி மரியா, சிலி தடுப்பாட்ட வீரர்களை கடந்து பனேகாவிடம் பந்தை தள்ளி விட்டார், பனேகா அதனை கோலாக மாற்றினார். ஆனால் இது சிலி வீரர் இஸ்லாவின் காலில் பட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது.


சிலியை பொறுத்தவரை முதல் பாதியில் 25ஆவது நிமிடத்தில் பனேகா ஏறக்குறைய சிலிக்கு ஒரு கோலை விட்டு கொடுத்திருப்பார். ஆனால் ரமிரோ மோரி சரியான தருணத்தில் வந்து தடுத்து காப்பாற்றினார்.

இதற்கு 5 நிமிடங்கள் கழித்து பனேகா மீண்டும் ஒரு பெரிய தவறிழைக்க, அதாவது மோசமான பாஸ் ஒன்றை ஆட அதனை சிலி வீரர் மார்செலோ டயஸ் பந்தை எடுத்து சிலபல விரைவு கதி பாஸ்களுக்குப் பிறகு அலெக்சிஸ் சான்சேஸ் கோல் அடிக்க வாய்ப்பு பெற்றார், ஆனால் அவரது ஷாட்டை ஆர்ஜென்டின கோல் காப்பாளர் செர்ஜியோ ரொமீரோ தடுத்தார்.

இந்தத் தடுப்பு திருப்பு முனையாக அமைந்தது. அதே போல் இடைவேளைக்குப் பிறகு சிலி வீரர் கொன்சாலோ ஜராவின் தலையால் ஆடிய ஷாட் கோல் போஸ்டின் மேல் பகுதியைத் தாக்கியது.

93ஆவது நிமிடத்தில்தான் சிலி வீரர் ஜோஸ் பெட்ரோ ஒரு கோலை அடித்தார்.

இதிலும் ரொமீரோ தன்னை



சரியாக நிறுத்திக் கொள்ளாததால், கோல் இடம் காலியாக இருந்தது. ஃப்ரீ கிக் ஒன்றை பதில் வீரர் ஜோஸ் பெட்ரோ தலையால் முட்டி கோலை அடித்தார். ஆனால் இது ஆறுதல் கோலாகவே அமைந்தது.

இதே பிரிவில் மற்றொரு ஆட்டத்தில் பனாமா அணி பொலிவியா அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆர்ஜென்டீனாவுக்கு கடினமான குரூப் பிரிவு போட்டி சாதகமான வெற்றியுடன் முடிந்திருப்பதால் பொலிவியா, பனாமா அணிகளுக்கு எதிரான ஆட்டமும் ஆர்ஜென்டீனாவுக்கு சாதகமாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதேபோல் சிலி அணியும் பனாமா, பொலிவியா அணிகளை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேற பார்க்கும் என்று கூறலாம். (க)

# அதிக ஊதியம் பெற்ற வீராங்கனை ஷரபோவாவை பின்னுக்கு தள்ளிய செரீனா



விளையாட்டு துறையில் உலகளவில் அதிகம் ஊதியம் பெற்ற வீராங்கனைகளின் பட்டியலை முன்னணி பத்திரிகையான போர்பஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதில் கடந்த 11 வருடங்களாக முதலிடத்தில் இருந்த ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவாவை பின்னுக்கு தள்ளி அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியமஸ் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

சமீபத்தில் பாரிஸில் நடந்த பிரெஞ்ச் ஓபன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் செரீனா, முருகுஸாவிடம் தோல்வியடைந்து பட்டத்தை தவறவிட்டார் என்பது நினைவுக்கூரத்தக்கது. உலகளவில் விளையாட்டு துறையை சார்ந்த வீராங்கனைகள் விளையாட்டு மூலமாகவும், விளம்பரங்கள் மூலமாகவும் சம்பாதிக்கும் பணத்தை வைத்து யார் அதிகம் சம்பாதிக்கிறார்கள் என்ற பட்டியலை போர்பஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதில் கடந்த 12 மாத கணக்கின்படி டென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் செரீனா வில்லியம்ஸ் 28.9 மில்லியன் டொலர் வருமானம் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

ரஷ்யாவின் மரியா ஷரபோவா 21.9 மில்லியன் டொலருடன் பின் தங்கியுள்ளார்.

சமீபத்தில் மரியா ஷரபோவா ஊக்க மருந்து சோதனையில் சிக்கியதால், முக்கிய ஸ்பான்சர்கள் அவரை விலக்கி விட்டதே அவரது வருமானம் குறைந்ததற்கு முக்கிய காரணம் என கூறப்படுகிறது. (க)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 05
**ஆதன இலக்கம் :- 70/2 (புதிய இலக்கம்)**
**விளாத்தியடி வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/125**

வட்டாரம் 05 . விளாத்தியடி றோட், ஆதனஇலக்கம் 70/2 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள ( உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை **"சாமிச்சாட்டி"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனமானது ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த கந்தையா துரைராசா பெண் சரோஜினிதேவி ஆகிய இவர்களால் கொக்குவில் தாவடி தெற்கைச்சேர்ந்த குணசிங்கம் தயாபரன் பெண் ஜெயவதனி என்பவர்களுக்கு சீதன உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 756 ஆம் இலக்க 2003.06.26 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு. **K**. கனகசபை அவர்களால் வரையப்பட்ட 6500 இலக்க 2016.05.21 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது **"சாமிச்சாட்டி"** நிலப்பரப்பு 01 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசிங்கம் தயாபரன் பெண் ஜெயவதனி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**

(C-4832)


# பயிற்சியாளர் நம் கிரிக்கெட் கலாசாரத்தை புரிந்துகொள்பவராக இருக்க வேண்டும் – தோனி

இந்திய கிரிக்கெட் அணிக்கான பயிற்சியாளர் தேடுதல் வேட்டை தொடங்கியுள்ள நிலையில் பல பயிற்சியாளர்களுடன் பணியாற்றிய அனுபவம் பெற்ற தோனி தன் கருத்தை இது குறித்து கூறியுள்ளார்.

லால்சந்த் ராஜ்புத், கிரெக் சப்பல், கேரி கர்ஸ்டன், டங்கன் பிளெட்சர், ஸ்ரீபன் பிளெமிங், ரவிசாஸ்திரி என்று ஏகப்பட்ட பயிற்சியாளர்களுடன் சுமுகமாக பணியாற்றியுள்ள இந்திய அணித்தலைவர் தோனி, புதிய பயிற்சியாளர் இந்திய கிரிக்கெட் கலாசாரத்தைப் புரிந்து கொள்பவராக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இது குறித்து சிம்பாப்வே தொடருக்கு முந்தைய சந்திப்பில் செய்தியாளர்களிடம் கூறும்போது, கம்யூனிகேஷன் ஒரு பெரிய பிரச்சினை இல்லை. புதிய வீரர்களிடத்தில் ஆங்கிலமும் பெரிய இடையூறாக இருந்ததில்லை.

ஹிந்தி தெரிந்திருப்பது ஒரு அளவுகோல்தான். ஆனால் அதுவே ஒரே அளவுகோல் அல்ல, மொழி ஒரு பிரச்சினையல்ல, நம் கிரிக்கெட் கலாசாரத்தை புரிந்து கொள்பவராக அவர் இருக்க வேண்டும். சிறந்தவரை தேர்வு செய்ய வேண்டும். சிறந்த தெரிவை மேற்கொள்ள வேண்டும், முக்கியமான விடயம் என்னவெனில் நம் பண்பாட்டையும், திறமைகளை வளர்த்தெடுப்பதையும் புரிந்து கொள்பவர் யாராக இருந்தாலும் சரி ஆங்கிலம், ஹிந்தி என்பதல்ல. இதற்கு முன்பாக நாம் சிறந்தவர் என்று கணித்தவர்கள் அனைவருமே நம் பண்பாட்டை புரிந்தவர்களாகவே இருந்துள்ளனர் என்று தெரிவித்தார் தோனி.

சிம்பாப்வே தொடர் குறித்து தோனி கூறும்போது, சிம்பாப்வே அணி சில வேளைகளில் சவால்களை அளிக்கும் அணி என்பதில் சந்தேகமில்லை. துடுப்பாட்ட வரிசையை அமைப்பதில் நம் சவால் உள்ளது. வேறுபட்ட பல வீரர்களுடன் ஆடுவது ஒரு வித்தியாசமான அனுபவமாக உள்ளது. நான் எனது ஆட்டத்தை மகிழ்வுடன் ஆடுகிறேன், தலைமைத்துவ விவகாரங்களை பிசிசிஐ கவனித்துக் கொள்ளும் என்று ஹோலி அனைத்து வடிவங்களுக்குமான தலைவராக்கப்பட வேண்டும் எனறு ரவி சாஸ்திரி கூறியது குறித்த கேள்விக்கு தோனி பதிலளித்தார்.

ஏற்கெனவே தோனி, பயிற்சியாளர் பொறுப்பிற்கு மைக் ஹஸ்ஸியை பரிந்துரை செய்ததாக செய்திகள் வெளியாகின. ஆனால் ஹஸ்ஸி அது குறித்த இறுதியான முடிவு எதையும் தெரிவிக்கவில்லை, தற்போது அவருடைய நிலைப்பாடு என்னவென்பதும் தெரியவில்லை.

சந்தீப் பாட்டீல், ரவி சாஸ்திரி பயிற்சியாளர் பொறுப்பிற்கு விண்ணப்பித்துள்ளனர், அயல்நாட்டு விண்ணப்பங்கள் குறித்த தகவல்கள் ஏதுமில்லை.

இந்நிலையில் புதிய பயிற்சியாளர் இந்திய கிரிக்கெட் கலாசாரத்தினை புரிந்து கொள்பவராக இருப்பது முக்கியம் என்று தோனி கூறியுள்ளார். (க)

# இவ்வருட இறுதிக்குள் மீள்குடியேற்றம் பூர்த்தி

யுத்தத்தால் இடம்பெயர் ந்த அனைத்து மக்களும், இவ்வருட இறுதிக்குள் மீள் குடியேற்றப்படுவர் என அமைச்சர் மனோ கணேசன் தெரி வித்துள்ளார். மீள்குடியேற்றம் தொடர்பில் வெளிநாட்டு ஊடகமொ ன்றிற்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். குறிப்பாக இராணுவத்தின் கட்டுப்பா ட்டில் இருக்கும் காணிகளை விடுவிப்பதில் அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருவ தாகவும், விரைவில் அவை நிறைவுபெற்று மீள்குடியேற் றம் பூர்த்தியாகுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டி லுள்ள காணிகள் தொடர் பான விபரங்கள், கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கைய ளிக்கப்பட்டது. எதிர்வரும் 18ஆம் திகதி ஜனாதிபதி வட க்கிற்கு விஜயம் செய்ய உத் தேசித்துள்ள நிலையில், அன றைய தினம் மேலும் காணி கள் விடுவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-10)


## தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறி

மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிநெறிகள்.
விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறி

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 ( 4 மாத கால பயிற்சிநெறி)
   க.பொ.த. சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16-24 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4
   ஒரு வருட கால பயிற்சிநெறி. இதில் 6 மாதகாலம் தொழிலுடனான பயிற்சி (On-the-job training) வழங்கப்படும். இப்பயிற்சி நெறியின் பின்னர் பல்கலைக் கல்லூரி, விவசாயக் கல் லூரி மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றில் NVQ மட்டம் 5-6 ஐ தொடரமுடியும்.

NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாயப்பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். 16-26 வயதிற்குட்பட்டவராக இருத்தல்.

பயிற்சிக்கட்டணம் இலவசம்

பயிற்சிநெறியில் சேர விரும்புவோர் 15.06.2016 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். (4873)

மேலதிக விபரங்களுக்கு: அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம். 021 224 1420


## கண்ணீர் அஞ்சலி

"இறுதி நாள் உயிர்த்தெழுதலின் போது அவனும் உயிர்த்தெழுவான்"
(யோவான் 11: 24)



நெஸ்லே கம்பனியின் வடமாகாண விற்பனை அதிகாரி

அமரர்
A.நிர்மலராஜன்
(யூலி)

அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 527,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

TCT Multi Trade Center

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 21 |
| 03 | 05 |
| 1923 | 2015 |



அமரர் திரு. சுப்பிரமணியம்
வைரமுத்து (விதானையார்)

அன்னாரின் முதலாம் ஆண்டு நிறைவு நாளை 09.06.2016 அன்று மகனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இ-4724)

ஊறணி,
வல்வெட்டித்துறை.

தகவல்: விஜயகுமார் (மகன் ஆசிரியர்- 077 102 8376)

## இராசி பலன்

8.06.2016
(வைகாசி 26, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 3.45 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 11.37 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
நமிநந்தி அடிகள், சேக்கிழார் குருபூசை, சதுர்த்தி விரதம்

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, புத, சுக் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம் , பூராடம் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்:** ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும் நாள், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளில் அக்கறை காட்ட வேண்டிய நாள், நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், பிள்ளைகளால் சுப விரயங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சுபகாரியச் செலவுகள் கூடும் நாள்.

**கன்னி:** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் வீடு தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழிலை முன்னேற்றும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, விருந்தினர் வருகையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு தேவை.


**மகரம்:** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மீனம்:** வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.

# காணாமற்போனவர்கள் குறித்து அரசு பொறுப்புக்கூற வேண்டும்

## யாழில் நேற்று கையெழுத்துப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

**தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தியும் முன்னிலை சோஷலிச கட்சியின் தலைவர் குமார் குணரத்தினத்தின் குடியுரிமையை அங்கீகரிக்க வலியுறுத்தியும், காணாமல் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் தொடர்பில் தெளிவான பொறுப்புக்கூறலை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தியும் கையெழுத்து போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

இந்த கவனயீர்ப்பு போராட்டமானது முன்னிலை சோசலிஸ கட்சி மற்றும் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். பிரதான பேருந்து நிலையத்தின் முன்பாக நடைபெற்றது.

தமிழ் மக்களது பல பிரச்சினைகள் தொடர்பாக இன்றுவரை எந்தவொரு அரசாங்கமும் தீர்க்கமான ஓர் முடிவை அல்லது தீர்வை பெற்றுதரவில்லை.

தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் உரிய தீர்வு வழங்கப்படும் என கூறி ஆட்சிக்கு வந்த நல்லாட்சி என கூறும் அரசும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் கடந்த 2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மனித வுரிமை செயற்பாட்டாளராக இருந்த லலித் மற்றும் குகன் ஆகியோர் மனிதவுரிமை தினத்திற்கு முன்னதாக காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் இவர்கள் காணமால் ஆக்கப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் தெளிவான பொறுப்பு கூறலை வழங்கவில்லை.

வடக்கு கிழக்கில் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளிலே தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் யுத்த காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் காணாமல் போனோர் தொடர்பாக எதுவிதமான நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

.குறிப்பாக இது தொடர்பில் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள போதும் அதனாலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. இந் நிலையில் மேற்குறித்த பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் உறுதியானதும் தெளிவானதுமான தீர்வை பெற்றுத்தர வேண்டும். கடத்தப்பட்டவர்கள் தொடர்பிலும் உண்மையான தகவல்களை தெளிவுபடுத்த வேண்டும்.

மேலும் நாடு கடத்தப்பட்டு புதிய அரசின் காலத்தில் நாடு திரும்பிய முன்னிலை சோஷலிச கட்சியின் தலைவர் குமார் குணரத்தினத்தின் குடியுரிமையை ஏற்றுக் கொள்ள கோரியும், வலியுறுத்தியே இக் கையெழுத்து போராட்டத்தை நடத்தியதாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இப் போராட்டத்திற்கு சகல மக்களும், அரசியல் அமைப்புக்களும் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தன.

மேலும் குறித்த போராட்டம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை யாழ்.நகரில் முன்னெடுக்கப்பட்டிருந்ததோடு, இப்போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு இறுதியில் கொழும்பில் பாரிய கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு அங்கு வைத்து கையெழுத்திடப்பட பதாகைகள் வெளியிட்டு வைக்கப்படும் என போராட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (இ-4)





படங்கள்:-உ.சாளின்



*சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு மற்றும் யாழ் மாவட்ட திட்டமிடல் பிரிவு இணைந்து சிரமதானப் பணிகளை கடந்த ஒரு வாரமாக மேற்கொண்டிருந்தன. இதன் போது கிராம சேவகர் பிரிவுகளான ஜே/80,ஜே/81,ஜே/82 பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள்,அசுத்தமான இடங்கள் என்பன இனங்காணப்பட்டு சுத்தமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வண்ணார்பண்ணைப்பகுதி பொதுமக்களும் இச்செயற்பாட்டிற்கு தங்கள் ஒத்துழைப்புகளை வழங்கினர். காலை 8.30 மணிமுதல் முற்பகல் 11.30 மணி வரை இச்சிரமதானப் பணிகள் நடைபெற்றன. இச்சிரமதான நடவடிக்கையில் யாழ்.பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரி உப பரிசோதகர் சமன் குமார கலந்து கொண்டார். குறித்த சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*(படங்கள்:- உ.சாளின்)*

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டன

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான உதவிகள் நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வலிகாமம் பிரதேசத்தில் நலன் புரி நிலையங்களில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு மாதாந்தம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் சுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக நேற்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகாம்களிலுள்ள 20 பெண்களுக்கு கோழிக்கூடு, சிற்றுண்டி தயாரித்தல், பெட்டிக் கடை வியாபாரம், கைவினைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறிமோகன் மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்துள்ள யூடிடுபோஸ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ)







வரலாற்றுச் சிறப்பு மிக்க வரணி சிட்டிபுரம் அம்மன் கோவில் 12 ஆவது திருவிழா கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றபோது வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே கலந்து கொண்டார். திருவிழா உபயகாரர்களின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற ஆளுநர் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் திருவிழா உபயகாரர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தை சேர்ந்த 212 பிள்ளைகளுக்கு ஒரு தொகை பணம் வைப்பிலிடப்பட்ட வங்கியின் சேமிப்பு புத்தகங்கள் வழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடமாகாணசபை உறுப்பினர்களான எஸ்.அகிலதாஸ், வே.சிவயோகம், எஸ்.சுகிர்தன், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம;



# நீர்வேலி வடக்கு, சங்கணவைப்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பழைய அம்பாள்) தேவஸ்தான மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்- 08.06.2016

### பிரதிஷ்டா பிரதம குருவின் உள்ளத்திலிருந்து

நீர்வேலிப்பதியில் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வரமளித்து அபயம் அளித்து காத்து அருளுகின்ற எல்லாம் வல்ல ஆதி நாயகி விஸ்வகுலசுந்தரி பராசக்தி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும் புதிதாக குபேரதிசையில் அமைக்கப்பட்ட கோபுரத்திற்கும் குடமுழுக்குப் பெரும் சாந்திப் பெருவிழா நடைபெறுகின்ற இந்த வேளையில் ஊரும் உலகமும் வளம் பெற்று மக்கள் சகல செளபாக்கியங்களுடன் வாழ சர்வலோக நாயகியின் பழைய அம்பாளின் பாதம் பணிந்து ஆசி கூறி அமைகின்றேன்.

**''அன்னை அருள் அகிலமெல்லாம் பரவட்டும்''**

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**
**சர்வே ஜனகா சுகினோ பவந்து**

**கும்பாபிஷேக பிரதம குரு**
**சிவஸ்ரீ யோ. சுபாஸ்கரக்குருக்கள்**
**அத்தியடிப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு.**

### அருளாசிச் செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியான வள் தம்மை வழிபடும் அடியார்களின் குறைபோக்கி நிறைவாழ் வருளும் நோக்கில் நீர்வேலிப் பதியிலே ஸ்ரீ இராஜராஜேஸ் வரி அம்பாளாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அருள்மிகு அம்பிகையின் மஹாகும்பாபிஷேகம் இன்று சிறப்புற நிகழ்வதையிட்டும் அந்த மஹாகும்பாபிஷேக மலருக்கு அருளாசியுரை வழங்கு வதையிட்டும் நாம் பேருவகையடைகின்றோம். அருள்மிகு அம்பிகை க்கு இன்று காலை நிகழ்கின்ற குடமுழுக்கு விழாவெனும் பெருஞ்சாந்தி மஹாகும்பாபிஷேகமானது சிறப்புற நிகழ அம்பிகையின் அருள் வேண்டி வாழ்த்தி, ஆசிகள் நல்கி மனமார இறும்பூதெய்தி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

நீர்வேலி வாழ் மக்கள் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவர். இந்த அருள்மிகு ஆலய புனருத்தாரண திருப்பணிக ளைச் செவ்வனே நிறைவேற்றி இன்று கும்பாபிஷேகம் காண்பது இலேசான காரியமல்ல. அந்த ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் இன்னருள் அடியார் பெருமக்களுக்கு பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று அம்பாளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்று அருளாசிகள் வழங்கி உளமார வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர், இரண்டாவது குருமஹா சந்நிதனம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**

### நாடியுன்னைச் சரண்புகுந்தோம் இராஜராஜேஸ்வரியே!

அம்பிகையே ஈஸ்வரியே ஆதிபராசக்தித் தாயே!
அன்புடனே உனைப் பணிந்தோம் அருள்தாருமம்மா!
நம்பிவந்தே உன் கால் பிடித்தோமே நல்லருள் புரிவாயே!
நாடியுன்னைச் சரண் புகுந்தோம் இராஜராஜேஸ்வரியே!
வெம்பி அழுது நிற்கின்றோம் வேதனை தீர்க்கமாட்டாயோ?
வேதங்கள் துதித்து நிற்கும் அன்னபூரணி அன்னையே!
தும்பிமுகனும் தம்பி முருகனும் தோத்தரித்து நிற்கவே
தேடி வந்தோம் தாயே! ஓடி வாராய் எம் முன்னே!

''தெய்வத் தமிழ்ச்சுடர்'' இராசையா ஸ்ரீதரன்

### இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு திருக்குடமுழுக்கு காணவாரீர் அன்பர்களே...

இலங்கைத் திருநாட்டு ஈழப்பரப்பில் செந்தமிழும் செல்நெறியும் செங்கணவன் செம்மதமும் முத்தமிழ் புலமையும் ஒன்றுசேர ஓங்கி வளரும் தாயகமான யாழ்ப்பாண மாவட்டத்தின் வளம்மிகுந்த பூமித் தாயாளாகிய நீர்வேலித் திருமண்ணில் சங்கணவைப் பதியின் கண் கோவில் கொண்டு எழுந்தருளி அடியவர்க்கருளும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்றாகும்.

இற்றைக்கு முந்நூற்றுப்பத்து (310) வருட சரித்திரப் பழைமை வாய்ந்ததாக நீர்வேலி மண்ணிலே தோன்றிய இரண்டாவது ஆலயமாக தொன்மைப் புகழோடு இன்றும் மங்காத பேரொளி வீசிக்கொண்டி ருக்கின்ற நீர்வேலி வடக்கு அருள்மிகு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி ஆலயம் பழைய அம்பாள் எனும் நாமத்தையும் தன்பால் கொண்டது. அற்புதங்கள் நிகழ்த்திய கற்பக வல்லியான அன்னை அசரீரி ஒலியோடு ஒளியும் காட்சிதர பிரசன்னமாகி ஆல்டியாள் என்ற சிறப்பிற்கும் உரியவளானாள்.

ஆரம்பத்தில் சிறிய ஆலயமாக தெற்கு நோக்கிக் காட்சி தந்து படிப் படியாக உயர்ச்சி கண்டு காலமாற்றத்தில் வடக்கு நோக்கி அமர்ந்து நாட்டின் ஸ்திரமற்ற தன்மைகளுக்குள்ளும் அகப்பட்டு மீண்டும் தெற்கு நோக்கிய ஆலயமாக குடமுழுக்குக் கண்டது. நவராத்திரி, திருவெம்பாவை, பங்குனி உத்தரவிழா, வருடாந்தப் பொங்கல், மஹாசிவராத்திரி, அபிராமிப்பட்டர் திருநாள், வசந்தன் கூத்து போன்ற விழாக்களோடு ஒன்றித்திருந்த ஆலயம் அலங்கார உற்சவம் இடம்பெறும் தன்மையாக வளர்ச்சி கண்டு காலப்போக்கில் மஹோற்சவம் நிகழ்த்தக்கூடிய பெரும் ஆலயமாக எழுச்சிகண்டு இராஜகோபுரங்களோடு சித்திரப்பெருந்தேரும் ஊர்ந்து வரும் தேவஸ்தானமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.

கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படவேண்டிய காலங்களில் சிறுசிறு திருப்பணி வேலைகளோடு கும்பாபிஷேக விழாக்கள் நிகழ்த்தப்பட்டு வந்தன. ஆனால் இம்முறை இடம்பெறுகின்ற மஹா கும்பாபிஷேக விழாவானது ஆலய வரலாற்றில் முக்கிய இடம்வகிக்கின்றது. காரணம் அன்னையின்பால் அன்புகொண்ட அடியவர்களின் அயரா முயற்சியாலும் புலம்பெயர் தேசங்களில் வாழுகின்ற அம்பிகை செல்வர்களின் கைகொடுப்பாலும் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹா மண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், பரிவார முகூர்த்தங்களின் ஸ்தலங்கள், பிரதான வாயில் இராஜகோபுரம் என்பன புனர்நிர்மாணம் செய்யப்பட்டதோடு புதிய அங்கமாக அழகிய மணி மண்டபம், அன்னை வலம் வரும் வண்ணப்பூச்சு பதிக்கப்பட்ட உள்வீதி, சுற்றுப்பிரகாரக்கொட்டகை, வடக்கு வாயில் கோபுரம் என்பன சிறப்பிற்குரிய வகையிலே வர்ணம் பூசப்பட்டு அலங்கார ஓவியங்க ளும் வரையப்பட்டு புதிய கொடிஸ்தம்பம் கம்பீரமாய் காட்சிதர எழில்மிகு கலைக் கோவிலாக அமையப்பெற்றது அன்னையின் திருவருளேயாகும்.

இவ்வாலய கர்த்தாக்களாக விளங்கிய ஸ்ரீவிநாயகாச்சாரியார், ஸ்ரீகந்தையா-கணேசையா, வித்தகன்-தெட்சணாமூர்த்தி-கோபால சிங்கம் மற்றும் இவ்வாலயத்தோடு தொடர்புற்ற மூதாதையர்கள் அனைவரும் விண்ணிலிருந்து ஆசிவழங்கி அம்பிகையின் குடமுழுக்கு விழாவை கண்ணாரக்கண்டு ஆராதிப்பார்கள். இப்பெரியவர்களை இத்தருணம் நினைவு கூருகின்றோம்.

காக்கும் அன்னையாக, பரத நாயகியாக, கலைத்தேவியாக இரத்தினகல்பித மந்திர இராஜ சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் பழைய அம்பாள் அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அன்னைக்கு நிகழும் மங்களம் நிறை துர்முகி வருடம் உத்தராயண வசந்த ருது வைகாசி மாதம் 26ஆம்நாள் 08.06.2016 புதன்கிழமை சதுர்த்தித்தியும் புனர்பூச நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 9.45 மணி முதல் 11.10மணி வரையுள்ள சிங்க லக்கின வேளையாகிய இன்றையதினத்தில் அஷ்டபந்தன உத்தம யாக நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இடம் பெறுகின்றது. அன்பு நிறை அம்பிகை அடியார்கள் விழாவில் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவீர்களாக.

அம்பிகையை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்

### கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா...

நீர்வேலி வடக்கு சங்கணவைப்பதியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் மழை பொழிந்து வரும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு (பழைய அம்பாள்) இன்று குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா.

இவ் ஆலயத்தில் கர்ப்பக்கிரகம், வசந்த மண்டபம், பரிவார மூர்த்திகள், பிரகார கொட்டகைகள் என்பன புனருத்தாரணம் செய்யப்பட்டு வடக்கு வாயில் (குபேரவாயில்) இராஜகோபுரமும் மணிமண்டபமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதுடன் புதிய வனப்புமிகு கொடிஸ்தம்பமும் நிறுத்தப்பட்டு ஆலயத்தின் திருப்பணிகள் சிறப்புற நிறைவேறி அழகிய கலைமிகுந்த ஆலயமாகி 08.06.2016 புதன்கிழமை அதாவது இன்றைய தினம் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இப் பெரும் சாந்தி சிறப்புற எல்லா வகையிலும் உதவிய சிவாச்சாரியார்கள், அடியவர்கள், உள்ளூர் மற்றும் வெளியூரில் வாழும் அன்பர்கள், இதர வழிகளிலும் உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறி அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

**அன்னையின் அருட்பணியில் ஆலய பரிபாலன சபையினர்.**

### சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி போற்றி

. ஸ்சைவமும் தமிழும் தருமமும் சிறந்து செழிப்புற்றோங்கும் நீர்வையம்பதியின் சங்கணவைப்பதியில் ஆதி சொரூபமாக, அலங்கார ரூபினியாக பழைய அம்பாள் எனும் தொன்மை மிகு சிறப்புடன் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகப் பெருவிழா அன்னையின் பேரருள் பேற்றால் இன்று மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும் என்பது ஆகம விதிகளில் ஒன்றாகும். இத்தகைய கும்பாபிஷேகங் கள் நடத்தப்படுவதன் மூலமே ஆலயத்தின் பால் எழுந்தருளியிருக்கும் விக்கிரகங்களின் இறை சக்தியும் அருட்சக்தியும் மெருகூட்டப்படுகின்றது, மேன்மையடைகின்றது. மேலும் இவ்வாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வடக்கு வாயிற்புற கோபுரம், தெற்கு வாயிற்புற கோபுரங்கள் இவ்வாலயத்தின் சிறப்பையும் அழகையும் மேலும் மெரு கூட்டுவனவாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற அம்பாளின் திருவருள் கூடியுள்ள வேளையில் எல்லாம்வல்ல ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் அருட்கடாட்சம் அனை வருக்கும் கிடைக்கப் பெற வேண்டி அம்பாளின் பாதார விந்தங்களை பணிந்து போற்றுவோமாக.

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*

திருமதி வனஜா செல்வரட்ணம், பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்.

**அனுசரணையாளர்**

(4889)
Nippon Paint
ஞானம் பெயின்ட்ஸ்
558, 1 ஆம் மாடி, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

பொன் செல்வமகால்
பவானி களஞ்சியம்
இராசவீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி ஸ்ரீ மஹா விஸ்ணு,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுந்தரம் களஞ்சியமும், கைத்தொழிற்சாலையும்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பிரசாந் மரக்காலை
காளி கோவில் வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

மயூரி இரும்பகம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

மதுரா அழகுச்சோலை
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

ஸஸ்மிகா வெதுப்பகம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

ஸ்ரீ ராகவேந்திரா நகைத்தொழிலகம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

# ஆயிரத்து 50 ஏக்கர் மட்டும் மேய்ச்சல் தரவையாக தெரிவு

## 11 ஆயிரம் ஏக்கர் தேவை என்கிறார் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 ஆயிரம் ஏக்கர். மேய்ச்சல் தரவைக்கான நிலம் தேவைப்படும் நிலையில் ஆயிரத்து 50 ஏக்கர் நிலம் மட்டும் மேய்ச்சல் தரவைக்கான நிலமாக இனங்காணப்பட்டு உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதானமாக கால்நடைவளர்ப்பு காணப்படும் நிலையில் மேய்ச்சல் தரவைப் பிரச்சினை முக்கியமாக வுள்ளது.

இந்நிலையில்வனவளத்திணைக் களத்தினூடாக மேய்ச்சல் தரவைகளுக்கான நிலங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட போது 11 ஆயிரம் ஏக்கர் தெரிவு செய்து வனவள பாதுகாப்பு பிரிவினிடம் கோரிய நிலையில் இதுவரை, ஆயிரத்து 50 ஏக்கர் நிலம் மட்டுமே மேய்ச்சல் தரவைக்காக இனங்காணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஏனைய நிலங்களைத் தேடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இனங்காணப்பட்டுள்ள நிலங்களை மேய்ச்சல் தரவைகளாக மாற்றுவதற்கு நிதி தேவைப்படுவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

எனினும் எவ்வளவு தொகை நிதி தேவைப்படும் என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அது தொடர்பிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (2-281)




## 10 மில்லியன் நிதியொதுக்கீட்டில்

# குமுழமுனை - அக்கராயன் வீதி புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பம்



முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தென்னியங்குளம் கிராமத்தினூடாக செல்லும் குமுழமுனை அக்கராயன் வீதியின் புனர் நிர்மாண வேலைகளை நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வீதிக்காக 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி நிதியில் இருந்து, வடக்கு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் 10 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 17 கல்வெட்டுக்களும் 10 கிலோமீற்றர் வீதிக்கு கிரவலிட்டு வாகனப்போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் இப் புனர்நிர்மாணப் பணிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்விற்கு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதம பொறியியலாளர் ஜெகானந்தன், முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் கௌசிகன் ஆகியோரும் அக்கிராமத்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2-312)

# பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்க கோரிக்கை

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் கீழ் காணப்படும் 54 ஏக்கர் வயல் நிலத்தில், பயிர்ச் செய்கையை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்திடம், விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன்குள நீர்ப்பாசனம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே, குறித்த வயல் நிலத்துக்கான நீர்ப்பாசன வாய்க்கால்கள் உருவாக்கப்படவில்லை. அதன் காரணமா கவே, மேற்படி வயல்நிலம், தரிசு நிலமாக காணப்படுகின்றது. கடந்த காலங்களில் நடைபெற்ற விவசாயக் கூட்டங்களிலும் பயிர்ச் செய்கை தொடர்பான கூட்டங்க ளின் போதும், மேற்படி வயல்நிலம் தொடர்பான பிரச்சினை எழுப்பப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த வயல் நிலத்தினை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வெகு விரைவில் இது தொடர்பான தீர்மானமொன்றை எட்டுமாறு, மாவட்ட செயலாளரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

## இரண்டு மில்லியன் செலவில் உணவுக் களஞ்சியம் அமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் யு.என்.ஹபிரட் நிறுவனத்தின் 2.4 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் உணவுக் களஞ்சியம் அமைக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள கோட்டைகட்டியகுளம், புத்து வெட்டுவான் ஆகிய கிராம மக்கள் விவசாயத்தை தங்களின் பிரதான வாழ்வாதாரமாக கொண்டவர்கள். இந்த இரண்டு கிராமங்களிலும் வசிக்கும் 200 விவசாய குடும்பங்கள் தங்கள் உற்பத்திகளை சேமிக்க முடியாது சிரமப்பட்டனர். இது தொடர்பில் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டதின் அடிப்படையில், யு.என். ஹபிரட் நிறுவனத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, களஞ்சியசாலை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஐ.நா.சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் இன்னும் நிறைவேற்றவில்லை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

ஐ.நா. சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் எட்டு மாதங்கள் கடந்த நிலையில் கூட இன்னும் நிறைவேற்றவில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை மாலை இடம்பெற்ற வவுனியா, புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் 16ஆவது ஆண்டு விளையாட்டு விழா பரிசளிப்பு நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

எமது மக்களின் சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, கல்வி விடயம் என்பவற்றிலும் இந்த விளையாட்டுக் கழகங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இதற்கு அப்பால் இந்த நாட்டில் ஒரு ஆட்சி மாற்றத்தை நாம் கொண்டு வந்திருந்தாலும் கூட எமது பிரதேசங்களில் பலர் இன்றும் கண்ணீர் வடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆகவே இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாங்கள் கைகொடுப்பதாக இருந்தால் இளைஞர்களுடைய பங்கு எதிர்காலத்தில் மிக அவசியம்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் கூட எமது மக்களுக்கான அபிவிருத்திகள், ஒரு நிரந்தர தீர்வு என்பவற்றை பெற்றுக் கொடுக்க நாம் இன்னும் பல மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனை அடைவதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவைகள் இருக்கின்றன.

குறிப்பாக இந்த அரசாங்கம் ஐ.நா. சபைக்கு வழங்கிய வாக்குறுதியை கூட இன்றைக்கு எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னும் நிறைவேற்றவில்லை. அதேபோல் உள்நாட்டில் அரசியல் அமைப்பு தொடர்பாக மக்கள் கருத்துக்கள் பெறப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும் அதில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அபிப்பிராயங்கள், கருத்துக்களுக்கு மாறான அறிக்கையைத் தான் இன்று சமர்ப்பித்துள்ளார்கள்.

ஆகவே, அரசியல், பொருளாதார ரீதியாக நாங்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமைதான் தொடர்ந்து இருக்கிறது.

இந்த நிலைமைகளை மாற்றியமைப்பதாக இருந்தால் எங்களுக்கு என்று நிரந்தரமான ஒரு தீர்வு வர வேண்டும். அதற்காக நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (2-250)

# பொன்மணி அறக்கட்டளை நிதியத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



( சோலைநகர் )

கிளி/ புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு பொன்மணி அறக்கட்டளை நிதியத்தால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் நலன்கருதி ஒரு தொகை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் வகுப்பறை திருத்த வேலைக்கென 25 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

கிளி/ இரத்தினபுரத்தில் அமைந்துள்ள விசேட தேவையுடையோர் தொண்டு நிறுவன காரியாலயத்தில் வைத்து பொன்மணி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் குமாரசிங்கம் முத்துக்குமார் கடந்த முதலாம் திகதி உதவிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கிளி.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் 15 பேருக்கு பொன்மணி அறக்கட்டளை நிதியத்தால் 15 துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டதுடன் புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் தங்கவேலு கண்ணபிரான் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள். மாணவர்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-309)



வரலாற்று சிறப்பு மிக்க புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் நடைபெற்ற போது... (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தீவிரக் கண்காணிப்பிற்குள் மத்திய ஆயுதக் களஞ்சியம்

(கொழும்பு)

**கொஸ்கம -சாலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தை அடுத்து, வியாங்கொடவில் உள்ள மத்திய ஆயுத மற்றும் வெடிபொருள் களஞ்சியத்தின் தரத்தை இலங்கை இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் பரிசோதித்தனர்.**

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் நேற்று வியாங்கொட ஆயுதக் களஞ்சியப் பகுதிக்குச் சென்று ஆய்வு செய்ததுடன், அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை செய்துள்ளார்.

வியாங்கொடவில் உள்ள முன்னைய வேரெக்ஸ் ஆடை நிறுவனச் சுற்றாடலில் அமைந்துள்ள, மத்திய ஆயுத மற்றும் வெடிபொருள் களஞ்சியத்தில் சுமார் 15 ஆயிரம் தொன் வெடிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இதனைச் சுற்றி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனினும், ஆயுதக் கிடங்குகள் அனைத்தும் உரிய தரத்துடனேயே பராமரிக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார். (இ-10)

## சுகாதார தொண்டர்கள் நேற்றும் போராட்டம்



நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் நேற்று இரண்டாம் நாளாக யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். தமக்கான பதில் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## யாழில் 31ஆயிரத்து 196 மலசலகூடங்கள் தேவை

யாழ்.மாவட்டத்தில் 31ஆயிரத்து 196 மலசலகூடங்கள் அமைக்க வேண்டிய தேவையுள்ளதாக யாழ்.மாவட்ட புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குறித்த புள்ளி விபரத்தின் அடிப்படையில் புதிதாக 30 ஆயிரத்து 626 மலசலகூடங்களும் விசேட தேவைப்பாடுடையவர்களுக்கு 570 மலசலகூடங்களும் திருத்தம் செய்யப்படவேண்டிய நிலையில் 2 ஆயிரத்து 682 மலசலகூடங்களும் உள்ளன.

அந்த வகையில் மீளக்குடியமர்ந்தோரில் புதிய மலசலகூட தேவையுடையவர்கள் 9 ஆயிரத்து 926 பேரும் விசேட தேவைப்பாடுடையவர்கள் 421 பேரும் திருத்தம் மேற்கொள்வதற்காக ஆயிரத்து 670 பேரும் பதிவுசெய்துள்ளனர். மீளக்குடியமரவுள்ளோரில் புதிய மலசலகூட தேவையுடையவர்கள் 9 ஆயிரத்து 341 பேரும் விசேட தேவைப்பாடுடையவர்கள் 5 பேரும் திருத்தம் மேற்கொள்வதற்காக 13 பேரும் பதிவு செய்துள்ளனர்.

வறுமையான குடும்பங்களில் புதிய மலசலகூட தேவையுடையவர்கள் 11 ஆயிரத்து 359 பேரும் விசேட தேவைப்பாடுடையவர்கள் 114 பேரும் திருத்தம் மேற்கொள்வதற்காக 999 பேரும் விண்ணப்பித்துள்ளதாக மேற்குறித்த புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கிறீன்கிறாஸ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறிய வர்த்தக நிறுவனங்கள் தமது நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய கணக்கு முறைமைகளில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் தொடர்பாகவும் அவற்றை மிக இலகுவாக பேணக் கூடிய வழிவகைகள் தொடர்பாகவும் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தால் மேற்படி பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5 மணி வரையும் மறுநாள் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரையும் மேற்படி பயிற்சிப் பட்டறை இடம்பெறும்.

முற்றுமுழுதாக தமிழ் மொழியில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் வர்த்தகர்கள் பங்குபற்றுவதன் மூலம் அதிகமான பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்பாக யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலதிக தொடர்புகளுக்கு 021 222 8593 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (இ-5)

## மறிச்சிகட்டியூடாக புத்தளம் செல்லும் பிரதான வீதி சேதம்; மக்கள் அவதி

(பனிக்கன்குளம்)

மன்னார் மறிச்சிகட்டியில் இருந்து வில்பத்து ஊடாக இலவங்குளம் செல்லும் பிரதான வீதி தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ளமையினால் அப்பாதையூடாக புத்தளம் உட்பட ஏனைய இடங்களுக்குச் செல்லும் மக்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.



மறிச்சிகட்டியில் இருந்து இலவங்குளம் வரை சுமார் 30 கிலோ மீற்றர் தூரம் கொண்ட குறித்த வீதி கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் சேதமடைந்துள்ளது. தொடர்ச்சியாக பெய்து வரும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக குறித்த வீதி சேதமடைந்துள்ளதுடன் வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதி ஊடாக செல்லும் மூன்று பாலங்கள் உடைந்து சேதமாகியுள்ளதாகவும் சில இடங்களில் மோட்டார் சைக்கிள்கள் கூட செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த வீதியினூடான போக்குவரத்துக்கள் தொடர்ச்சியாக தடைப்படும் சந்தர்ப்பத்தில் வடக்கு முஸ்ஸிம்களின் மீள்குடியேற்றத்தில் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்படும் என வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்ற அமைப்பு கவலை தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுத்து வீதியை செப்பனிட்டுத்தர வேண்டுமென பயணிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

## வடக்கின் இலவச அம்புலன்ஸ் சேவையை தரமுயர்த்தி முதலுதவி பயிற்சிகள் வழங்க முடிவு

வடக்கின் இலவச அம்புலன்ஸ் சேவையை தரமுயர்த்த சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகப் பிரிவின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இலங்கையிலே முதன் முதல் அரச இலவச அம்புலன்ஸ் சேவையானது கடந்த ஜனவரி மாதம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. இவ் அம்புலன்ஸ் சேவையை மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சுகாதார அமைச்சரின் முயற்சியினால் ஏற்படுத்தப்பட்ட அம்புலன்ஸ் சேவையை மேலும் வினைத்திறனுடன் செயற்படுத்தவும் மக்களுக்கு உரிய சேவையை மேலும் அதிகமாக வழங்கவும் லண்டன் அம்புலன்ஸ் சேவை நிலையத்தினருடன் தொடர்புகொண்டு அவர்கள் மூலம் சில புதிய மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கடந்த வாரம் லண்டன் அம்புலன்ஸ் சேவையின் பணிப்பாளர் தரத்திலான ஒருவர் வடக்கிற்கு விஜயம் செய்து சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தமது திட்டத்தை கையளித்துள்ளதோடு, இச் சேவையில் ஈடுபடும் அனைத்து ஊழியர்களுக்கும் முதலுதவி தொடர்பான பயிற்சிகளையும் அதற்கான உபகரணங்களையும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)




## பகல் வேளையிலும் வீதியை நோக்கி படையெடுக்கும் யானைக்கூட்டங்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம்-முல்லைத்தீவு வீதியில் காட்டு யானைகள் பெருமளவில் உலாவித் திரிவதனால் பாதையில் செல்பவர்கள் மிகுந்த அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் வீதியில் யானைக்கூட்டம் உலாவி திரிவதாகவும் இரவு வேளையில் அந்த வீதியால் செல்லவே முடியாத அளவிற்கு பயப்பீதி இருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யானைக் கூட்டம் பெருமளவில் வீதியருகே நின்றது. இரவு வேளைகளில் நடமாடிய யானைகள் தற்போது பகல் வேளையிலும் உலாவித் திரிகின்றன.

இந்த யானைகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் கவனமெடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

## பாடசாலை வளாகத்தினுள் நுழையும் யானைகள்; பயன்தரும் மரங்கள் அழிப்பு

வவுனியா வடக்கு, புளியங்குளம், இராமனூர் பகுதியில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளார் வித்தியாலயத்தில் யானைகள் பயன்தரு மரங்களை அழித்துள்ளன.



பாடசாலை வளாகத்திற்குள் நேற்று முன்தினம் இரவு வேளை நுழைந்த யானைகள் அங்கிருந்த வாழை, தென்னை, கரும்பு முதலிய பயன்தரு மரங்களை சேதப்படுத்தியதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்பும் இவ்வாறு பாடசாலை வளாகத்தினுள் இக்கிராமத்திற்கும் யானைகளின் அச்சுறுத்தல் இருப்பதாக அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை என அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் ஏ-9 வீதிக்கு அருகாமையில் உள்ள இப்பாடசாலையில் யானைகள் இவ்வாறு மரங்களை சேதப்படுத்தியுள்ளதுடன் இக்கிராமத்தில் பல தடவைகள் யானைகள் பயன்தரு மரங்களை அழித்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அம்மான் பச்சரிசி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name-** Euphorbia
**Family-** Euphorbiaceae
**Sinh-** Budadakiriya

வேரினின்றும் பல குச்சிகளுடன் செங்குத்தாகவும் சிறிது பக்கம் நோக்கில் சாய்ந்தும் குத்துச்செடி போன்று சுமார் ஒரு அடிதூரம்



வரைக்கும் வளரும். சுமார் 3 மீற்றர் பருமனுள்ளது. 4-6 செ.மீ.நீளமும் 1.5 முதல் 2.5 செ.மீ அகலமும் உள்ள மெல்லிய இலைகள் காம்பின் நுனியில் நெருக்கமாகவும் அமைந்திருக்கும். மிக மெல்லிய சுனைகள் காம்பில் அதிகம், இலையில் குறைவு. இலைகளின் ஓரம் இரம்பை வடிவில் இருக்கும். வெண்ணிறப்பூக்களை கொண்டது. பூங்கொத்துக்கள் ஒவ்வொரு இலைகளுக்கிடையில் கணுவில் மிளகு பருமனில் காணப்படும். மிகச்சிறிய காய்கள் கொத்தாகக் காணப்படும். இச்செடியில் எந்தப் பகுதியை ஒடித்தாலும் பால் வடியும். ஓராண்டுப் பயிராகும். எல்லா வகை மண்களிலும் வளரக்கூடியது.

### 100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்

புரதம்-4.7 கிராம், தாதுப்பு-3.2 கிராம், இரும்பு-21.2 கிராம், கல்சியம்-546 மி.கிராம், பொஸ்பரஸ்-106 மி.கிராம்.

### மருத்துவப் பயன்கள்

15 கிராம் இலையை இளங்காம்பு, பூமொட்டு ஒன்றாக அரைத்துச் சாறு பிழிந்து 120 மில்லி பசும்பால், 240 மில்லி இளநீர் அல்லது மோர், 180 மில்லி எலுமிச்சம்பழச் சாறு இவற்றுள் ஏதாவது ஒன்றுடன் கலந்து குடிக்கலாம்.

ஒரு சிலருக்கு இதை உபயோகிக்கும்போது மந்தம் ஏற்படுவது போல் தோன்றலாம். அவர்கள் 15 கிராம் இலையோடு 5 கிராம் துளசி இலைகளை சேர்த்து உண்ணலாம்.

15 கிராம்கையாந்தகரை இலையை சேர்த்து முன்போல சாறு பிழிந்து உபயோகிக்கலாம். அல்லது மென்று உண்ணலாம். 20 கிராம் இலையோடு 10 கிராம் தேங்காய்த்துருவலுடன் தக்காளி, தயிர், நெல்லிக்காய் சேர்த்து சட்னி/துவையல் செய்தும் பயன் படுத்தலாம்.

20 கிராம் இலையை 100 கிராம் முளைக்கீரையுடன் சேர்த்தும் பயன் படுத்தலாம். அமுத்தமான சக்கை இருந்தால் இதை பொடியாக நறுக்கி, 30 கிராம் இலையை எடுத்து குடிநீர் காய்ச்சியும் பயன்படுத்த லாம்.

இலைகளை நிழலில் உலர்த்தி, பொடித்து ஒரு தேக்கரண்டி அளவு உபயோகிக்கலாம். இதனால் உடல் குளிர்ச்சியடையும். மேற்கூறிய முறைகள் எவற்றிலாவது எடுத்துவர மூல நோய் குறையும், சிறுநீர் எரிச்சல் ஆகியன தீரும். இரத்தம் விருத்தியடையும். கர்ப்பப்பை சம்பந்தமான கோளாறுகளுக்கும் சிறந்ததாகும்.

இருமல் இரவில் அதிகமாக உள்ளவர்கள், அம்மான்பச்சரிசி இலைகளை சேரித்து நன்றாகக் கழுவி இடித்து சாறு எடுத்து 4 தேக்கரண்டி சாற்றை 2 தேக்கரண்டி சீனி கலந்து காலையில் வெறும் வயிற்றில் அருந்த இருமல் தணியும்.

அம்மான் பச்சரிசி இலைகளை நிறையச் சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து துணியில் அரித்து சீசாவில் பத்திரப்படுத்தவும். இதில் 4 கிராம் காலை, மாலை கற்கண்டுத் தூள் சேர்த்து பசும்பாலுடன் அருந்தவும். இவ்வாறு 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட தாதுவிருத்தியடையும். உடலுக்கு உரத்தையும் பலத்தையும் கொடுக்கும்.

அம்மான் பச்சரிசி தேவையானளவு சேகரித்து மைபோல அரைத்து எடுத்து 5 கிராம் அளவு 200 மில்லி மோரில் கலக்கி காலையில் மட்டும் குடிக்க பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய் தீரும்.

ஓயாத விக்கலுக்கு அம்மான் பச்சரிசியை சேகரித்து அம்மியில் வைத்து அரைத்து 5 கிராம் அளவு எடுத்து அதேயளவு பசுவின் வெண்ணெய் சேர்த்து குழைத்து காலை, மாலை 3 நாட்கள் கொடுத்தால் ஓயாத விக்கல் தீரும்.

காலில் ஆணி தோன்றி இருப்பதன்காரணமாக நடக்க முடியாமல் இருப்பின் அம்மான் பச்சரிசி செடிகளை உடனேயே கொய்து அந்தச் செடியின் காம்புகளை ஒடித்தால் அதிக பால் கொட்டும். இந்தப் பாலை காலிலுள்ள ஆணியின் மேல் கனமாக தடவிவந்தால் கால் ஆணி வெளியே வந்துவிடும். ஒவ்வொரு நாளும் காலை, மாலை இவ்வாறு தொடர்ந்து 5,6 நாட்கள் தடவி வர வேண்டும்.

வயதுவந்தும்பூப்பெய்தாதபெண்களுக்கு அம்மான் பச்சரிசி இலைகளை ஆய்ந்து ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு 10 கிராம் பெருங்காயம், 5 கிராம் எள்ளு, 10 கிராம் பனை வெல்லம் பாலில் அவித்து கழுவி எடுத்த சித்திரமூல வேர்ப்பட்டை 10 கிராம் இவைகளை வெட்டிப்போட்டு 400 மில்லி நீர்விட்டு கால் பங்காக வற்றக் குடிநீர் காய்ச்சி காலை,மாலை 60 மில்லி அளவு தொடர்ந்து 21 நாட்கள் எடுத்து வர வயது வந்தும் ருதுவாகாத பெண்கள் ருதுவாகி விடுவார்கள்.

சிலருக்கு உடம்பில் பாலுண்ணிகள் போன்று மருக்கள் தோன்றும். இதற்கும் அம்மான்பச்சரிசி பாலை அதில் போட்டுவர பருக்கள் மறையும்.

உடம்பு எரிச்சல் உடையவர்கள் அம்மான் பச்சரிசி இலை, கீழ்காய் நெல்லி இரண்டையும் சம அளவு எடுத்து கழுவி, அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டுவர உடம்பு எரிச் சல், பாத எரிச்சல் தணியும்.

தாய்ப்பாலை கூடுதலாக சுரக்கப் பண்ணி 15 கிராம் அம்மான் பச்ச ரிசி பூக்களை சேகரித்து 200 மில்லி காய்ச்சிய பசும்பாலில் போட்டு அருந்த தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

அம்மான் பச்சரிசி கீரையுடன் மஞ்சள், ஓமம் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் குடற்புண் குணமாகும்.

அம்மான் பச்சரிசி கீரை, கீழா நெல்லி, வெந்தயம் மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து சாப்பிட்டால் (5 கிராம் காலை, மாலை) வெண்குட்டம் குணமாகும். அம்மான் பச்சரிசி கீரையுடன் மிளகு (3), வேப்பிலை (3) சேர்த்து அரை த்து சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும்.

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு மூன்றாம் திருவிழா



### நலம் தருவாள் சக்தி



அலைகடலின் ஓரத்திலே
அரவத்தில் அமர்ந்திருந்து
அடியவர்களை காத்து வரும்
அன்னை சக்தியே
இனமத பேதமின்றி
இடர்களை தீர்த்து வரும்
இடபவாகனின் சக்தியே
சீரழிந்து செல்லும்
எங்கள் சமூகத்தை
சீர்படுத்த நாகபூஷணியே வாருமம்மா

க.மலர்,
சிறுவர் இல்லம்,
திருநெல்வேலி

### பேரின்ப பெரு வாழ்வை

பாடினேன் பாடவைக்குமுன்ன நாளே
ஆனந்தம் கொண்டும் நான்
ஆடினேன் அக மகிழ்ந்து அகில
மெல்லாம் ஆளும் பராசக்தியே!
நாடினேன் நயினை நாகபூஷணியே
உன்தாள் பணிந்து ஏற்று
தேடினேன் பேரின்ப பெருவாழ்வை
பேறாய்ப் பெற்றிடவே தாயே!
கொடியேறித் தமிழர் பண்பாடும் நான்
மறையும் தழைத்தோங்க வழிசெய்யம்மா!


இராம ஜெயபாலன்

### அலைமோதுதம்மா




அழகிய ஐந்து தலை நாகத்தை
குடையாக அணிந்திருக்கும்
நயினை தெய்வத்தாயவள்
குறைவின்றி அமுதமூட்டும்
அன்னபூரணி அவள்
உனைக்காண அடியவர்
கூட்டம் அலைமோதுதம்மா


சே.தனுஷா
வேலணை



# கொஸ்கம ஆயுதக்களஞ்சிய வெடிப்பினால் முகாமுக்கு வெளியே ஏற்பட்ட பாதிப்புக்கள்





















கொஸ்கம சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியசாலை வெடித்ததன் காரணமாக அதனை அண்மித்த பகுதிகளின் சொத்துக்களுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

வைத்தியசாலை, தொழிற்சாலைகள், வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

குறித்த ஆயுதக் களஞ்சியம் தீப்பற்றிய போது அங்கிருந்த ஆயுதங்கள் வெடித்துச் சிதறி பல மீற்றர் தூரம் வரை சென்று சேதங்களை ஏற்படுத்தின.

# நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

## சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு


(கொழும்பு) —

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் மெத்தனப் போக்கை பின்பற்றும் நல்லாட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து கொழும்பில் இன்று பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு முன்பாக நடத்தவிருப்பதாக ஊழலுக்கு எதிரான முன்னணியின் ஆலோசகரான கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கையெழுத்துப் போராட்டமும் முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# வெள்ளக்காடாக மாறும் வீதியால் மக்களுக்குப் பயணிப்பதில் சிரமம்



வடமராட்சி உடுப்பிட்டி வதிரி வீதியில் உள்ள இரண்டு தனியார் கல்வி நிலையங்களுக்கு முன்பாகவுள்ள வீதி மழை காலங்களில் வெள்ளக் காடாக காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் இவ் வீதியின் அபிவிருத்தி தொடர்பில் அதிகாரிகள் அசமந்தப் போக்கை கொண்டுள்ளனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குரிய இவ் வீதியானது சுமார் 250 மீற்றர் தூரம் கொண்டதாக அமைந்துள்ளது. இவ் வீதியானது மழை காலங்களில் வெள்ளக்காடாக மாறி விடுவதுடன் இரண்டு தனியார் கல்வி நிலைய மாணவர்கள் மற்றும் அவ் வீதியை பயன்படுத்துகின்ற பொது மக்கள் யாவரும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மாலுசந்திக்கு அண்மையில் உடுப்பிட்டி வீதிக்கு அருகாமையிலுள்ள அல்வாய், வதிரி போன்ற கிராமங்களினூடாக மழை காலங்களில் பாய்ந்து வருகின்ற வெள்ள நீரானது மேற்படி தனியார் கல்வி நிலையங்களுக்கு முன்னால் உள்ள வீதியூடாகச் சென்று வயல் வெளியை அடைகின்றது.

மேற்படி தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகாமையில் இருந்து நீர் பாயும் தெருவானது நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் இருப்பதால் தாழ்வான மணல் தெருவாக காணப்படுகின்றது. மழை காலங்களில் வெள்ளத்துடன் குப்பைகள் வந்து தேங்கி பாலங்கள் அடைபட்டு அப்பகுதியில் 4 அடி வரை வெள்ள நீர் உயர்ந்து காணப்படும்.

இதனால் இவ் வீதியை பயன்படுத்தி வருகின்ற பொது மக்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்கின்ற மாணவர்கள் பலதரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

# சுதந்திரம் குறித்து விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பியஒன்றியத்தின் நிதிஅனுசரணையுடன்சொண்ட், அக்ரெட் மற்றும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உரிமைகள் மற்றும் சுதந்திரம் தொடர்பான கருத்தரங்கினை நடத்தி வருகின்றது.

இதனடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நாளை, நாளை மறுதினம் ஆகிய இரு நாட்களில் காலை 9 மணியளவில் தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்ட பத்தில் இக் கருத்தரங்கானது நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் ஊடகவியலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், கிராம மட்ட குழுக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்றோர் பங்குபற்றவுள்ளனர். (இ-5-91)

# மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள ஆயுத களஞ்சியங்களை அகற்றவும்

## ஜே.வி.பி.அரசிடம் வலியுறுத்து

மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள ஆயுத களஞ்சியசாலைகளை அகற்றி, மக்களின் சாதாரண வாழ்க்கையை பாதுகாக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி, அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. கொஸ்கம சாலாவையில் இருந்த ஆயுத களஞ்சியத்தை அங்கிருந்து அகற்றுமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதேச வாசிகளால் கோரிக்கை முன்வைப்பட்டதாக அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். சாலாவ இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பிரதேசம், பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் வசிக்கும் கிராமம், அரச வைத்திய சாலை மற்றும் பெருமளவான பொதுமக்கள் வசிக்கும் இடம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது பிரசார செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.(இ-10)

# 20மணித்தியாலங்கள் உணவு, குடிநீர் இன்றி பொதுமக்கள் அவதி

கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் பொது மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் 20 மணித்தியாலங்கள் உணவு, குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என பலர் தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான மருத்துவ வசதிகளையும் உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளையும்



அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும் என ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்தார்.

அவிசாவளை கொஸ்கமுவ, சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட விபத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் மக்கள் வாழும் பிரதேசங்களுக்குள் வெடிபொருட்கள் விழுந்துள்ள நிலையில் அவை வெடிப்புக்குள்ளாகியுள்ளதா ? அல்லது வெடிக்காத ஆயுதங்களா? என்பது மக்களுக்கு தெரியாதுள்ளது.

ஆகவே உடனடியாக இராணுவத்தினரை பயன்படுத்தி குறித்த பகுதியிலுள்ள ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை அப்புறப்படுத்தும் வேலையினையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:31<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4539 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBA, MA/அரச தொழில்<br>தொ.இ: G/5511 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4549 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 26செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/5516 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 40<br>தகைமை/தொழில்:A/L/லண்டன் NOT PR<br>தொ.இ: B/4551 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 85செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDA<br>தொ.இ: G/5528 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 25செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: B/4556 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 28செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/5531 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# வெளியேற முயற்சிக்கும் மக்களின் மீது ஐ.எஸ்.தீவிரவாதிகள் கொடூர தாக்குதல்



ஈராக்கில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பலூஜா நகரை அரசுப் படைகள் முற்று கையிட்டுள்ள நிலையில், அங்கிருந்து வெளியேற முயற்சிக்கும் பொதுமக்களை பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்கின்றனர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

தலைநகர் பக்தாதில் இது தொடர்பாக ஈராக் ராணுவ அதிகாரி மேஜர் அலி ஹானூன் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்ததாவது,

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆக்கிரமிப்பில் உள்ள பலூஜாவை மீட்கும் ராணுவ நடவடிக்கை மும்முரமாக நடைபெற்று வருகிறது. நகரின் தெற்கு எல்லைப் பகுதி ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

இராணுவ நடவடிக்கை தொடங்கும் முன்னரே, அந்த நகரிலிருந்து சுமார் இரண்டரை லட்சம் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறிவிட்டனர்.

ஆனால் நகரின் மையப் பகுதியில் வசித்து வரும் சுமார் 50 ஆயிரம் பேர் வெளியேற முடியாமல் சிக்கித் தவிக்கின்றனர்.

இவர்களை மனிதக் கேடயங்களாக பயங்கரவாதிகள் பயன்படுத்துவார்கள் என்பதால், இராணுவம் மிகவும் எச்சரிக்கையுடன் தனது நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வருகிறது. நகரைவிட்டு வெளியேற முயற்சி செய்த 7 பேரை பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றதாகத் தகவல் கிடைத்துள்ளது. இந்த எண்ணிக்கை கூடுதலாகவும் இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதைத் தவிர, ஆயுதங்களைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேறித் தப்ப முயன்ற 7 ஐ.எஸ். பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது என்றார் அவர்.

இதனிடையே, பயங்கரவாதிகளின் கண்களிலிருந்து தப்பி நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு நகரை விட்டு வெளியேற முயன்ற பலர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்தப் பகுதியில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே நாட்டினர் தெரிவித்தனர்.

கடந்த மே மாதம் 21ஆம் திகதி பலூஜா மீட்பு நடவடிக்கையை ஈராக் ராணுவம் தொடங்கியது.

அப்போது முதல் இதுவரை அந்தப் பகுதியிலிருந்து சுமார் 2,980 பேர் வெளியேறியுள்ளனர். ஆனால் கடந்த சில நாட்களில் இரண்டு குடும்பத்தினர் மட்டுமே தப்பி வெளியேறியதாக நோர்வே நிவாரணக் குழுவினர் தெரிவித்தனர். (இ-10)

# கால்வாய்க்குள் கவிழ்ந்து பயணிகள் பேருந்து விபத்து




துருக்கியில் பாடசாலை மாணவர்கள் சுற்றுலா சென்ற பேருந்து கால்வாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்தனர்.

ஒஸ்மேனியா நகருக்கு அருகே வரலாற்று சிறப்பு மிக்க கரடேபே என்ற சுற்றுலாத் தலம் உள்ளது. இந்தப் புராதன நகருக்கு பாடசாலை மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை சுற்றுலா சென்றனர்.

இவர்கள் சென்ற பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். இதில், மூன்று மாணவிகள் மற்றும் மூன்று மாணவர்கள் அடங்குவர்.


மேலும் 24 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)




# வடகொரியாவின் யொங்பியங் அணுத் திட்டம் மீள இயக்கம்

(பியாங்யாங்)

**வடகொரியாவின் யொங்பியனிலுள்ள அணுத் திட்டத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச அணு சக்தி நிறுவகம் அறிவித்துள்ளது.**



அணுசக்தி நிலையங்களில் எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அணுத் திட்டங்களுக்கான புளூட்டோனியம் இதன் மூலம் பெறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அணுசக்தி நிலையத்தின் அணு உலைகள் 2007ஆம் ஆண்டு மூடப்பட்டிருந்தன.

எனினும் குறித்த அணுத் திட்டத்தை மீளச் செயற்படுத்தப் போவதாக வடகொரியா கடந்த ஆண்டு கூறியிருந்தது. இந்த அறிவிப்பின் பின்னர் நான்காவது அணுப் பரிசோதனையை வடகொரியா மேற்கொண்டிருந்தது.

குறித்த அணுப் பரிசோதனை மற்றும் ஏனைய ஏவுகணை பரிசோதனைகள் சர்வதேச தடைகளை மீறும் வகையில் அமைந்திருந்தன.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய நாடுகள் வடகொரியாவிற்கு எதிராக தடைகளை அமுல்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# குண்டு வெடிப்பில் 11 பேர் உயிரிழப்பு





(இஸ்தான்புல்)

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் பொலிஸ் வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 7 பொலிஸார் உட்பட 11 பேர் பலியாகினர்.

இஸ்தான்புல் நகரின் மத்தியில் உள்ள வெஸ்னே சிலரில் பொலிஸ் வாகனத்தை குறிவைத்து நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. வீதியில் முகப்பில் நிறுத்தப்பட்டிருந்த காரில் வெடிகுண்டு வைக்கப்பட்டு, பொலிஸ் வாகனம் அதனை கடக்கும் போது வெடிக்க செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் வாகனம் வெடிகுண்டு இருந்த காரை கடந்தபோது ரிமோர்ட் கண்ட்ரோல் மூலம் இயக்கப்பட்டு வெடிக்கச்செய்யப்பட்டுள்ளது என்று முதல்கட்ட தகவல்கள் வெளியாகி உள்ளன: குண்டு வெடிப்பில் சிக்கிய பேருந்து உருகுலைந்தது, அருகில் இருந்த கட்டடங்களும் சேதம் அடைந்துள்ளன. (இ-10)

# விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவிடத்தில் பிரதமர் மோடி அஞ்சலி



ஆப்கானிஸ்தான், கட்டார், சுவிட்சர்லாந்து நாடுகளில் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்துள்ள பிரதமர் மோடி நேற்று அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்திய நேரப்படி நேற்று முன்தினம் இரவு வோஷிங்டன் சென்றடைந்த அவர் அங்குள்ள ஆர்லிங்டன் நஷனல் செமடரியில் இந்திய-அமெரிக்க வம்சாவளியை சேர்ந்த மறைந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

கல்பனா சாவ்லாவின் குடும்பத்தினர் மற்றும் அவரது கணவர், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மைய மூத்த அதிகாரிகள், இந்திய-அமெரிக்க வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது தந்தை ஆகியோரிடம் சிறிது நேரம் உரையாடினார்.

இந்த சந்திப்பின் போது அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ஆஷ்டன் கேர்டர், அமெரிக்காவுக்கான இந்திய தூதர் அருண் கே.சிங், இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜெய்சங்கர், இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் ரிச்சர்டு வெர்மா ஆகியோரும் பிரதமர் மோடியுடன் இருந்தனர்.

கல்பனா சாவ்லாவின் கணவர் ஜீன் பியரி ஹாரிசன் பிரதமர் மோடிக்கு அவரது மனைவியின் சாதனைகள் குறித்த புத்தகங்களையும், வாழ்க்கை வரலாற்று புத்தகம் ஒன்றையும் பரிசளித்தார். (இ-10)



# சிறுவர் அரங்கம்

1455

## புத்திசாலி பூனை பிரபு

…புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது.

"ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல்.

மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின.

பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது.

மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது.


சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது.

"மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது.

எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி. அங்கிருந்து 'தப்பித்தேன்' என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது.

பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது.

அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனை பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்தது. புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது.



அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று கரடியும் ஓடியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன.

"பூனை பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார்.

நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி.

மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன.

அதன் பிறகு பூனை பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை. வயதானாலும், அதிஷ்டத்தாலும், தன் வாய்சொல் திறமையாலும் பூனையானது மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது.

(முற்றும்)

## 06.2016 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1405 - யோர்க் ஆயர் ரிச்சார்ட் ஸ்க்ரோப், நோர்ஃபோக் இரண்டாம் நிலை மன்னர் தொமஸ் மோபிறே ஆகியோர் மன்னர் இங்கிலாந்தின் நான்காம் ஹென்றியின் ஆணையின் பேரில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1783 - ஐஸ்லாந்தில் லாக்கி எரிமலை வெடிக்க ஆரம்பித்ததில் எட்டு மாதங்களில வரட்சி, மற்றும் வறுமை காரண மாக 9,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசி அமெரிக்கக் கூட்டில் இருந்து விலகியது.
- 1887 - ஹேர்மன் ஹொலரித் துளையிடும் அட்டை கொண்ட கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1929 - ஐக்கிய இராச்சியத்தில் முதற் தடவையாக தொழிற் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிரியா, மற்றும் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தன.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி, நியூகாசில் நகரங்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தின.
- 1984 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஓரினச்சேர்க்கை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது.
- 1992 - முதலாவது உலகக் கடல் நாள் கொண்டாடப்பட்டது.
- 1995 - படிவ நிரலாக்க மொழி பி.எச்.பி வெளியிடப்பட்டது.
- 2006 - அல் குவைதாவின் ஈராக்கியத் தலைவர் அபு முசாப் அல்-ஜர்காவி அமெரிக்க விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்டார்.
- 2007 - அட்லாண்டிஸ் விண்கப்பல் 7 பேருடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப்பட்டது.
- 2007 - இலங்கையில் புத்தளத்தில் 9 உடல்கள் மிகவும் சிதைந்த நிலையில் காவற்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2007 - ஆஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இடம்பெற்ற பெரும் காற்று, மற்றும் வெள்ளத்தினால் 9 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள

- 1867 - பிரான்க் லாய்டு ரைட், (இ. 1959)
- 1874 - சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர்
- 1921 - சுகார்ட்டோ, இந்தோனேசியாவின் முன்னாள் அரசுத் தலைவர் (இ. 2008)
- 1930 - இர. ந. வீரப்பன், மலேசிய எழுத்தாளர் (இ. 1999)
- 1975 - ஷில்பா ஷெட்டி, பாலிவுட் நடிகை

### இறப்புகள

- 632 - முகம்மது நபி, கடைசி நபி (பி. 570)
- 1809 - தாமஸ் பெய்ன், ஆங்கிலேய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1737)
- 1845 - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்காவின் ஏழாவது குடியரசுத் தலைவர் (பி. 1845)
- 1969 - அருணாசலம் மகாதேவா, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி . (பி. 1885)
- 2012 - கே. எஸ். ஆர். தாஸ், இந்திய இயக்குனர் . (பி. 1936)

### சிறப்பு நாள

- உலகக் கடல் நாள்

## சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி



சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவர். சட்டவாக்கப் பேரவைக்கு வட மாகாணத் தமிழரால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதிநிதி என்ற பெருமை பெற்றவர். இலங்கை அரசாங்க சபைக்கு 1936 ஆம் ஆண்டு ஊர்காவற்துறை தொகுதியிலிருந்து தெரிவானார். அரசாங்க சபையில் 11 ஆண்டு காலம் சபை முதல்வராகப் பணியாற்றியவர். கல்விமானாகவும் விளங்கியதுடன் சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் பல சைவப்பாடசாலைகளை நிறுவினார். வைத்திலிங்கம் துரைசுவாமி யாழ்ப்பாண மாவட்டம், வேலணையில் தமிழ், சைவ மரபில் சிறந்த தனிநாயக முதலியார் குடியில் பிறந்தவர். தந்தை ஐயாம்பிள்ளை வைத்திலிங்கம் திருவிதாங்கூர் அரசில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். துரைசுவாமியுடன் கூடப் பிறந்தவர்கள் பொன்னுத்துரை, பொன்னம்மா, விஜயரத்தினம், இரத்தினகோபால், இராஜகோபால் ஆகியோர். கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கிய துரைசுவாமி கல்கத்தா சென்று பி. சி. ராய், சேர் ஜகதீஸ் சந்திரபோசு ஆகிய பேராசிரியர்களிடம் கணிதம், அறிவியல் பயின்று பட்டம் பெற்றார். அதன் பின்னர் சட்டம் பயின்று 1902 ஆம் ஆண்டில் வழக்கறிஞரானார். முதலியார் சிற்றம்பலம் சதாசிவம் என்பவரின் மகள் இராசம்மா என்பவரை 1905 ஆம் ஆண்டில் திருமணம் புரிந்தார். எட்டுப் பிள்ளைகள். இவர்களில் யோகேந்திரா துரைசுவாமி இலங்கைத் தூதுவராகப் பல உலக நாடுகளில் பணியாற்றியவர். சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். 1921 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட இலங்கை சட்டவாக்கப் பேரவைக்கு இடம்பெற்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு ஆறுமுகம் கனகரத்தினத்தை அதிகப்படியான வாக்குகளால் வென்று முழு வட மாகாணத்திற்கும் பிரதிநிதியானார். இதனால் வட மாகாணத் தமிழரால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதிநிதி என்ற பெருமையையும் பெற்றார். 1924 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை சட்டவாக்கப் பேரவைத் தேர்தலில் வட மாகாணத்தின் மேற்குப் பகுதியிலிருந்து போட்டியின்றித் தெரிவானார். தம் கொள்கையிலிருந்து வழுவாமல், 1934 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கென இடம்பெற்ற இடைத்தேர்தல்களில் போட்டியிடாமல் ஒதுங்கி இருந்தார். பதிலாக யாழ்ப்பாணத்திலிருந்து அருணாசலம் மகாதேவா, சுப்பையா நடேசன், நெவின்ஸ் செல்வதுரை, ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

# கோத்தவுக்கு அதிகாரம் அரசு வழங்கக் கூடாது

## விலகிவிடுவேன் என சந்திரிகா அறிவிப்பு



(கொழும்பு)

**கோத்தபாய ராஜபக்ஷவை அதிகாரத்துக்கு கொண்டு வர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முயற்சிக்குமானால் தாம் அரசாங்கத்துடன் இணைந்திருக்கப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசாங்கம், நாட்டை கொள்ளையிட்டவர்களை விரட்டுவதற்காகவே அமைக்கப்பட்டது.

இந்த நிலையில் கோத்தபாயவை அதிகாரத்துக்கு கொண்டு வர முயற்சித்தால், தாம்,அரசாங்கத்துடன் தொடரப் போவதில்லை என்று சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

அத்தனகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை தாம் முடமாகிப் போயுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டதாக குறிப்பிட்ட சந்திரிகா, தற்போது தாம் முடமாகி உள்ளேனா? என்பதை பார்க்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-10)

# அமைச்சர் பொன்சேகாவுடன் ஒன்றாக அமர்ந்திருந்தது வருத்தமளிக்கிறது

## ஜோன் செனவிரட்ன ஆதங்கம்





(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகாவுடன் ஒன்றாக அமைச்சரவையில் அமர்ந்திருக்க நேரிட்டுள்ளமை வருத்தமளிப்பதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் பற்றி எந்த விதமான அறிவும் அற்ற, தமக்கு உரிமையில்லாத விடயங்கள் பற்றி பேசி சமூகத்தில் பெரும் அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டுள்ள சரத் பொன்சேகா போன்ற அமைச்சர் ஒருவருடன், அமைச்சரவையில் ஒன்றாக அமர்ந்திருக்க நேரிட்டுள்ளமை வருத்தமளிக்கின்றது.

நான் வருந்துகின்றேன், சரத் பொன்சேகா தனக்கு சொந்தமில்லாத வேறும் அரசியல் கட்சிகளின் விவகாரங்கள் பற்றியும் கருத்து வெளியிடுகின்றார்.

அவர் அனைவரையும் மிருகங்களின் பெயர்களைக் கொண்டே அழைக்கின்றார்.

நான் அட்டையைப் போன்று யார் மீதாவது ஏறி அரசியல் செய்வதாக சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

1989ஆம் ஆண்டு முதல நான் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றேன்.

சரத் பொன்சேகாவிற்கு அரசியல் அனுபவம் போதவில்லை. யார் மீதும் ஏறி அரசியல் நடத்த வேண்டிய அவசியமில்லை.

இந்த அட்டை பற்றிய கருத்து சரத் பொன்சேகாவிற்கு மிகவும் பொருந்தும். ஏனெனறால் அவர் கொழும்பில் 5000 வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டார்.

எமது இலக்கு 2020ஆம் ஆண்டில் ஆட்சி அதிகாரத்தை சுதந்திரக் கட்சியின் வசமாக்குவதாகும். எந்தவிதமான சூழ்ச்சித் திட்டங்களும் கிடையாது.

கோத்தபாய ராஜபக்ஷவை கட்சியில் இணைத்துக் கொள்வதன் மூலம் கட்சிக்கு புதுப் பொழிவினை வழங்க முடியும் என நாம் நம்புகின்றோம் என ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (இ-10)

# கூட்டு எதிர்க்கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிக்கப்படுகிறது



## வாசுதேவ குற்றச்சாட்டு

கூட்டு எதிர்க்கட்சியை பிளவடையச் செய்யவே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இரண்டாம் நிலைத் தலைவராக நியமிக்க முயற்சிக்கப்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

பொறளை என்எம் பெரேரா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சிக்கு தற்போது பாரியளவில் மக்கள் ஆதரவு கிடைக்கப் பெறறு வருகின்றது.எனவே கூட்டு எதிர்க்கட்சியை பிளவடையச் செய்து அதனை பலவீனப்படுத்தும் நோக்கில் கோத்தபாய ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியில் இணைத்துக்கொள்ள முயற்சிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த யோசனை பற்றி கூட்டு எதிர்க்கட்சிக்கு போதியளவு தெளிவுண்டு.

இந்த யோசனையை ஜோன் செனவிரட்ன கொண்டு வந்தாலும் அதன் பின்னணியில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இருக்கின்றார்.

கூட்டு எதிர்க்கட்சியை பிளவடையச் செய்யும் யோசனைகள் நன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுபற்றி அமைச்சர் செனவிரட்னவிடம் நான் வினவியிருந்தேன். அதன் போது கட்சியை ஒன்றிணைக்கவே இந்த யோசனை என கூறியிருந்தார்.

அமைச்சருக்கு ஆரம்பம் மட்டுமன்றி இறுதியும் மறந்து போயுள்ளது என வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

# மன்னிப்புக் கேட்பதால் மரியாதை போய்விடுமா?

தவறு செய்தவர்கள் நாம்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நாம் செய்தது தவறுதான் என்பதை நாம் உணர்ந்து கொள்வதற்கும் மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பதற்கும் அவர்களை ஆறுதலடையச் செய்வதற்குமே இந்த உலகம் அவசியமான நேரங்களிலெல்லாம் நாம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என எதிர்பார்க்கிறது.

பாராட்டுரைகளையும் பெருமைப்பட்டங்களையும் நம்முடைய நற்செயலுக்காகப் பெறும் நாம் நம்முடைய சிறுமைகளுக்காகவும் தவறுகளுக்காகவும் மன்னிப்புக் கேட்பதில் தவறே இல்லை.

இந்த வார்த்தையைப் பயன்படுத்துவது என்பது நம் தகுதிக்கு இழுக்கு என்று எண்ணிக் கொண்டு விவகாரத்தையே பெரிதாக்கி விடுவதும் விவேகமாகாது.

தனக்குச் சமமானவர்களிடமும் தனக்குக் கீழே உள்ளவர்களிடமும் இந்த வார்த்தையைப் பயன்படுத்துவது என்பது ஏதோ கிரிமினல் குற்றம் என்பதுபோல் எண்ணிக்கொண்டு அவர்களோடு கௌரவப் போர் புரிவதும் பிடிவாதம் காட்டுவதும் புத்திசாலித்தனமான பிழைப்பல்ல.

ஒரு பிரச்சினையில் சொல்லில் அல்லது செயலில் நம்மீது தவறு இருந்து அது சுட்டிக் காட்டப்பட்டு நாம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என மற்றவர்களால் எதிர்பார்க்கப்படும்போது மன்னிப்புக் கேட்பதுதான் புத்திசாலித்தனம். அதை விட்டுவிட்டு அந்தச் சிறு நெருப்பைப் பெரும் தீயாக வளரவிட்டுவிட்டு விவகாரம் பலருக்கும் தெரியவரும் நிலையில் இனித் தப்பிக்க வழியே இல்லை என்ற நிலையில் மன்னிப்புக் கேட்பது இருக்கிறதே அதுதான் மரியாதைக் குறைவு.

நாம் செய்தது குற்றமா? குற்றமில்லையா? என்பதில் சரியான முடிவை எடுக்க இயலாதவர்களாகவே நம்மில் பலர் இருக்கிறோம். இந்நிலையில் மற்றவர்கள் எப்படி அதை எடுத்துக் கொள்கிறார்கள் அல்லது பிரதிபலிக்கிறார்கள் என்பதை வைத்தாவது நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். காரணம் நமக்குத் தவறாகப் படாத ஒன்று மற்றவர்களுக்குத் தவறாகப் படலாம்.

ஆனால் அப்படிச் சொல்லும்படியான ஒரு செயல்கூட நடக்கவில்லை. அதேநேரத்தில் செய்யாத குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்கும்படியான சூழ்நிலை உருவாகிறது என்று வைத்துக் கொள்வோம். என்ன செய்வது?நம் நேர்மையை நிரூபிக்க வேண்டுமே தவிர தண்டனைக்குப் பயந்து கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. இப்படிக் கேட்கும்போது தான் உண்மையில் மரியாதை போய்விடுகிறது.

நாம் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டால் நம் மரியாதை குறைந்து விடுகிறதென்பது முழுக்க முழுக்கப் போலியான எண்ணமே!மாறாக,

தவறைத் தவறு என்று ஒப்புக்கொண்டு மன்னிப்பும் கேட்டுவிடும் நல்லபண்பு அவரிடம் உண்டு என நம்மை உலகம் உயர்த்திப் பேசுமே தவிர தாழ்த்திப் பேசாது.

லேனா தமிழ்வாணன்

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் வீதி திருத்தப்படவில்லை

வீதித் திருத்தத்திற்கென நிதி ஒதுக்கப்பட்டும் வீதித்திருத்த வேலைகள் முழுமையடைய வில்லை என சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது.

வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணி வீரகத்தியார் தொடுவாய் வீதியின் திருத்த வேலையே முழுமையடைய வில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. கேணி கிராமம் ஊடாகப் பாய்ந்து வரும் வெள்ளநீர் வெற்றிலைக்கேணி வீரகத்தியார் தொடுவாய் ஊடாக வெற்றிலைக் கேணி கடலைச் சென்றடையும்.

இதேவேளை சிலவேளைகளில் தொடுவாய்ப் பகுதியில் வெள்ளநீர் தேங்கிக் காணப்படும்.

இதனால் அவ்வீதியில் பயணிப்போர் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு வீதியைச் செப்பனிடுவதற்கென வடக்கு மாகாணசபையினால் 90 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்பின்னர் பாலம் அமைப்பதற்கான கட்டடப் பொருட்கள் பறிக்கப்பட்டன.

இது பறிக்கப்பட்டு இரண்டு கிழமைகள் ஆகியும் வீதி திருத்த வேலைகள் இடம்பெறவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-5-64)



## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-07.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.76 | 147.42 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.11 | 214.30 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 162.19 | 168.53 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.04 | 153.13 |
| கனடா | டொலர் | 111.30 | 115.86 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.90 | 109.76 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.41 | 109.42 |
| இந்தியா | ரூபா | 2.1827 | ------- |
| சீனா | யுவான் | 22.2008 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.9616 |
| குவைத் | டினார் | 483.9619 |
| ஓமான் | ரியால் | 378.9364 |
| கட்டார் | ரியால் | 40.0802 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.9010 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.7212 |



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 270 | 300 | 200 | 240 | 220 | 240 | 220 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 120 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 600 | 800 | 600 | 800 | 600 |
| தக்காளி | 240 | 300 | 170 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 50 | 60 | 60 | 80 | 70 |
| கோவா | 160 | 200 | 140 | 200 | 160 | 200 | 200 |
| கரட் | 200 | 400 | 150 | 140-250 | 240 | 30 | 200 |
| பூசணி | 70 | 100 | 50 | 70 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 150 | 100 | 100 | 120 | 160 | 120 |
| வாழைக்காய் | 90 | 80 | 50 | 60 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 150 | 160 | 140 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 130 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 260 | — | 170 | 300 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 300 | 200 | 100 | 120 | 130 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 90 | 140 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 300 | 200 | 150 | 220 | 240 | 200 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 160-240 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 110 | — | 190 | 240 | 150 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 200 | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 200 | 200 | 200 | 200 | 250 | 400 |
| போஞ்சி | 300 | 200 | 200 | 240 | 280 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 230 | 200 | 180 | 200 | 200 | 240 | 200 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 30 | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 250 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-25 | 40 | 25-35 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 160 | 300 | 110 | — | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 200 | — | 120 | — | 160 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 30 | 15 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 50 | 120 | 100 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகள் தாக்குதலில் 13 விமானங்கள் தீப்பிடித்து எரிந்தன! 199

முதலில் இவர்கள் இராணுவ விமானத் தளத்தை அடைந்து அங்கிருந்த இராணுவ முகாம்கள், ஹெலிகொப்டர்களைக் குண்டு வீசி அழித்தனர்.

தொடர்ந்து சர்வதேச விமான நிலையத்துக்குள்ளும் நுழைந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் விமானத்தையும் குண்டு வைத்து தகர்த்தனர். அதிகாலை நேரத்தில் நடந்த இந்த அதிரடித் தாக்குதலில் இராணுவம் திணறியது.

### மனித வெடிகுண்டு

விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் மனித வெடிகுண்டுத் தாக்குதலும் இடம்பெற்றது. விடுதலைப்புலிகள் விமான நிலையத்துக்குள் நுழைந்ததும் முதலில் இராணுவ விமானங்களை குறிவைத்து ரொக்கெட் குண்டுகளை வீசினார்கள்.

விடுதலைப்புலிகளில் ஒருவர் தனது உடலில் வெடிகுண்டுகளைக் கட்டியபடி மனித வெடிகுண்டாக அங்கு வந்தார். இவர் இஸ்ரேல் நாட்டு தயாரிப்புப் போர் விமானம் அருகே சென்று வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார். இதில் இராணுவ விமானங்கள் வெடித்துச் சிதறின. விடுதலைப்புலியும் உடல் சிதறி மாண்டார்.

### பெற்றோல் கிடங்கு

இந்தத் தாக்குதலின்போது விமான நிலையத்தை ஒட்டியிருந்த பெற்றோல் சேமிப்புக் கிடங்கு மற்றும் இராணுவத்தின் ஆயுதக்கிடங்கு போன்றவற்றையும் விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தனர்.

விடுதலைப்புலிகள் ஒரே நேரத்தில் பல முனைகளில் இருந்து நடத்திய அதிரடித் தாக்குதலில் கொழும்பு விமான நிலையமும் இராணுவ படைத் தளமும் குலுங்கின.

### 13 விமானங்கள்

விமான நிலையத்தின் ஓடுபாதையின் ஓரத்தில் நிறுத்தி வைத்திருந்த விமானங்கள் தீப்பிடித்து எரிந்ததில் புகை மண்டலமும் தீப்பிழம்பும் பெரிதாகத் தெரிந்தது.

விமானப்படை விமானத்தில் நிறுத்தி வைத்திருந்த 3 இஸ்ரேல் நாட்டு குண்டு வீச்சு விமானங்களும் 2 ஹெலிகொப்டர்களும் வெடித்துத் தூள்தூளாகச் சிதறின. இவை அனைத்தும் யாழ்ப்பாணத்தில் குண்டுவீசப் பயன்படுத்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

விமானப் படைத்தளத்தில் நின்ற பயிற்சி விமானங்களும் அழிக்கப்பட்டன.

சர்வதேச விமான நிலையத்தில் 5 ஏர் பேருந்து பயணிகள் விமானங்களையும் ரொக்கெட்டுகளையும் வீசி விடுதலைப்புலிகள் தாக்கினார்கள். இதில் 5 விமானங்கள் தீப்பிடித்து எரிந்தன.

### பயணிகள் ஓட்டம்

விடுதலைப்புலிகளின் திடீர் தாக்குதலால் விமான நிலையம் போர்க்களமாக மாறியது. விமான நிலையத்தில் இருந்த பயணிகளும் மற்றவர்களும் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

தாமதமாக விழித்துக் கொண்ட இராணுவம் பதிலடி கொடுக்கத் தொடங்கியது. இராணுவத்தினர் பெருமளவில் வந்து சுற்றிவளைத்துக் கொண்டு விடுதலைப்புலிகளைத் தாக்கினார்கள்.

### 6 மணிநேரம் துப்பாக்கிச் சண்டை

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. சுமார் 6 மணிநேரம் இந்தத் துப்பாக்கிச் சண்டை நீடித்தது.

கடுமையான துப்பாக்கிச் சண்டையில் 13 விடுதலைப் புலிகளும் 5 விமானப் படையினரும் கொல்லப்பட்டனர். சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட மேலும் 3பேர் உயிரிழந்தனர். இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்தது.

### மூடப்பட்டது

விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பு விமான நிலையம் மூடப்பட்டது. அந்தப் பகுதி முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இராணுவம் அந்தப் பகுதியில் பெருமளவு குவிக்கப்பட்டது.

### கொரில்லா யுத்தம்

மறைந்திருந்து திடீரென்று தாக்கும் கொரில்லா யுத்த முறைகளில் விடுதலைப் புலிகள் கொரில்லா யுத்த முறையில் அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கொழும்பு விமான நிலையத் தாக்குதலிலும் இந்தப் பாணியில்தான் நடந்தது. விடுதலைப்புலிகள் இத்தகைய தாக்குதலில் ஈடுபடக்கூடும் என்று இராணுவம் உஷார் படுத்தப்பட்டிருந்தது.

### 21 பேர்

விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையைச் சேர்ந்த 21 பேர் 24 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் கொழும்பு விமான நிலையம் அருகே கூடினார்கள். இவர்கள் சிங்கள இராணுவத்தினர் போல உடைகளை அணிந்திருந்தனர். இவர்களிடம் இயந்திரத் துப்பாக்கிகள், ரொக்கெட் மூலம் குண்டு வீசும் கருவிகள், சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் போன்றவை இருந்தன.

### கால்வாய்

விமான நிலையம், பெரிய சாலை ஒன்றில் இருந்து விலகியபடி உள்ளது. அந்தச் சாலையின் ஒருபுறம் கழிவு நீர் செல்லும் கால்வாய் உள்ளது. அந்தக் கால்வாயில் தண்ணீர் இல்லை. விடுதலைப் புலிகள் பதுங்கியபடி அந்தக் கால்வாய் வழியாக சென்றனர். வீதியைக் கடக்கும் இடத்தில் கால்வாய் பூமிக்கு அருகில் ஓடுகிறது. அதன் வழியாக விடுதலைப் புலிகள் உள்ளே நுழைந்தனர். அந்தக் கால்வாயின் மறுபகுதி விமான நிலையத்தின் பின்புறத்தில் போய் முடிகிறது.

### தாக்குதல்

பாதுகாப்பு வீரர்களின் கண்களுக்குத் தெரியாமல் விடுதலைப்புலிகள் இந்தக் கால்வாய் வழியாக விமான நிலையத்தின் பின்பகுதிக்குச் சென்றனர். ஆங்கிலப்படங்களில் வருவது போன்ற இந்த ஊடுருவல் நடந்தது.

விமான நிலையத்தைச் சுற்றிலும் சோதனைச் சாவடிகள் மற்றும் மணல் மூட்டை பதுங்கு குழிகள் அமைத்து இராணுவம் காவல்பணியில் ஈடுபட்டு வந்த போதிலும் அதையும் மீறி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



(தொடரும்)

# கலாசார உடை அணிந்து ஆலயத்திற்கு வாருங்கள்

## நயினாதீவு அறங்காவலர் சபை அறிவிப்பு

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் ஆலய அறங்காவலர் சபையின் வேண்டுகோளுக்கிணங்க நடந்து கொள்ள வேண்டுமென நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

ஆலயத்திற்கு வருகை தருகின்ற ஆண்கள் வேட்டியுடனும் பெண்கள் அனைவரும் கலாசார உடை அணிந்தும் ஆலயத்திற்கு வரவேண்டும்.

பெண்கள் தமக்குரிய கலாசார உடைகளை மட்டும் அணிதல் வேண்டும். குறிப்பாக பெண்கள்தலைமுடிதொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது தலைமுடியை விரித்து விட்டு ஆலயத்திற்கு வருதல் முற்று முழுதாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமோ அங்கப் பிரதட்சணமோ செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆலய உயர் திருவிழாக்காலங்களில் ஆலய உள்வீதியில் நெருக்கமாக பக்தர்கள் வழிபாடு செய்வதால் உள் வீதியில் அங்கப் பிரதட்சணம் செய்வோருக்கான அனுமதி தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆலய பெருந் திருவிழாக்களில் அடியவர்கள் குறிப்பாக பெண்கள் அதிகமான தங்க நகைகளை அணிந்து கொண்டு ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அத்துடன் புகைப்படங்கள், வீடியோக்கள் என்பன முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தூக்குக் காவடிகள் எடுக்கும் அடியவர்கள் ஆலய வளாகத்துள் வந்ததும் ஒலிபெருக்கி சத்தங்களை நிறுத்தி விட வேண்டும் என ஆலய அறங்காவலர் சபையினர் விதிமுறைகளை அறிவித்துள்ளனர். (இ-5)

# நடேஸ்வரா கல்லூரியின் தேவைகள் அனைத்தும் விரைவில் பூர்த்தியாகும்

## முன்னாள் எம்.பி ஜெகன் நம்பிக்கை



தெல்லிப்பழை நடேஸ்வரா கல்லூரியில் உள்ள அடிப்படை தேவைகள் அனைத்தும் உரிய தரப்பினர் ஊடாக விரைவில் பூர்த்தி செய்யப்படும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாக செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய வி.கே.ஜெகன் தெரிவித்துள்ளார்.

26 வருடங்களின் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்ட தெல்லிப்பழை நடேஸ்வரா கல்லூரியை நேரில் சென்று பார்வையிட்டு அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நடேஸ்வரா கல்லூரி மற்றும் நடேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் கட்டட வேலைத் திட்டம் அதிகளவில் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

மிக முக்கியமாக போக்குவரத்து சேவையை சீர்செய்ய வேண்டியுள்ளது. அது தொடர்பாகவும் உரிய தரப்பினருடன் பேசியுள்ளோம்.

அப்பகுதியில் காளிகோவில் ஒன்று உள்ளது. அதற்கு அருகில் விகாரை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே காளிகோவிலை புனருத்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறான பல தேவைகள் காணப்படுவதனால் அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு நேர்முகத் தேர்வு நாளை கைதடியில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்காலவேலைவாய்ப் பிணைமையமாகக் கொண்டு முழு நேர மற்றும்பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தின் 2016-2ம் அரையாண்டிற்கான நேர்முகத் தேர்வு நாளை 9 ஆம் திகதி வியாழக்கிழமை ஏ9 வீதி, கைதடி, (வடமாகாணசபை அருகில்) எனும் இடத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம் பெவுள்ளது.

நேர்முகத் தேர்வில் பங்கு கொள்பவர்கள் சுய விபரக் கோவை, தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் சமுகமளிக்கவும்.

இங்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இரு சக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர், தையல் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன.

ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்களும் இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# பூடசாலைக்கு புதிய பேருந்து




பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு 7.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான புதிய பேருந்து ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வைத்து கல்லூரி நிர்வாகத்தினரிடம் கையளித்துள்ளார். இந்த நிகழ்வில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்எனப்பலர் கலந்துகொண்டனர். (இ-9-60)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 744

மது




நிஷாந்தன்




கரோலின்





குணா




டினோ




அபி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வவுனியாவில் அமையப்போகும் புதிய பொருளாதார வலயமும் வடபகுதிக்கான மீன்பிடித்துறைமுகமும் பற்றிய ஒரு பார்வை



பேராசிரியர்
பசுபதி சிவநாதன்
யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கை அரசாங்கத்தின் 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன் மொழிவுகளில் வட மாகாணத்திற்குள் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் என்ற வகையில் குறிப்பிடப்பட்டவற்றில் முக்கியமானதொன்றாக இருப்பது,

1. வவுனியாவில் புதிய பொருளாதார வலயம் ஒன்றை நிறுவுவதற்கு 200 மில்லியன் செலவிட மத்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

2. காரை நகரிலும் வல்வெட்டித்துறையிலும் மீன்பிடித் துறைமுகங்களை கட்டியெழுப்புதல் இவ் இரண்டு திட்டங்களும் பிரதேச அபிவிருத்திச் செயற்பாட்டின் ஒரு கூறாகக் கொள்ள முடியும். போருக்குப் பின்னரான போர் நடைபெற்ற பிரதேசத்தின்பொருளாதார செயற்பாட்டில் இவை எந்தளவு முக்கித்துவமுடையது என்பதை தற்போதைய நிலையையும்எதிர்கால நிலையையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குவது பொருத்தமுடையது எந்தவொரு பொருளாதார செயற்பாடும் மக்கள் நலவாழ்வோடும் நிலைத்து நிற்கும் பிரதேச பொருளாதார அபிவிருத்தியோடும் இணைந்து செல்லக்கூடியதாக இருப்பதே வினைத்திறனான பொருளாதார செயற்பாடாக இருக்கும்.

வவுனியாவிற்கென பரிந்துரைக்கப்பட்ட புதிய பொருளாதார வலயம் எங்கு அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான தீர்மானத்தை எடுக்கும் போது பிரதேச பொருளாதார மேம்பாட்டை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அதை வவுனியா நகரத்திலிருந்து 2 அல்லது 3 கிலோ மீற்றர் தூரத்திற்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தாண்டிக் குளத்திலேயே பெறவேண்டும் என தீர்மானத்தை எடுப்பது பிரதேச பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திவிடும் என கருதுவது எந்தளவு பொருத்தமானது என்பதை பொருளாதார நோக்கில் ஆராய்வது இன்றைய தேவையாகும். அவை தாண்டிக் குளத்தில் அமைக்கப்பட்ட பின்னர் அதுபற்றி கருத்துக் கூறுவது காலம் கடந்த சிந்தனையாகவே இருக்கும் என்பதால் இப்பிரதேச மக்களும் மக்களால் தெரிவு செய்யப் பட்ட மாகாணசபை பிரதிநிதிகளும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளும் இதுபற்றி நுணுக்கமாக பரிசீலனை செய்யவேண்டும். இத்திட்டம் வடமாகாண மக்களுக்கே ஒழிய வேறு யாருக்கு மல்ல என்பதை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். இதனால் உண்மையில் தாண்டிக்குளத்தில் இது அமைவது எந்தளவுக்கு பயனுடையது எந்தளவுக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடியது என்பது பற்றி ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியது அவசியமே பொருளாதார அபிவிருத்திக்கான பொது முதலீடு கிடைக்கின்ற இச்சந்தாப்பத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துவதே சிறந்தது.

தாண்டிக்குளத்தை அண்டிய பகுதியில் 140 ஏக்கர் நிலம் 1947ஆம் ஆண்டிலிருந்து விவசாய விதை உற்பத்திப் பண்ணையாக பயன்படுத்தப்பட்டு வருவதை யாவரும் அறிவர். அதில் 35 ஏக்கர் நிலப்பரப்பு 1989இல் இருந்து விவசாயக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டு விவசாயக் கல்லூரி திறம்பட செயற்பட்டு வருவதும் யாவரும் அறிந்ததே இவ் இரண்டும் ஒன்றிணைந்ததான செயற்பாடுகளினூடாக விவசாயப் பிரதேசமான வட மாகாணத்திற்கு நெல்விதைகளை வழங்குவதோடு பாரம்பரிய நெல் இனங்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் பரீட்சார்தமான புதிய நெல் இனங்கள் எமது பிரதேச மண்வளத்திற்கு பொருத்தமானதாக உள்ளதா என்ற ஆய்வுகளை காலம் காலமாக அவ்வப்போது மேற்கொண்டு விவசாயப்பெருமக்களுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றது. அவர்களின் இச் சேவைக்கான மதிப்பை பணத்தில் அளவிடுவதாயின் பல ஆயிரம் மில்லியனுக்கு சமனானதாகும் எனவே அச் செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்படுமாயின் நேரடியான மற்றும் மறைமுகமான பல நன்மைகளை இழந்து விடுவோம். அதுபோலவே எமது பிரதேசத்திற்கென தாண்டிக்குளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு விவசாயக் கல்லூரியின் சேவைகளும் பாதிக்கப்படக்கூடாது இவ் விவசாயக் கல்லூரியில் விவசாயப் போதனாசியர்களுக்கான கல்வியும் பயிற்சியும் வழங்கப்படுகிறது. எமது மண்ணுக்குப் பொருத்தமான விவசாயப் பயிர்களும் நாற்றுக்களும் விதைகளும் எமது மக்களால் பாரம்பரியமாக பாதுகாக்கப்பட்டு வந்த பழ மரங்களை பதுகாப்பது எமது நோக்கமாக இருக்க வேண்டும்.உதாரணமாக கறுத்தக் கொழும்பான், பாண்டி, செம்பாட்டான், வெள்ளைக் கொழும்பான், அம்பலவி, கிளிச் சொண்டன், போன்ற அரிய பழமரக் கன்றுகளின் தாய் மரக்கன்றுகளும் அவற்றிலிருந்து வருடாவருடம் பிறப்பாகம் செய்யப்பட்ட ஒட்டுத் தாவரங்களும் எதுவித தொற்று நோய்களாலும் பாதிக் படாத சூழலை ஏற்படுத்த வேண்டும் விவசாயக் கல்லூரி இதைப் பாதுகாத்து நீண்ட காலமாக எமக்கு சேவையாற்றி வருவதை புதிய திட்டங்களினூடாக சீரளிக்கக் கூடாது இவை ஒரு முறை பாதிக்கப்படுமாயின் இதை மீளக் கட்டி எழுப்புவதென்பது இயலாத காரியம் இது பல ஆயிரம் மில்லியன் செலவிட்டாலும் சாத்தியப்படக்கூடிய தொன்றல்ல.

அமையப்போகும் பொருளாதார வலயம் தாண்டிக் குளத்தில் அமையுமானால் மேற் குறிப்பிட்ட விவசாயப் பண்ணையின் வினைத்திறனான செயற்பாடும் விவசாயக் கல்லூரியின் விலை மதிப்பற்ற சேவையும் பாதிக்கப்படும் குறிப்பாக பொருளாதார வலயத்திற்கென ஒதுக்க படும் நிலத்தில் மேற்கொள்ளப் போகும் செயற்பாடுகளினால் ஏற்படப்போகும் திண்மக கழிவுகளினால் மாசுபடுத்தப்பட்ட கழிவு நீர் கழிவு நீர் வாய்க்கால்கள் வாகனக் கழிவுகள் வாகன நெருக்கடிகளால் ஏற்படும் காற்று மாசடைதல் போன்றவை அருகில் உள்ள நிலங்களையும் அருகில் செயற்படுத்தப்படும் பொருளாதார நடவடிக்கைகளிலும் மிகப்பெரும் பாதிப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படுத்தும் இவற்றின் பெறுமதி பொருளாதார வலயம் எற்படுத்துவதற்கு செலவிடும் 200 மில்லியன் ரூபாவைவிட அதிகம்.

குறிப்பிட்ட செயற்பாட்டிற்கு எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானகள் ஏனைய பொருளாதார செயற்பாடுகளுக்கும் ஒத்திசைவானதாக இருக்கவேண்டும் எதிர் காலத்தில் அப்பொருளாதார செயற்பாடு குறித்த பொருளாதார செயற்பாட்டின் விரிவாக்கத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பிரதேச அபிவிருத்திக்கும் அவசிய மானதாகும். இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் ஒன்றான மத்திய மாகாணத்தில் பொருளாதார வலயம் தம்புள்ளையில் அமைக்கப்பட்டுள்ளது இதற்கு மத்திய அரசுகண்டியில் இருந்து 2 கிலோ மீற்றருக்குள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதிக்க வில்லை எனக் கருத வேண்டியுள்ளது. தம்புள்ளையில்பொருளாதார வலயம் அமைக்கப் பட்டதால் புதியதொரு நகரம் உருவாகியுள்ளது அத்துடன் பொருளாதார செயற்பாடுகள் புதிய நகரத்துடன் இணைந்ததாக தன்னியல்பாகவே விரிவடைந்து செல்வதால் மறைமுகமாக வேலை வாய்ப்பும் தொழில்துறைகளின் வளர்ச்சியும் தொடர்கின்றது இதுவே அப்பிரதேசத்தின் அபிவிருத்திப் போக்கையும் தீர்மானிக்கின்றது இது போலவே வடமத்திய மாகாணத்திற்கான பொருளாதார வலயம் தம்புத்தேகமவில் ஆரம்பிக்கப்பட்டதால் வடமத்தியமாகாணத்தில் உப நகரம் ஒன்று உருவாகி பிரதேச அபிவிருத்திக்கு உதவுகின்றது. இவ்வாறான அனுபவங்களின் பின்னணியில் நோக்கும்போது தாண்டிக்குளத்தில் 5 ஏக்கரில் அமையப்போகும் பொருளாதார வலயம் எதுவித பொருளாதார அபிவிருத்தித் தொலைநோக்கும் இல்லாமல் எடுக்கப்படும் தீர்மானமாகவே இருக்கும். தாண்டிக் குளத்திற்குப் பதிலாக ஓமந்தையில் 35 ஏக்கரைக் கொண்ட மாணிக்கர் வளவில் இப்பொருளாதார வலயம் அமைக்கப்படுவது பொருத்தமானது என்ற வாதம் ஏற்புடையதாக விருக்கும். ஒப்பீட்டு ரீதியில் மேட்டு நிலத்தையும் எதிர்காலத்தில் பொருளாதார வலயம் பலதொழில் துறைகளுடன் விவரிக்கப்படக் கூயளவுக்கு நிலத்தையும் புதிய உப நகரத்தின் விரிவாக்கத்திற்கான வாய்ப்புக்களையும் கொண்டதாகவுள். அத்துடன் விவசாயப்பிரதேசமாக இருப்பதால் தொழிலாளர் தேவையை இலகுவாக நிறைவு செய்யக்கூடியதாக இருக்கும் பொருளாதார அபிவிருத்தி அனுபவங்களின் அடிப்படையில் எல்லா அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிலும் விவசாயத்துறையே கைத்தொழில் துறைக்கு மலிவான தொழிலாளரை வழங்கியுள்ளது எனவே எதிர்கால விரிவாக்கத்திற்கு ஓமந்தை பொருத்தமானது இதைவிட போரால் பாதிக்கப்பட்ட கிளிநெச்சி, முல்லைத்தீவு, மாங்குளம்போன்றவை அரசால் தெரிவு செய்யப்பட்டிருந்தால் இப் பிரதேசங்களின் மீள் எழுச்சிக்கு மிகப்பொருத்தமாக இருக்கும். தாண்டிக்குளத்தில் இது அமைக்கப்படுமானால் தற்போதுள்ள வவுனியா நகர விரிவாக்கம் எதிர்காலத்தில் நிலப்பற்றாக்குறையை எதிர் கொள்ளும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அத்துடன்இன்றைய வவுனியா நகரின் வர்த்தக மையமும் அதை நீண்ட காலமாக சிறந்த உச்சப்பயன்பாட்டிற்கு உட்படுத்திய வவுனியா பிரதேசத்தின் வர்தகர்கள் தங்கள் பொருளாதார வாய்பை இழக்க்கூடிய சந்தர்பங்களும் ஏற்படும் புதிய பொருளாதார வலயத்தில் உருவாகப்போகும் வர்தக மையத்தில் விற்பனை நிலையங்களின் பங்கீடு புதிய விதிமுறைகளுக்கமைவாக இருப்பதற்கான வாய்ப்பு இருப்பதால் பாரம்பரியமாகத் தமக்கிருந்த வாய்ப்புக்களை வவுனியா வர்த்தகர்கள் இழந்துவிடுவர் வேறு பிரதேசத்தவர்களே பொருளாதார வலயத்தில் அதிக நன்மையடைபவர்களாக மாற்றமடைவர்.

இரண்டாவதாக ஏற்கனவே கட்டி எழுப்பப்பட்ட மயிலிட்டி மீன் பிடித்துறைமுகத்தை விடுத்து மீன்பிடித்துறைமுக நிர்மாணத்திற்கு தெரிவு செய்யப்பட்ட காரைநகர்ப் பிரதேசமும் வல்வெட்டித் துறை பிரதேசமும் பொருத்தமானதா? மீன்பிடித்துறைமுக நிர்மாணத்தினூடாக மீனவர் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா எதிர்காலத்தில் அவர்களின் தொழில் வினைத்திறனாக செயற்பட வாய்புள்ளதா? மீனவர்களின் மீள் குடியேற்றத்தை புதிய மீன்பிடித்துறைமுக நிர்மாணத்தினூடாக விரைவுபடுத்த முடியுமா? அவர்கள் தமது சொந்த நிலத்தில் இருந்து மகிழ்வோடு மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு 1983 ஆம் ஆண்டுகளில் பெற்ற வருமானத்தைப் பெற ஆவன செய்ய முடியுமா? என்பது பற்றி ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டிய தருணமிது.

வவுனியாவில் பொருளாதார வலயம், காரைநகர் மற்றும் வல்வெட்டித்துறையில் மீன்பிடித்துறைமுகம் அமைக் கப்படும் என வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழிகின்ற வேளையில் எங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு பொருளாதார வலயம் மற்றும் மீன்பிடித்துறைமுகம் எங்கு அமைக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்திருக்க வேண்டும். அல்லது உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக இருந்தால் வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்பில் விடப்படும் சந்தர்ப்பத்திலாவது இது பற்றி விவாதித்திருக்கலாம் வரவுசெலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும்போது எம் மக்கள் சார்பாக சிந்தித்திருக்கலாம். எங்கே போனார்கள் அவ்வேளையில் என்ன செய்தார்கள் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

தேசிய அரசாங்கமே வரவு செலவுத்திட்டத்தைப் போடுகின்றது இதற்கான அமைச்சரே தீர்மானிக்கும் பொறுப்புடையவர் என்று நீங்கள் வாதம் செய்தால் எங்கள் பிரதேசத்தவருக்கு இது எந்த இடத்தில் இருப்பது பொருத்தமானது என்ற வகையில் இடத்தைத் தெரிவு செய்யும் உரிமை இல்லையா? நான் அறிந்த அளவிற் கு பிச்சைக்காரனுக்கும் அடிமைக்கும்தான் எதுவித தெரிவு உரிமையும் இல்லை இந் நிலையில் நாம் ஒன்றை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். வடமாகாணத்தில் உள்ளவர்கள் மேற்குறிப்பிட்டவற்றில் ஏதோ ஒருவகையைச்சார்ந்தவர்கள் என்று அரசியல் வாதிகள் வெளிப்படையாக குறிப்பிடுவார்களாயின் இதுபற்றி பேசுவதில் எதுவித பயனும் இல்லை என்ற முடிபிற்கு வருவோம்.




## உலக சமுத்திர தினம் இன்றாகும்

### அறிமுகம்

புவியைச் சூழ்ந்து காணப்படும் வளிமண்டலப் பகுதியில் உள்ள உயிருள்ள, உயிரற்ற கூறுகள் நீர், வளி மற்றும் நிலப் பகுதியுடன் ஏற்படுத்த வல்ல இடைத்தாக்கத் தின் காரணமாக புவித் தொகுதி இயங்குகின்றது.

இவ்வாறு காணப்படும் புவித்தொகுதியின் 4 உப பிரிவுகளில் நீர்க்கோளத் தொகுதியும் ஒன்றாகும்.

உலகின் முதலாவது உயிரினமான அல்காவின் தோற்றமும் நீர்ப்பரப்பிலேயே ஏற்பட்டதாக தேளிஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி உயிரினங்களின் இயக்கச் செயற்பாட்டுக்கு இன்றியமையா அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக நீர் முதன்மை பெறுகின்றது. உலகளாவிய ரீதியில் (71%) நீரால் சூழப்பட்டே விளங்குகிறது.

இவ் வகையில் உலக நீர்ப் பரம்பலானது பிரதானமாக நன்னீர்ப் பரம்பல், உவர் நீர்ப்பரம்பல் என பாகுபாடு செய்யப்படுவதையும் காணலாம். சமுத்திரங்களே பிரதான உவர் நீர்ப்பரப்பாக விளங்குகின் றன.

### சமுத்திரங்கள் ஓர் நோக்கு

பரந்த உவர் நீர்ப்பரப்பை கொண்ட பகுதிகள் சமுத்திரங்கள் என வரையறை செய்யப்படுகின்றன. உலகில் பிரதானமாக ஐந்து சமுத்திரங்கள் வகையிட்டு காட்டப்படும் நிலையில் பசுபிக் சமுத்திரம் மிகப் பெரியதாகவும் மிகச் சிறிய ஆழமற்றதுமான சமுத்திரமாக அந்தாட்டிக் சமுத்திரமும் குறிப்பிடப்படுகின்றது.

எமது நாடான இலங்கை அமையப்பெற்றுள்ள இந்து சமுத்திரமானது மொத்த சமுத்திர நீரில் 1/5 பங்கு நீரை தன்னகத்தே அடக்கி மூன்றாவது மிகப் பெரிய சமுத்திரமாக விளங்குவதைக் காணலாம்.

### சமுத்திரங்களின் வேறுபாடு

சமுத்திரங்களில் சிறியனவே கடல்களாகும். அதாவது உவர்/உப்பின் செறிவுத் தன்மை சற்று குறைந்த பகுதிகளாக கடல்கள் விளங்குகின்றன. உலகில் பிரதானமாக ஐந்து சமுத்திரங்கள் உள்ளதாக ஏலவே குறிப்பிட்டிருந்தேன். இவற்றுள் ஒவ்வொரு சமுத்திரங்களும் உவர்த் தன்மை, வெப்பம் , நிறம், அடர்த்தி போன்ற காரணிகளால் வேறுபடுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சமுத்திர நீரில் சோடியம் குளோரைட், மக்னீசியம் குளோரைட், மக்னீசியம் சல்பைட், கல்சியம் சல்பைட் , பொட்டாசியம் சல்பைட், கல்சியம் காபனேற், மக்னீசியம் புரோமைற் முதலான ஏழுவித கனியுப்புக்கள் உவர்த் தன்மையுடன் அளவை தீர்மானிக்கின்றன.

அத்துடன் சமுத்திர நீரினது அடர்த்தி உவரின் அளவு, வெப்பநிலை, அமுக்கம் என்பவற்றால் வேறுபட்டு அமைகின்றது.

சமுத்திர மேற்பரப்பிற்கு சூரியனிலிருந்து நேரடியாக 85% வெப்பமும் முகில்கள் முதலான தடைகளில் சூரிய ஒளி பட்டுத் தெறிப்பதால் 15% ஆன வெப்பமும் கிடைக்கப்பெறுகின்றது.

சமுத்திரங்களின் நிறத்தை நோக்கும் போது விளிம்புப் பகுதிகளில் இளநீல நிறமும் ஆழ் பகுதிகளில் கருநீல நிறமும் காணப்படுவதுடன் செங்கடல் செந்நிறமாகவும் விளங்குகிறது.

இதற்கு டிரைகோ டெஸ்மியம் எனப்படும் அல்கா காரணமாகிறது என கண்டறியப் பட்டுள்ளது

### சமுத்திரங்களின் பயன்பாடு

உலக நாடுகளை , நகரங்களை ஒன்றிணைக்கும் மிக முக்கிய விடயமாக போக்குவரத்து வலைப்பின்னல் விளங்குகின்றது. இதனடிப்படையில் குறைந்த செலவில் கூடியளவான பொருட்கள்/ பயணிகளை குறைந்த நேரத்தில் கொண்டு செல்வதற்கு தற்காலத்தில் உலக நாடுகள் பின்பற்றும் போக்குவரத்து மார்க்மாக கடல்வழிப் போக்குவரத்து விளங்குகின்றது.

ஆரம்ப காலங்களில் வாஸ் கொடகாமா, அமெரிக்க வெஸ்யுசி முதலான நாடுகாண் பயணிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் சர்வதேச பண்டமாற்று வர்த்தகச் செயற்பாடுகளுக்கும் சமுத்திர பிரதேசம் பெரிதும் ஊன்றுகோலாக விளங்கியதைக் காணலாம்.

அத்துடன் உலகில் கண்டறியப்படும் மூலங்கள் பெரும்பாலானவை நீர்க்கோளத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டமையும் சிறப்பானதாகும்.

அளவிடற்கரிய மீன் வளத்தையும் உப்பினையும் தரும் பகுதியாகவும் இத்தகைய சமுத்திரங்களே காணப்படுகின்றன.

கடலலையைப் பயன்படுத்தி மின்சாரம் கூட இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இதில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

### நீர்க்கோளத்தில் ஏற்படும் மாற்றங்கள்

அண்மைக்காலமாக அரிய நீர்க்கோளமானது மனித செயற்பாடுகளின் உச்ச தாக்கங்களால் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு வருவதை காணலாம். குறிப்பாக சமுத்திரப் பிராந்தியங்களில் கொட்டப்படும் அணு மற்றும் இலத்திரனியல்கழிவுகள், எண்ணெய் கழிவுகள் கடலில் சேர்தல், யுத்த செயற்பாடுகள் என்பவற்றால் சமுத்திரப் பரப்பு மாசடைதலுக்கு உட்படுவதுடன் காலநிலை மாற்றம் காரணமாக உண்டாகும் பூகோள வெப்ப உயர்வு பெரும் சவாலாக மாறிவிட்டது.

துருவப் பிரதேசத்திலுள்ள பனிப்பாறைகள் மிக வேகமாக உருகலடைந்து வருவதால் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் கடல் நீர் மட்டம் உயர்வடைவதால் பல்வேறு சிறிய தீவுகள் நீரில் மூழ்கலாம் எனவும் ஆய்வுகள் எச்சரிக்கை செய்கின்றன.

நன்னீரின் அளவு வேகமாக தீர்ந்து போய்க் கொண்டிருப்பதால் உலக நாடுகளிடையே நீர்த்தட்டுப்பாடு என்பது தவிர்க்க முடியாத தொன்றாக மாறி விட்டது.

மூன்றாம் உலக நாடுகளிடையே இதன் தாக்கம் மோசமாகிச் செல்வதுடன் 3 ஆம் உலக மகா யுத்தம் நீர்த் தட்டுப்பாடு காரணமாகவே ஏற்படுமென ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் உடனடியாக உலக மக்கள் அனைவரும் அருகிவரும் நீர்வளத்தை பாதுகாக்க இனியேனும் முயற்சியெடுக்காவிடின் போத்தல் குடிநீருக்கு கூட பஞ்சம் ஏற்படுவதுடன் சமுத்திரப் பகுதி உவர் நீரையும் கழிவு நீரையும் அருந்தி மடிய வேண் டிய துர்ப்பாக்கியம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

### சமுத்திர தினம்

இதனடிப் படையில் எங்களின் சமுத்திர எங்களின் பொறுப்புக்களும் (Our Oceans, Our Responsibility) எனும் கோட்பாட்டின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி உலக சமுத்திர தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சமுத்திர விவகாரங்கள் மற்றும் சமுத்திர நீதிக்கு பொறுப்பான திணைக்களம், செய்தித் திணைக்களத் துடன் ஒன்றுபட்டு பல நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் இத் தினத்தில் நடத்தி வருகின்றது.

அருகி வரும் நீர்வளத்தை பாதுகாக்க அக்கறையுடன் நாம் ஒவ்வொருவரின் செயற்பாடும் அமையாவி டின் முதல் உயிர் எவ்வாறு நீரில் தோன்றிற்றோ அது போல் இவ் உலகின் இறுதி உயிரும் வெகு விரைவில் நீரில் மூழ்கிப் போவது திண்ணம்.

மல்லாவிக் கஜன்
வலயக் கல்வி அலுவலகம்,
துணுக்காய்

---

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

# வேலைவாய்ப்பின்றி 32 ஆயிரத்து 682 பேர்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் தற்போது 32 ஆயிரத்து 682 பேர் வேலையற்று இருப்பதாக யாழ். மாவட்ட புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

யாழ். மாவட்ட செயலக புள்ளி விபரத்தின் அடிப்படையில் வேலையற்ற பட்டதாரிகளாக ஆயிரத்து 430 பேரும், தொழிற் பயிற்சிகளைப் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள் 3 ஆயிரத்து 543 பேரும், பயிற்சி பெறாது வேலையற்றவர்களாக 27 ஆயிரத்து 709 பேரும் தற்போது உள்ளதாக மேற்குறித்த புள்ளி விப ரத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

---

# கடலில் மிதந்து வந்த 113கிலோ கஞ்சா மீட்பு

## 5 கோடியே 69 இலட்சம் பெறுமதியானது



கடலில் மிதந்து வந்த 113.8 கிலோகிராம் கேரளக் கஞ்சாவினை கடற்படையினர் மீட்டு தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை வட பகுதி கடற்படை முகா மைச் சேர்ந்த கடற்படையினர் நேற்று முன்தினம் திங்கட் கிழமை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது முற்பகல் 11 மணியள வில் சந்தேகத்திற்கிடமான முறையில் மிதந்து வந்த மூன்று பொதிகளை மீட்டனர். இவை காங்கேசன்துறையின் ஆறு கடல்மைல் தூரத்தில் மீட்கப்பட்டது.

அதனைக் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று பிரித்துப்பார்த்த போது 36 பொதிகளில் கேரளக் கஞ்சா பொதி செய்யப்பட்டிருந்தது. அவை அனைத்தினதும் மொத்த கிலோ 113.8 கிலோ கிராமாகும்.

அவற்றை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துவந்து ஒப்படைத்தார் காங்கேசன்துறை கடற்படையின் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த தலைமை அதிகாரி லெப்ரினன் கொமாண்டர் சகாபண்டு.

அவற்றை பொறுப்பேற்ற காங்கேசன்துறை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.ஓ.பி. அபயரட்ண மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் கஞ்சாப் பொதிகளை நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்குகடத்துவதற்காக கொண்டு வரப்பட்டவை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன் மொத்தப் பெறுமதி 5 கோடியே 69 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

---

# அரசாங்கம் ஆளணியை அதிகரித்தால் நியமனம்

## வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

மத்திய அரசினால் ஆரம்ப தரஊழியர்களுக்கான ஆளணி அதிகரிப்பை வழங்கினால் மாத்திரமே அவர்களுக்கான நியமனங்களை எம்மால் வழங்க முடியும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். திருவாரகன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆரம்ப தர ஊழியர்கள் தமக்கான நிரந்தர நியமனங்களை வழங்க வேண்டுமென தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் ஆரம்ப தர ஊழியர்களுக்கான (PL1) ஆளணி வெற்றிடங்கள் தற்போது இல்லை.

தற்போது தேவைக்கு அதிகமாகவே ஆரம்ப தர ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

கடந்த காலத்தில் இத்தரத்தினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட போதும் ஆளணி அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை.

இவர்களுக்கான நியமனங்களை வழங்குவது வடக்கு மாகாண அரசாக இருந்தாலும் குறித்த தரத்தினருக்குரிய ஆளணி அதிகரிப்பை மத்திய அரசே மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான கோரிக்கையை நாம் மத்திய அரசுக்கு கொடுத்துள்ள போதும் இதுவரை எமக்கு எந்தவிதமான பதிலும் வழங்கப்படவில்லை. ஆளணி அதிகரிக்கப்படவும் இல்லை.

இந்தநிலையில் ஆளணி வெற்றிடங்கள் இல்லாத சூழ்நிலையில் தன்னிச்சையாக நாம் நியமனங்களை வழங்க முடியாது.

எனவே மத்திய அரசு ஆளணியை அதிகரிக்கும் பட்சத்தில் எம்மால் இவர்களுக்கான நியமனங்களை வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தமிழ் சினிமா வரலாறு

## 7 வயதில் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார் 178

முதல் நாளே சிறப்பாக நடித்தார் சிவாஜி. வேடத்தைக் கலைத்து உள்ளே சென்றபோது வாத்தியார் பொன்னுசாமி அவர் முதுகில் தட்டிக் கொடுத்து மிகவும் நன்றாக நடித்தாய் என்று பாராட்டினார்.

நாட்கள் ஆக ஆக புதுப் புது வேடங்களை ஏற்று நடித்தார் சிவாஜி. சீதை வேடம் போட்ட அவர் பிறகு பரதன் வேடம் போட்டார். சூர்ப்பனகை அழகியாக மாறி இராமரை மயக்கும் கட்டத்தில் அந்த அழகு சூர்ப்பனகையாக நடித்தார்.

இராவணனின் மகன் இந்திரஜித் வேடமும் அவருக்குக் கிடைத்தது.

இப்படி சிறுவனாக நாடகங்களில் நடித்தபோதே மாறுபட்ட வேடங்களில் நடிக்கும் ஆற்றலைப் பெற்றார்.

பல்வேறு நாடக வசனங்கள் அவருக்கு மனப்பாடம். எனவே திடீரென எந்த வேடத்தையும் கொடுத்து நடிக்கச் சொன்னாலும் ஏற்று நடித்தார்.

அந்தக் காலத்தில் நாடகத்தில் நடிக்கும் சிறுவர்கள் வெளியே எங்கேயும் போக முடியாது. கம்பெனியின் வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டும். சிறை வைக்கப்பட்டது மாதிரிதான்.

ஊருக்கு வா என்று பெற்றோர் கடிதம் எழுதினால் அதைப்பையன்களிடம் கொடுக்க மாட்டார்கள். கடிதங்களைப் பிரித்துப் படித்துப்பார்த்து விட்டு கொடுக்கக் கூடியதாக இருந்தால் மட்டும் கொடுப்பார்கள்.

**அண்ணன்கள் மரணம்**

ஒரு முறை காக்கா ராதா கிருஷ்ணன் கெஞ்சிக் கூத்தாடி எப்படியோ அனுமதி பெற்று ஊருக்குப் போய் வந்தார். என்ன ராதாகிருஷ்ணா! என் வீட்டுக்குப் போனாயா? எல்லோரும் சௌக்கியமா? என்று சிவாஜி விசாரித்தார்.

எல்லோரும் நன்றாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் உனக்கு ஒரு துயரச் செய்தி கணேசா! என்று கூறினார் ராதாகிருஷ்ணன்.

என்ன என்று பதற்றத்துடன் சிவாஜி கேட்க உன் அண்ணன் திருஞான சம்பந்தமூர்த்தி இறந்துவிட்டார் என்று கூறினார் காக்கா ராதாகிருஷ்ணன்.

சிவாஜி பதறினார். உள்ளே சென்று தனியாக அழுதார். ஊருக்குப் போய்வர கம்பெனி நிர்வாகிகளிடம் அனுமதி கேட்டார். அவர்கள் அனுதாபம் தெரிவித்தார்களே தவிர அனுமதி தரவில்லை.



'கிருஷ்ணலீலா' நாடகத்தில் பெண் வேடத்தில் சிவாஜி நடித்தார். நிற்பவர்களில் 6 ஆவதாக இருப்பவர் சிவாஜி

சில காலத்திற்குப் பிறகு சிவாஜியின் இன்னொரு அண்ணன் கனகசபாநாதனும் இறந்து போனார். அப்போதும் சிவாஜி தன் வீட்டுக்குப் போக முடியவில்லை. முக்கிய வேடங்களில் அவர் நடித்து வந்ததால் ஒரு நாள் கூட விடுமுறை கொடுக்க நாடகக் கம்பெனி நிர்வாகிகள் மறுத்துவிட்டனர்.

பொதுவாக நாடகங்களில் தொடர்ந்து பெண் வேடம் போடும் சிறுவர்கள் நடப்பது, பேசுவது எல்லாம் பெண்கள் போலவே மாறிவிடுவது உண்டு.

ஆனால் சிவாஜிகணேசன் பெண் வேடம் மட்டும் அல்லாமல் ஆண் வேடங்களும் மாறுபட்ட வேடங்களும் ஏற்று நடித்தார். அதனால் எதிர்காலத்தில் எந்த வேடம் கொடுத்தாலும் அதைச் சிறப்பாக செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்றார்.

**எம்.ஆர்.ராதா**

சிவாஜி நடித்து வந்த நாடகக் கம்பெனியில் எம்.ஆர்.ராதாவும் நடிகராகச் சேர்ந்தார். பதிபக்தி நாடகத்தில் சிவாஜி, சரஸ்வதி என்ற பெண் வேடத்தில் நடிப்பார். எம்.ஆர். ராதா வில்லனாக நடிப்பார்.

நாடகத்துறையில் ராதா அண்ணனுக்கு எல்லா வேலைகளும் தெரியும். அவர் ஒரு ஜீனியஸ். எலக்ரிக் வேலைகளும் செய்வார். காமெடி தெரியும். ஹீரோவாக நடிப்பார். வில்லனாக நடிப்பார். எல்லாவிதமான ரோல்களிலும் நடிப்பார் என்று சிவாஜி கூறியுள்ளார்.

சிவாஜிகணேசன் நாடகக் குழுவினர் கோவைக்குச் சென்றபோது அங்கே உள்ள ஸ்டூடியோவில் கலைவாணர் என்.எஸ்.கே.கிருஷ்ணன் சந்திரஹரி என்ற நகைச்சுவை திரைப்படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். (தொடரும்)

# இலங்கையில் இன்னமும் பாதிக்கப்படும் தமிழர்கள்



தமிழ் மக்களின் அடையாளத்திற்கு அச்சுறுத்தல் விடுவிக்கும் முகமாகவே இலங்கையின் பௌத்த ஆட்சியாளர்கள் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் Red Flag இதழில், Rutaban Yameen எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப் பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 'சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள்' அமைப்பால் WITHERING HOPES என்கின்ற பெயரில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடந்த ஓராண்டு கால ஆட்சியில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் இந்த அறிக்கையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் இலங்கை சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான 26 ஆண்டுகால யுத்தம் 2009 மே மாதம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. இறுதிக் கட்ட யுத்தத்தின்போது 40,000 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து, தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் சிங்கள பௌத்த அரசின் திட்டமிட்ட பாரபட்சங்களுக்கு உட்பட்டு வருகின்றனர்.

'அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களால் தொடர்ந்தும் பல்வேறு மீறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவர்கள் தமக்கே உரித்தான சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழர் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்' என புலம்பெயர் தமிழர் இளையோர் வலைப்பின்னலின் உறுப்பினரான ஆதித்தன் ஜெயபாலன தெரிவித்தார்.

ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் அதிகாரத்துவம் மற்றும் சிங்கள தேசியவாதிகளின் ஆட்சி போன்றன அதிகரித்ததன் பிற்பாடு சிறிசேனவின் பெற்றுக்கொண்ட தேர்தல் வெற்றியானது நிலையான நீதி கிடைக்கும் என்கின்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

2015 இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் 81.5 சதவீத மானவர்கள் வாக்களித்தனர் என இலங்கையின் தேர்தல் ஆணையகத்தின் புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேர்தலில் தமிழ் மக்கள் சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அதிகளவில் வாக்களித்தனர்.

இதன் பின்னர் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார். இந்த ஆட்சியில் தமிழர் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர்களால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் குறைவடைந்தன. ஆனால் இவ்வாறான மாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

1978இல் பிரகடனப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமானது ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மிகவும் மோசமானதாக காணப்பட்டது. இந்த நிலை தற்போதும் தொடர்கிறது' என அனைத்துலக நெருக்கடிகள் குழுவின் இலங்கைக்கான வல்லுநர் அலன்கீனன் தெரிவிததார். 'மக்கள் முறைப்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய நிலை தற்போது காணப்பட்டாலும் கூட பயங்கரவாதப் பொறிமுறையானது மக்களை மிகவும் நெருக்கமாக கண்காணித்து வருகி ன்றது' என அலன்கீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் அரசியற் கட்சிகளை விடுவிக்குமாறும், காணாமற் போனவர்கள் தொடர்பாக தகவல் வழங்குமாறும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களை மீளவும் கையளிக்குமாறும் கடந்த ஆண்டு தமிழ மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசாங்கத்தால் தடைகள் போடப்பட்டிருப்பினும், போரின் போது படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான அஞ்சலிகள் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஒக்டோபரில், ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு சிறிசேன அரசாங்கமானது இணை அனுசரணை வழங்கியது. இத்தீர்மானத்தின் பிரகாரம் தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட யுத்தக் குற்றங்களுக்கான மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு போன்றதொரு ஆணைக்குழுவை இலங்கையிலும் உருவாக்குவதென தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறான மாற்றங்கள் ஏனையோர் எதிர்பார்ப்பது போன்று விரைவாக மேற்கொள்ளப்பட முடியாது என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான அரசியல் உறுதிப்பாடும் வீரத்தையும் இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் கொண்டுள்ளனர்.

நாட்டினதும் இராணுவ வீரர்களினதும் இறையாண்மை பாதுகாக்கப்படும் என இவ்வாண்டு நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி சிறிசேன வாக்குறுதி வழங்கினார். அத்துடன் இந்நாட்டு இராணுவத்திற்கு அனைத்துலக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அறிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வு இடம் பெற்ற மாதத்தில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அமைச்சரவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் யுத்த காலத்தில் கட்டளைகளை வழங்கியிருந்தார் என்பதுடன் இவரது கட்டளையின் கீழ் செயற்பட்ட இராணுவ வீரர்கள் , பொதுமக்கள மீது கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டனர். அத்துடன் பாலியல் மீறல்கள், போர்க் கைதிகள் படுகொலை போன்ற பல்வேறு மீறல்களை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான பாதுகாப்புச் செலவீனம் 2014 ஐ விட 20 பில்லியன் இலங்கை ரூபாவினால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, வடக்கு, கிழக்கானது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை, கல்வி, சொத்துக்கள் மற்றும் அபிவிருத்தி, கட்டுமானம் போன்ற அனைத்து விடயங்களிலும் இலங்கை இராணுவத்தின் தலையீடு காணப்படுகிறது. இலங்கையில் 300,000 இராணுவ வீரர்கள் உள்ளனர்.

'எமது இடத்தில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தினர் திருப்பி அழைக்கப்பட மாட்டார்கள். ஏனெனில் எங்களை இலங்கையர்கள் என்கின்ற அடையாளத்திற்குள் உட்படுத்துவதே அவர்களது நோக்காகும்' என மட்டக்களப்பைச் சேர்ந்த 45 வயதான பெண்மணி ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அடையாளத்திற்கு அச்சுறுத்தல் விடுவிக்கும் முகமாகவே இலங்கையின் பௌத்த ஆட்சியாளர்கள் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆகவே இவ்வாறான அச்சுறுத்தல்கள் நீக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறை நிலவும் நிலையில் தமிழ் மக்கள் எவ்வாறு சுதந்திரமாக, சுயநிர்ணய உரிமையுடனும், நீதியுடனும் வாழ முடியும்? என ஜெயபாலன் வினவினார்.

காலம் அனைத்தையும் வென்றுவிடும். எனவே நேரத்திற்குப் பணிந்து கடமை புரியுங்கள்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போர்க்களம் என்றால் என்னவென்று அறியவோ!

இயற்கையின் தீர்ப்புக்கு யார் அஞ்சுகிறானோ அவனே மனிதனாக வாழ முடியும். இதைவிடுத்து எல்லாம் என்னால் முடியும்; நான் நினைத்தால் அது நடக்கும் என்ற நினைப்பு மமதையின்பாற் பட்டதாகும். இது அழிவைத் தரும்.

இயற்கை என்பதை இறைவன், கடவுள், தெய்வம் என்றெல்லாம் கூறிக் கொள்ளலாம். இயற்கையின் படைப்பு; அவற்றின் அமைப்புகள் மிகவும் அதிசயமானவை.

கூடவே பிறப்பு இறப்பு என்ற ஒழுங்குமுறைகள்; இவற்றை எல்லாம் பார்க்கும் போது எங்களையும் கடந்த-இந்த உலகுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு நிச்சயம் அவசியமானதாகும்.

எனினும் இறைவன் என்பது பற்றிய சிந்தனைகள் இல்லாமல் அட்டூழியங்களும் அநியாயங்களும் தலைவிரித்தாடுகின்றன.

உண்மைகளை மறைப்புச் செய்வதன் மூலம் இந்தநாட்டில் தமிழர்கள் பாதிக்கப்படவில்லை என்பதை நிஜப்படுத்துவதில்கூட ஒரு தரப்பு மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது எனில் இதைவிட அக்கிரமம் எதுவாக இருக்க முடியும்.

நடந்த அழிவுகளை-இழப்புக்களை அப்படியே ஏற்றுக்கொள்வதானது மனிதப் பண்பாகும். இத்தகைய பண்புகள் மறத்தல் மன்னித்தல் என்ற உயரிய விளைவுகளைத் தரவல்லன.

இருந்தும் உண்மையை இருட்டடிப்பு செய்வதிலேயே எங்கள் ஆட்சி அமைப்புகள் நேரத்தை வீணாக்குகின்றன.

ஒரு உண்மையை மறைப்பதற்காக பல பொய்களை சொல்ல வேண்டியுள்ளது. சொன்ன பொய்களை பாதுகாக்க இன்னும் பல பொய்கள் உருவெடுக்கின்றன. இத்தகைய நிலைமைகள் அனைத்தும் இயற்கையின் தீர்ப்பை மறந்து போவதால் ஏற்படுபவைதான்.

இயற்கை எப்படித் தீர்ப்பு வழங்கும் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கான ஒரு உதாரணம் தான் இன்று லண்டன் மாநகரிலும் இதர நாடுகளிலும் எழுந்துள்ள இந்து ஆலயங்களாகும்.

இலங்கையைக் கைப்பற்றிய அந்நியர்கள் அன்று இங்குள்ள இந்து ஆலயங்களை அழித்து தமது மத வழிபாட்டு நிலையங்களை அமைத்தனர்.

இதையிட்டு வருந்தியவர்கள் ஏராளம்-நீதி கிடைக்காதோ என்று அவர்கள் வேதனைப்பட்டனர். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது நிலைமை எப்படியுள்ளது. ஈழத்தமிழர்கள் லண்டனுக்கும் இதர நாடுகளுக்கும் சென்று அங்கு சைவக் கோயில்களை அமைத்துள்ளனர்.

லண்டன் மாநகரில் தேர் ஓடுகிறது. தங்கள் மண்ணில் வாழை இலையில் சாப்பிட்டாலே உயிராபத்து என்றிருந்த நிலைமை மாறி இன்று லண்டனில் வாழை இலை போட்டு சாப்பாடு கொடுக்கும் அளவில் சைவ ஆலயங்கள் அங்கு எழுந்துள்ளன.

அதிலும் சைவ ஆலயங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் பிரித்தானிய மக்களின் முன்னைய வழிபாட்டு ஆலயங்களாம். எப்படி இருக்கிறது இயற்கையின் தீர்ப்பு.

இதை நாம் சொல்லும் போது, ஐயா! ஏன் அதிக தூரம் செல்கிறீர்கள்; கொழும்பு கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியதில் அந்தப் பகுதி போர்க்களமாக உள்ளதாம்.

அட! குண்டு வெடித்தால் தமிழர் பகுதியும் இப்படித்தான் இருந்திருக்கும் என்பதை அடையாளப்படுத்த ஒரு மிகச் சிறிய சம்பவம் அது என்று நீங்கள் சொல்வதும் கேட்கவே செய்கிறது.

## மண்டைதீவு திருவெண்காட்டில் நாளை பாலஸ்தாபனம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை 9ஆம் திகதி காலை 6.20 மணி தொடக்கம் 8.20 மணிவரையான சுபநேரத்தில் நடைபெறும்.

பாலஸ்தாபன கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் இன்று ஆரம்பமாகும்.

மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம 4ஆம் திகதி இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இன்றைய போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வட மாகாண வல்லவன உதைபந்தாட்ட தொடரில்இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமிகள் திருக்கோவில் மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

15ஆம் திகதி புதன்கிழமை மாம்பழத் திருவிழாவும், 16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருக்கைலாச திருக்காட்சியும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும், 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணக்கு தேர்த்திருவிழாவும் 20ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (செ-5)

## குடமுழுக்கு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய குடமுழுக்கு தின நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

விநாயர் பூசையுடன் ஆரம்பமாகி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனை பூசை வழிபாடுகளும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மதியம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது. (செ-12)

## மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்கொழும்புபழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு கொழும்பு-பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக் கிழமை **கிளிநொச்சி பிரதேசத்தில்** நாச்சிக்குடா ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம், குருமன்காடு கிராமம், சாம்பல்தோட்டம் கிராமம், பசார் வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெற்றுக் காட்டுவோம்

### அரசாங்கம் சூளுரை

மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் நிரூப்பிப்பதற்கான சந்தர்ப்பமாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக இன்று 8ஆம் திகதி கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை அமைந்துள்ளது.

எனவே நல்லாட்சி அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் மூன்றில் இரண்டு என்ற பெரும்பான்மையுடன் குறித்த பிரேணையை வெற்றிக் கொள்வோம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த நல்லாட்சி அரசாங்கம் இன்று கவிழுமா அல்லது நாளை கவிழுமா என எதிர்ப்பார்த்திருக்கும் கயவர்களுக்கு இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தகுந்த பாடமாக அமையும். குறித்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்த கூட்டு எதிரணிக்கு எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம் என்றும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசோக்க பிரியந்த, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியளாளர் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார். (செ-12)

## பாரிய தீ விபத்து ஏற்படும் ஜோதிடர் மஞ்சுலவின் கருத்தால் பரபரப்பு

இவ் வருடத்தில் எதிர் பாராத வகையில் பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டு அது மக்களை மோசமான வகையில் பாதிக்கும் என பிரபல ஜோதிடர் மஞ்சுல பீரிஸ் ஏற்கெனவே கூறியிருந்த தாகவும் அதுவே தற்போது கொஸகம சாலாவ இரா ணுவ முகாமில் இடம்பெற்றுள்ளதாகவும் சர்ச்சையான கருத்துக்கள் சமூக வலைத்தளங்கில் வெளியாகியுள்ளன.

அனுபவம் வாய்ந்த ஜோதிடரொருவரான மஞ்சுல பீரிஸ் கடந்த ஏப்ரல் மாதம் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு, இவ்வருடத்துக்குள் நாட்டில் ஏதாவது பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டு மக்களுக்கு பாரிய அழிவை ஏற்படுத்தும் என தீர்க்க தரிசனமாக கூறியிருந்தார்.

இவருடைய தீர்க்க தரிசனமே தற்போது சாலாவ இராணுவ முகாம் வெடிப்பு சம்பவத்தில் உண்மை யாகியுள்ளது என சமூக வலைத் தளங்களில் கருத்து பகிரப்பட்டுள்ளது. (செ-12)

## திலினகமகேவிடம் நேற்று விசாரணை

முன்னாள் கொழும்பு மாவட்ட மேலதிக நீதவான் திலின கமகேவிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர். நேற்றைய தினம் திலின கமகே குற்றப் புனலாய்வுப் பிரிவில் ஆஜராகியிருந்தார்.

சட்டவிரோதமான முறையில் யானைக் குட்டியொனறை வைத்திருந்தார் என திலின கமகே மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் அவரிடம் விசாரணை நடத தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

## கலைமகள் திருவுருவச் சிலை திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் கலைமகள் திருவுருவத் திறப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. அகிலதாஸ், கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எவ்.எச்.அன்ரன், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மை.தேவராஜா, பேராசிரியர் நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மக்களுக்குச் சேவகம்



✦ ஆண்டவனின்விருப்பம்இல்லா மல் மரத்தின் இலை கூட அசைய முடியாது.

✦ என் பணம், என் படிப்பு என்று சிறிதும் எண்ணாதே. நான் மக்களின் சேவகன், நான் பக்தன் என்று எண்ணிக் கொள்.

✦ கடவுளை அடைய வேண்டும் என்ற ஏக்கம் அதிகரித்தால், மனம் பக்குவமாகி விடும்.

✦ கடவுளைப் பற்றிய ஒவ்வொருவரின் அனுபவமும் ஒவ்வொரு வகையில் புதுமாதிரியாக இருக்கும்.

✦ உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவரவர் மனமே காரணம்.

✦ தன்னை குருவாக கருதிக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு அறிவுரை வழங்குவது நல்லதல்ல.

## அழிந்த சான்றிதழ்களை ஒரே நாளில் பெறலாம்

வெள்ள அனர்த்தத்தின் காரணமாக அழிந்து போன மற்றும் காணாமற்போன பெறுபேற்று சான்றிதழ்களை அவசர தேவைகள் நிமித்தம் ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிராம சேவகர் ஊடாக இதற்கான விண்ணப்பங் களை சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என்.ஜே.புஷபகுமார தெரிவித்துள்ளார். (செ-12)

## மாதிரி வினாத்தாள் வழங்க நடவடிக்கை

இம்முறை கல்விப் பொதுத தராதர சாதாரணதர பரீட்சையின் வினாத்தாள்களின் மாதிரி வினாக்கள் அடங்கிய நூலொன்றை நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறித்த நூலினை வலயக் கல்வி பணிமனைகளினூடாக எதிர்வரும் வாரத்திற்குள் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் கூறினார். (செ-12)

## வீதித் திறப்பு விழா நாளை

யாழ்.இருபாலை கிழக்கு அரசடி முனிகோவில் வீதியின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தலைவர் செ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன், வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன், வலி கிழக்கு பிரதேச சபைச்செயலாளர்யு.ஜெலீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# கழுகுகளின் உதைபந்தாட்ட தொடர்

# புத்தூர் விக்னேஸ்வராவை வென்றது மன்னார் சென்.ஜோசப் வி. கழகம்







உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 30.05.2016 அன்று நடைபெற்ற போட்டியில் மன்னார் சென்.ஜோசப் வி.க (பனங்கட்டிகொட்டு) எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா வி.க மோதியது. முதலாவது பாதி ஆட்டத்தில் 02,08,10 ஆவது நிமிடங்களில் சென்.ஜோசப் வி.க ரெக்சன், றொன்சன், லெமென்டன் ஆகியோர் ஆகியோர் கோலினை பெற்றனர். புத்தூர் விக்னேஸ்வரா சார்பாக 3 ஆவ்து நிமிடத்தில் நிக்சன் கோலினை பெற்றார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென்.ஜோசப் றொன்சன். சிந்துஜன் ஆகியோர் மேலும் இரண்டு கோல்களை பெற்றனர். இரண்டாவது பாதியில் சிறப்பாக விளையாடிய விக்னேஸ்வரா அனோஜன் மற்றும் பானுயோபன் ஆகியோரின் மூலமாக 02 கோல்களை பெற்றது.

ஆட்ட நேர முடிவில் 5:3 என சென். ஜோசப் வி.க. வெற்றியினை சுவீகரித்துக் கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஜோசப் வி.க. சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க. மூத்த உதைபந்தாட்ட வீரரும் கழக நலன் விரும்பியும் பொறியியலாளர் கலாபவன் வழங்கி கௌரவித்தார். (கு)



உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 31.05.2016 அன்று அல்வாய் நக்கீரன் வி.க. மற்றும் வலைப்பாடு ஜெகமீட்பர் வி.க. இடையிலான போட்டியானது நக்கீரன் வி.க. வருகை தராததால் வலைப்பாடு ஜெகமீட்பா வி.க.வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# நவரட்ணம் ஞாபகார்த்த உதைபந்து சுற்றுத்தொடர்

## இறுதிப்போட்டியில் இளங்கதிர், ரேவடி



அமரர் நவரட்ணம் (கட்டியப்பா) ஞாபகார்த்தமாக நேதாஜி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் அரையிறுதியில் நேற்று முன்தினம் இளங்கதிர் அணி றெயின்போ அணியை வீழ்த்தியும் ரேவடி அணி நேதாஜி அணியை வீழ்த்தியும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளன. (கு)

# இமையாணன் மத்திய வி.கழக மாவட்ட ரீதியிலான உதைபந்து

## நவஜீவன்ஸ் வெற்றி



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியிலான காற்பந்தாட்ட தொடரில் (02/06/2016) நடைபெற்ற லீக் தெரிவு சுற்றில் நவஜீவன்ஸ் எதிர்த்து இருதயராஜா மெலிஞ்சிமுனை மோதியது.

போட்டியின் முதல் பாதியில் 6 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் வீரர் சுரேஸ் கோல் போட்டு அசத்த முதல் பாதி 1:0 என நிறைவுற்றது.

இரண்டாவது பாதியில் ஆட்டத்தை மாற்ற போராடியது. மெலிஞ்சிமுனை. அதனை பின்கள வீரர்கள் முறியடிக்க ஆட்டத்தின் 43 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலை நவஜீவன்ஸ் வீரர் ருபேந்திரா போட்டார். போட்டி நிறைவின் கடைசி நிமிடத்தில் மெலிஞ்சிமுனை சார்பாக வீரர் கோல் போட்டார். இதன் மூலம் 2:1 என்ற ரீதியில் வெற்றியீட்டி லீக் சுற்றுக்குள் நுழைந்தது நவஜீவன்ஸ். (கு)

# மாவட்ட ரீதியிலான பூப்பந்து உடுவில் பிரதேசம் சம்பியன்



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியில் உடுவில் பிரதேச அணி சம்பியனாகியது. அண்மையில் அரியாலை சரஸ்வதி உள்ளக அரங்கில் இடம்பெற்ற மேற்படி இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச அணியை எதிர்த்து உடுவில் பிரதேச அணி மோதிக் கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 3:1 என்ற ரீதியில் உடுவில் பிரதேச அணி சம்பியனாகியது. (கு)

# ஹென்றீசியன் சவால் கிண்ணம் மயிலங்காடு ஞானமுருகன் வெற்றி



ஹென்றீசியன் சவால் கிண்ண" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. ஆரம்பத்தில் ஞானமுருகன் அணி கோல் வாய்ப்புக்களைத் தவறவிட்ட போதும் தொடர்ந்து வந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி முதல் பாதியில் கோலொன்றைப் போட்டது.

இரண்டாவது பாதியில் ஞானமுருகன் அணியின் நடுக்கள வீரர் சுபாஸ் தூரத்தில் (long range) இருந்து அடித்த கோலின் மூலமும் ஜெகன் அடித்த இரு கோலின் உதவியுடனும் மேலும் முன்னிலை பெற்றது.

விண்மீன் அணியின் அமலதாஸ் ஒரு கோலை அடித்து ஆறுதல் அளித்தார். இறுதியில் 4:1 எனும் கோலடிப்படையில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று A பிரிவுப் பட்டியலில் முன்னிலை வகிக்கின்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானமுருகன் அணியின் ஜெகன் தெரிவானார். (கு)

# ஜெயலலிதா சொத்து குவிப்பு வழக்கு விசாரணை நிறைவு

## தீர்ப்பு ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்து வந்த உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது.

கர்நாடக உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் ஜெயலலிதாவை விடுவித்ததை எதிர்த்து, கர்நாடக அரசு இந்த வழக்கைத் தாக்கல் செய்தது.

இந்த வழக்கின் விசாரணை கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி தொடங்கியது. கடந்த வாரம் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்தன.

மேலும், வழக்கில் சம்பந்தப்பட்ட ஆறு நிறுவனங்கள் தங்கள் வாதங்களை நேற்று முன்வைத்தன.

அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்திருப்பதால், நீதிபதி பி.சி. கோஷ், அமிதவா ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கில் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது.

அத்தோடு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரும் வரும் 10ஆம் திகதிக்குள் எழுத்து மூலமான தங்கள் வாதங்களை தாக்கல் செய்ய வேண்டுமெனவும் நீதிபதிகள் கூறினர்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 1991 - 96 காலகட்டத்தில் முதலமைச்சராக இருந்தபோது வருமானத்திற்கு பொருந்தாத வகையில் 67 கோடி ரூபாய் அளவுக்குச் சொத்துக்களைச் சேர்த்தார் என தொடரப்பட்ட வழக்கு கர்நாடக மாநிலத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது.

2014 செப்டம்பரில் இந்த வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம், ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய நான்கு பேருக்கும் தண்டனை வழங்கி உத்தரவிட்டது.

இதை எதிர்த்து ஜெயலலிதா கர்நாடக உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். அந்த மேல் முறையீட்டில் ஜெயலலிதாவும் மற்றையோரும் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, தற்போது ஜெயலலிதா வழக்கு முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. தீர்ப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கூட அநேகமாக ஓகஸ்ட் மாதத்திற்குள் தீர்ப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (செ-12)

## அதிகாரி நெவில்...

அவர் இவ்வாறு ஆஜராகியுள்ளார என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும், சில ஆவணங்களை நெவில் எடுத்துச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

## சுகாதார...

சந்தித்து சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்பாக கேட்டபோதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் சுகாதார தொண்டர்கள் நீண்டகாலமாக வெவ்வேறு காலத்தில் தொண்டர்களாக பணியாற்றியுள்ளனர். நான் சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த காலத்தில் கூட பலர் தொண்டர்களாக கடமையாற்றினர்.

ஆனால் 2014ஆம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் 2014 சுற்று நிருபத்தின் அடிப்படையில் சுகாதார திணைக்களம் மற்றும் ஏனைய திணைக் களங்களில் ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது தற்காலிக அடிப்படையிலோ பணிபுரிந்தவர்களை நிரந்தரமாக்க கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

அதன் அடிப்படையில் நாம் வடக்கு மாகாணத்தில் சுகாதார திணைக்களத்தின் கீழ் 900 பேரை நிரந்தரமாக்கும் சந்தர்ப்பத்தை கொடுத்தோம்.

அவ்வாறு நிரந்தரநியமனம் கொடுத்த சந்தர்ப்பத்தில் குறித்த நியமனத்திற்கு உரிய வர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது தற்காலிக அடிப்படையிலோ நியமனக்கடிதங்களை பெற்றவர்கள் மாத்திரமே நிரந்தர நியமனத்திற்கு உரியவர்கள் என அப்போது ஆளுநராக இருந்த சந்திரசிறி மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் எழுத்து மூலம் எமக்கு அறிவித்திருந்தனர்.

அதன் அடிப்படையில் யார் சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமனக் கடிதங்களை வைத்திருந்தார்களோ அவர்களை மாத்திரம் உள்வாங்கினோம். அவர்களில் 900 பேர் இருந்தனர்.

ஆனால் 5 மாவட்டங்களிலும் இந்த நியமனங்களுக்குள் உள்வாங்கப்படாமல் அப்போது தொண்டர்களாக வேலை செய்தவர்களும் அல்லது பல வருடங்களுக்கு முன்னர் தொண்டர்களாக வேலைசெய்தவர்கள் இந்த நியமனம் வழங்கப்பட்டமையினால் தமக்கும் நியமனம் வழங்கப்படவேண்டும் என தற்போது வந்துள்ளனர்.

இதில் தொண்டர்களாக இல்லாமல் தமது சொந்தவாழ்வில் இருந்தவர்களும் தற்போது இவ்வாறான சந்தர்ப்பம் வரும்போது நியமனத்திற்காக வந்துள்ளனர். இவர்களில் 759 பேர் விண்ணப்பித்துள்ளார்கள்.

எனினும் 759 பேரையும் அந்தந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் தொண்டர்களாக பணிபுரிந்ததை உறுதிப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர். இந்த 5 மாவட்டத்தில் இருந்து வந்த சுகாதார தொண்டர்களின் பெயர் விபரங்களை ஒருங்கிணைத்து மத்திய அரசாங்கத்தில் அனுமதியை பெறவேண்டிய தேவை உள்ளது.

நாம் நியமனத்தை வழங்குவதாக இருந்தால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்ற திறைசேரிக்கு கீழ்செயற்படும் திணைக்களமே ஆளணி தொடர்பாக தீர்மானிக்கும். அந்த திணைக்களத்தின் அனுமதியின்றி புதிய நியமனங்களை வழங்கமுடியாது.

ஆனாலும் நான் 759 பேரின் நிரந்தர நியமனத்திற்கு வடக்கு மாகாண சபை அமைச்சர் வாரியத்தினுடைய அனுமதியை பெற்றுள்ளேன். அத்துடன் முன்னாள் ஆளுநர் பளிககாரவிடமும் முறையான அனுமதியை பெற்றுள்ளேன். ஆனாலும் கடந்த ஒருவருடங்களாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக காத்திருக்கின்றோம்.


ஆனால் அவர்கள் அனுமதியைதரவில்லை. அவர்கள் 2014இல் வந்தசுற்று நிருபத்தின் அடிப்படையில் தொண்டர்களை உள்வாங்கும் போது எமக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு அதிகமாக நீங்கள் உள் வாங்கலாம். அவ்வாறு உள்வாங்கிய அனைவரையும் ஆளணியாக மாற்றித்தருவோம் என்பதை அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மத்திய அரசின் கீழ்வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மாகாணசபைஎடுத்தவர்களை இதுவரை ஆளணியாகமாற்றவில்லை. எனவே எங்கள் அமைச்சில் அனுமதிக்கப்பட்ட ஆளணியையும் விட 600 பேர் மேலதிகமாக பணி புரிவதாக தெரிவித்துள்ளதுடன் மேலதிகமான அனுமதியை வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

எனினும் ஜனாதிபதியை சந்தித்த போதும் யுத்தகாலத்தில் பணியாற்றிய இவர்கள் தொடர்பாக தெரிவித்திருந்தோம். இவ்விடயம் திறைசேரி அமைச்சர் ரவிகருணாநாயக்கவுக்கு கீழ் வருவதனால் அவரிடமும் இத் தொண்டர்கள் தொடர்பாக கூறியுள்ளோம். எனினும் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கமுடியாமல் இருப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களமே காரணமாக உள்ளது என தெரிவித்தார்.(செ-9-250)

# ஆயுத களஞ்சியசாலை வெடிப்பு; இராணுவம், சி.ஐ.டி தீவிர விசாரணை

## நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவிப்பு



கொஸ்கம சாலாவ இராணுவ முகாமிலுள்ள ஆயுத களஞ்சியசாலையில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கூடிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த வெடிப்பு சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு பேரவையின் கூட்டத்தில் ஆராயப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சாலாவ இராணுவ முகாமிலுள்ள ஆயுத களஞ்சியசாலையில் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென தெரிவித்த பிரதமர்,

தீ விபத்திற்கான காரணம் கண்டறியப்பட்ட பின்னர் அது தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சாலாவ இராணுவ முகாம் ஆயுத களஞ்சியசாலையில் வெடிப்பு ஏற்பட்டால் அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான திட்டங்கள் உரிய முறையில் காணப்படவில்லையெனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஆயுத களஞ்சியசாலை வெடி விபத்தினால் பிரதேசங்களில் சிதறுண்டுள்ள வெடிபொருட்களை அகற்றும் பணிகளில் விசேட பொலிஸ் பிரிவினர் ஈடுபட்டு வருவதாகவும், பாதிக்கப்பட்ட வீடுகள் அரச செலவில் புனரமைக்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (செ-12)

## என்ன மனநிலையில்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அரசியலமைப்பு மக்கள் கருத்தறியும் குழுவின் முன்மொழிவுகள் குறித்து ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை அவர் நடத்தியிருந்தார். இதன்போதே, சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபையும், தமிழ் மக்கள் பேரவையும் தயாரித்த தீர்வுத் திட்டம் மக்கள் கருத்தறியும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. இறைமை இருக்கின்றது என அந்த தீர்வுத் திட்டத்தில் மொழிவாரி மாநிலம் மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு திட்டத்தின் படி சுயாட்சி உருவாக்கப்பட வேண்டு மென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மக்கள் கருத்தறியும் குழுவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தில் தமிழ் மக்கள் 'தேசிய இனம்' என்ற வார்த்தைப் பிரயோகம் இல்லை. மாறாக தமிழ் மக்கள் சிறுபான்மை இனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த குழு தமிழ் மக்கள் தேசிய இனம் அல்ல என்று யோசிக்கின்றார்கள் போல இருக்கின்றது. அந்த அறிக்கையில் சிறுபான்மை இனம், அந்த இனத்திற்கு நாங்கள் கொடுப்பதைக் பெற்றுக்கொண்டு போக வேண்டுமென்ற வகையில் அறிக்கை காணப்படுகின்றது.

தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு முன்னரே இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. சிங்கள வரலாற்றாசிரியர்களும் அவற்றினை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆனால், மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில், ஏற்கெனவே, அரசியல் சாசனத்தில் உள்ளவாறு வடகிழக்கு இணைக்கப்பட்ட அந்த குறிப்பினையும் எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அந்தவகையில், வடகிழக்கு இணைப்பினை முற்றாக எதிர்த்திருக்கின்றார்கள் என்றே பார்க்க வேண்டும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினை குறித்து காத்திரமான எந்த கருத்துக்களும் சொல்லப்படவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட விடயங்களை வைத்தே வடமாகாண சபையும், தமிழ் மக்கள் பேரவையும் தீர்வுத்திட்டத்தினை தயாரித்தார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மக்கள் கருத்தறியும் குழுவின் கருத்துக் குறித்து எந்தவித எதிர்ப்புக்களையும், கருத்துக்களையும் கூறவில்லை.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பார்க்கும் போது, தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு இது அல்ல என்ற கருத்தை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் ஏன் இன்றும் கூறவில்லை என்ற கேள்வியும் எழுகி ன்றது.

எனவே, மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில் சிங்கள மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான முன்மொழிவுகளாக இருக்கின்றதே தவிர, தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவ தற்கான முன்மொழிவுகளாக இருக்கவில்லை. திரு சந்திரகாசனின் மகன் இளங்கோ மற்றும் பேராசிரியர் செல்வகுமாரன் ஆகியோர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக இருவர் அக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

எனினும் முழுமையான அதிகார பகிர்வு என்ற விடயத்தில் சமஷ்டி அமைப்பு முறை என்ற வடிவத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நியமிக்கப்பட்டவர்கள் உறுதியானவர்களாக இருந்தார்களா என்ற கேள்வியும் எழுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நியமிக்கப்பட்டவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களை முன்வைத்தார்களா? அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது முன்மொழிவுகளை இருவருக்கும் தெளிவுபடுத்தி நியமித்தார்களா என்றும் கேள்வி எழுப்பினார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைப்புக் கூட்டம் என்பது நீண்டகாலமாக கூட்டப்படவில்லை. தமிழ் மக்களது காணிகள் விடுவிக்கப்படவில்லை. தேசிய ரீதியில் தமிழ் மக்களுடைய பல பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் என்ன மனநிலையில் த.தே. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் செயற்பட்டு வருகிறார்? அரசாங்கம் எல்லாம் செய்யும் என அவர் நம்பிக் கொண்டிருப்பதாலேயே 2016க்குள் தீர்வு என சம்பந்தன் தனது கணிப்பை தெரிவித்து வருகிறார்.

அப்படியாயின் அரசாங்கம் தமிழ் மக்களுக்காக இதுவரை ஆக்கபூர்வமாக எதைச் செய்தது என்பதை அடுத்த ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் மக்களுக்கு சம்பந்தன் வெளிப்படுத்த வேண்டும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

அத்தோடு விடுவிக்கப்படுகின்ற காணிகளில் பெரும்பாலானவை முன்னைய அரசாங்கம் விடுவிப்பதாக தீர்மானிக்கப்பட்ட காணிகளேயாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (செ-7)

## ஜனாதிபதி மாளி...

தோடு, இதன் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

29 ஆளுநர்கள் மற்றும் 06 ஜனாதிபதிகள் தமது கடமைப் பணிகளுக்காகவும் வாசஸ்தலமாகவும் பயன்படுத்தி வந்த கோட்டை ஜனாதிபதி மாளிகை முதன் முறையாக மக்கள் பார்வைக்காக திறக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி மாளிகையும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையை சுற்றி உள்ள வீதிகள் மக்கள் பயன்பாட்டுக்காக திறந்துவிடப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி மாளிகையை தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக பயன்படுத்தவில்லை என்பதோடு, அதனை அரச விருந்தினர்களை வரவேற்பது உட்பட விசேட நிகழ்வுகளுக்காக மட்டும் பயன்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் புதிய ஒரு அரசியல் பயணத்தில் புதியதோர் பாரம்பரியத்தை ஆரம்பித்து வைத்து இதுவரையில் பொதுமக்கள் பிரவேசிக்க முடியாது மூடப்பட்டிருந்த அரச மாளிகையை பொதுமக்களுக்காக திறந்துவிட ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

077 308 6366 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் விமர்சன சத்துரங்கவை தொடர்பு கொண்டு இதனை பார்வையிடுவதற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையின் வரலாறு காலணித்துவ காலம் வரையில் நீண்டதாகும். இன்று அரச மாளிகை அமைந்துள்ள இடம் போர்த்துக்கேயர் ஆட்சியின்போது ஒரு தேவாலயமாக காணப்பட்டது.

1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் கொழும்பு கோட்டையில் உயரமான நிலப் பகுதியில் பிரான்சிஸ் தேவாலயத்தை அமைத்தனர். அவர்கள் தேவாலயத்திற்கு அருகில் பிரான்சிஸ் சேமக்காலையை நிர்மாணித்ததுடன் அப்போது காலம்சென்ற போர்த்துக்கேய தலைவர்களின் பூத உடல்களையும் அங்கேயே அடக்கம் செய்தனர்.

இந்த இடத்தில் ஒல்லாந்த கட்டிடக் கலைக்கு ஏற்ப ஒரு இரண்டு மாடி மாளிகை அப்போது இலங்கையில் இருந்த ஒல்லாந்த ஆளுநரான ஏங்கல் பேக்கினால் நிர்மாணிக்கப்பட்டது. காலத்திற்கு காலம் இந்த மாளிகை புதுப்பிக்கப்பட்டு அம்மாளிகை அரச மாளிகையாக பின்னர் கட்டியெழுப்பப்பட்டது.

1782ஆம் ஆண்டு பிரித்தானிய படையினர் கொழும்பு கோட்டையை தாக்கி ஒல்லாந்தர்களை வீழ்த்தியபோதும் ஏங்கல் பேக் இவ் இல்லத்திலிருந்து வெளியேறவில்லை. பிரித்தானிய ஆளுநரான பெற்றிக் நோத்தின் கீழ் அரச வருமான அதிகாரியாக சேவை செய்த ஜோஜ் மெல்வின் லெஸ்லி என்பவரிடமிருந்து அரச கணக்காய்வு அறிக்கையின்படி 10ஆயிரம் பவுண்கள் குறைவுற்றிருந்தமையினால் அவரது மனைவியான ஏங்கல் பெக்கின் பேத்தி தமது கணவரை காப்பாற்றும் நோக்குடன் இந்த இல்லத்தை அரசாங்கத்திற்கு கையளிக்க தீர்மானித்தார்.

8ஆயிரத்து700 பவுண்கள் இதற்கு உத்தேச விலையாக தீர்மானிக்கப்பட்ட போதும் எஞ்சிய பவுண் தொகையை குறைத்து பிரித்தானிய அரசாங்கம் இதனை உடமையாக்கிக் கொள்ள விரும்பியதன் காரணமாக 1804 ஜனவரி மாதம் 17ஆம் திகதி இவ் இல்லம் அரசாங்க உடமையாக்கப்பட்டது.(செ-12)

## களஞ்சியசாலை...

நான் தற்போது கானல் பதுங்கியுள்ளேன் என்றான்.

நான் முடிந்தளவு கவனமாக இரு தம்பி அங்கு நிலைமை வழமைக்கு திரும்பியதும் எனக்கு அழைப்பு எடு என்று கூறினேன். பிறகு கொழும்பிலிருந்து உறவினர் ஒருவர் அழைப்பு மேற்கொண்ட போது தம்பியின் தொலைபேசி இயங்கவில்லை என்றார்.

மனைவிக்கு வந்த அழைப்பில்,

ஹலோ நதி உனக்கு கேட்குதா அந்த சத்தம்?

எனக்கு எதுவும் கேட்கவில்லை. நீங்கள் கதைப்பது விளங்கவில்லை. கொஞ்சம் சத்தமாக பேசுங்கள். ஏன் அங்கு மழை பெய்கின்றதா?

இல்லை இங்குள்ள ஆயுத களஞ்சியசாலை தீப்பற்றி எரிகின்றது.

ஐயோ, நீங்கள் கவனமாக இருங்கள்.

நான் மட்டும் பாதுகாப்பா இருந்தா எப்படி? என்னுடைய நண்பர்கள் எல்லாம் உள்ளே சிக்கிக்கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்துள்ளது என பார்க்க வேண்டும். பிறகு அழைப்பை மேற்கொள்கிறேன் என அவ் அழைப்பில பேசியுள்ளார்.

இராணுவ முகாமில் ஏற்பட்ட விபத்தில் புத்தலவகுருவெல பகுதியை சேர்ந்த 38 வயதுடைய இரு குழந்தைகளின் தந்தையான கே.ஏ. ஜனக சமிந்த என்ற இராணுவ வீரர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


முள்ளியவளை நகரில் கடை விற்பனைக்கு

மு/வித்தியானந்தா தேசிய பாடசாலைக்கு மிக அருகாமையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 30 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077308 3121

(C-4830)

அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை

காலி நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடமைபுரிய

- அலுவலக உத்தியோகத்தர்கள்
- ஊழியர்கள் தேவை

ஆர்வமும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய தமது விண்ணப்பத்தை

NO.3, Kelan kaduwa Place, Colombo 06

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: தங்குமிட வசதி வழங்கப்படும்.

(C-4818)




✓ கெயார் (ஆண்) HAIR CUT (GENTS) = Rs 200/=
✓ சிறுவர் (ஆண்) CHILD CUT (GENTS) = Rs 150/=
✓ சவரம் = Rs 150/=
✓ தலை மசாஜ் HEAD MASSAGE = Rs 250/=

La Passion (லா பெஷன்)

HAIR BEAUTY - REFLEXOLOGY
176, K.K.S ROAD,
JAFFNA.
www.lapassionsalons.com
0767593357

GENTS - 8.00 AM To 9.00 PM
LADIES - 9.00 AM To 6.00 PM

(4871)


## கிழ. முதலமைச்ச...

அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அண்மையில், சம்பூர் பகுதியில் இடம்பெற்ற அரச நிகழ்வொன்றுக்குள் பிரவேசித்த முதலமைச்சர் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த உயர் கடற்படை அதிகாரி ஒருவரை அச்சுறுத்தியதாக மனு மூலம் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் கிழக்கு மாகாண முதலமைச்சர் அரசியல் யாப்பின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை மீறியுள்ளதாகவும் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனவே, கிழக்கு மாகாண முதலமைச்சர் இலங்கை அரசியல் யாப்பை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு அம்மனுவில் மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (செ-12)

## பிரித்தானிய...

இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முக்கிய அமைச்சர்கள் சிலரை சந்தித்து கலந்துரையாடுவர் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (செ-12)

## ஆயுத வெடி விப...

அமைய இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் தடுப்பது தொடர்பில் ஆலோசித்து வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் முப்படைகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் இருந்து இவ்வாறான கட்டடங்களை இடமாற்றுவது தொடர்பிலும் ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவொரு துரதிர்ஷ்டமான சம்பவம் எனவும், இந்த அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கம் மற்றும் முப்படையினர் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதோடு, தங்களது குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இராணுவ நீதிமன்றமொன்று அமைக்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் நீதிமன்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளளதாகவும் இந்த சம்பவத்தின் பின்னர் இராணுவத்தின் பாதுகாப்பை விடவும், பொது மக்களின் பாதுகாப்பு குறித்தே அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் 100 வீதம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பொதுமக்கள் தங்களது வீடுகளுக்கு திரும்ப முடியுமெனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## சர்வதேசத்தின்...

சிறிசேன தெரிவித்தார்.

நேற்று மாலை தெஹிவளை நகர மண்டபத்தில் இடம்பெற்ற சீ.வீ.குணரத்னவின் ஞாபகார்த்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

கொடிய பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி நம்மைவிட்டுப் பிரிந்த மூத்த அரசியல்வாதியாகிய காலஞ்சென்ற சீ.வீ.குணரத்னவின் 16 வது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு சீ.வீ.குணரத்ன ஞாபகார்த்த குழுவினரால் இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எல்ரீரீஈ பயங்கரவாதத்தை நம் நாட்டுக்குள் யுத்த ரீதியாக தோல்வியுறச் செய்திருந்த போதிலும் அவர்களின் கொள்கை இன்னும் சர்வதேச ரீதியில் தோல்வியடையவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தின் பின்னரான காலத்தில் பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றி அக் கொள்கையினை தோல்வியுறச் செய்யும் பொறுப்பினை ஏற்கெனவே தற்போதைய அரசு முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

ஒரு நாடு என்ற ரீதியிலும், இனம் என்ற ரீதியிலும் சகோதரத்துவத்துடனும் சகவாழ்வுடனும் வாழக்கூடிய சமூக அமைப்பினை நிலைநாட்டுவதற்காக மகா சங்கத்தினர் உள்ளிட்ட எல்லா சமயத் தலைவர்களினதும் வழிகாட்டல் சிறப்பாக கிடைக்கப்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் எல்லா சமயத் தலைவர்களிடமும் கேட்டுக்கொண்டார்.

மக்களை நேசித்த மக்களால் நேசிக்கப்பட்ட மிகச் சிறந்த அரசியல்வாதியாக சீ.வீ. குணரத்ன, எல்லா இனங்கள் மத்தியிலும் இருக்கவேண்டிய ஐக்கியம் மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்காக மிகப் பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்த ஒரு தலைவர் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, புதிய அரசியல்வாதிகளுக்கு அவரிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஏராளம் என்றும் தெரிவித்தார்.

அரசியல் ஆளுமைகளின் பெறுமானங்களை உரசிப் பார்த்து எதிர்காலத்திற்கு தேவையான அரசியல் தலைவர்களை உருவாக்க வேண்டியது ஒரு யுகத்தின் அவசியமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (செ-12)

## இராணுவ முகாம்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்பகுதியில் கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் இருந்த ஆயுதக் கிடங்கு வெடித்ததில் பல மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். குறித்த பிரதேசம் மிக மோசமாக பாதிக்கபட்டிருக்கிறது. உண்மையாகவே நாங்கள் பாதிக்கபட்ட மக்களுக்காக வருந்துகிறோம்.

இந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்ட போது அப்பிரதேசத்தில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, இந்த இராணுவ முகாமை மக்கள் மத்தியில் அமைக்க வேண்டாம் எனக் கூறியிருந்தார் எனவும் அதை மீறி அமைத்ததால் தான் இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனினும் வடக்கு மாகாணத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற சொன்ன பொழுது தினேஸ் குணவர்த்தன முழுமையாக எதிர்த்திருந்தார்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் எத்தனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று இரண்டு முகாம்கள் அல்ல இங்கு ஒவ்வொரு பிரதேசத்திலும் மாவட்டத்திலும் எத்தனை இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவ முகாம்கள் இருந்தால் அங்கு வெடிபொருட்கள் இருக்கும் என்பது தவிர்க்க முடியாதது. ஆகவே இங்குள் முகாம்களில் இவ்வாறு அசம்பாவிதங்கள் தவறுதலாக இடம்பெற்றால் எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட நேரிடும்.

எனவே இங்குள்ள முகாம்கள் மக்கள் மத்தியில் இருக்கக் கூடாது. என்பதை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும்

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நூற்றுக் கணக்கான முகாம்கள் அகற்றபட்டு மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களிற்கு மாற்றி அமைக்க வேண்டும். எனவே இதை அனைவரும் வலியுறுத்த வேண்டும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.(செ-7-9)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management — UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி (பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி (பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

SCHOLARSHIPS AVAILABLE — புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY
Business • Hospitality • English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தரம்-5 மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-15

**பகுதி-I** **தமிழ்க் கல்விக் கழகம்** **நேரம்:- 45 நிமிடங்கள்**

◆ ஒரே கூட்டத்தை சேர்ந்த பொருட்கள் இடம்பெறும் அடைப்பை தெரிவுசெய்க?

01.


01)



02)


03)

02.


01)



02)



03)

◆ சோடிச்சொற்களுக்கு மிகவும் பொருத்தமான உருவை தெரிவு செய்க?


03. தளபாடம்-மரவேலை



01)



02)


03)

04. நித்திரை-சொகுசு


01)


02)


03)

◆ சதுரமாக பிரிக்கப்பட்டுள்ள இடங்களில் A,B,C,D,E,F,G,H ஆகிய எட்டு நபர்கள் நிற்கின்றனர்.

05.

| | | |
|---|---|---|
| A | | E |
| B | | F |
| C | | G |
| D | | H |

வ ↑

இவர்களில் C இற்கு தெற்குத் திசையில் உள்ளவர் யார்?

1) B 2) G 3) D

06. இவர்கள் அனைவரும் கடிகார முள் சுழலும் திசை வழியாக ஒரு முறை ஒழுங்கு முறைப்படி மாறுகின்றனர். அவ்வாறான ஒழுங்கு முறையை காட்டும் உருவை தெரிவு செய்க.

01)

| | | |
|---|---|---|
| H | | D |
| G | | C |
| F | | B |
| E | | A |

வ ↑

02)

| | | |
|---|---|---|
| E | | D |
| F | | C |
| G | | B |
| H | | A |

வ ↑

03)

| | | |
|---|---|---|
| A | | D |
| B | | C |
| C | | B |
| D | | A |

வ ↑

◆ பின்வரும் இடைவெளிக்குரிய விடையைத் தெரிவு செய்க.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-
மன்னர்க்கு தன்தேச மல்லாற் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

07. இப் பாடல் ஒரு.................................................................................................... ஆகும்.

1) மூதுரை 2) திருக்குறள் 3) கவிதை

08. மன்னனை விட.................................................................................................... சிறந்தவனாகும்.

1) பணக்காரன் 2) கற்றவன் 3) அரசன்

◆ தரப்பட்டுள்ள விபரத்தை விளங்கி பொருத்தமான விடையை தெரிவு செய்க.

| |
|---|
| பருப்பு 1kg + தேயிலை 2kg= ரூபா 250.00 |
| பருப்பு 1kg + தேயிலை 1kg = ரூபா 145.00 |


09. 1kg பருப்பின் விலை எவ்வளவு?


1) ரூபா 40.00 2) ரூபா 50.00 3) ரூபா 45.00


10. 4kg பருப்பினதும் 4kg தேயிலையினதும் விலை எவ்வளவு?


1) ரூபா 540.00 2) ரூபா 530.00 3) ரூபா 580.00


◆ முதலில் தரப்பட்டுள்ள உருவை விரிக்கும் போது கிடைக்கும் சரியான உருவை தெரிவு செய்க.


11. 



1)



2)


3)

12. 


1)


2)


3)

◆ 13 ஆம், 14 ஆம் வினாவுக்கு நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியை தெரிவு செய்க.

13. விமலன் தனது குடும்பத்துடன் வாடகை வீட்டில் இருந்ததனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினான்.

1) தன் கையே தனக்கு உதவி

2) எலி வளையானாலும் தனி வளை வேண்டும்

3) உண்ணா சொத்து மண்ணாய் போகும்.

14. சில மனிதர்களிடம் காணப்படும் கெட்ட பண்புகள் அவர்கள் உயர் பதவிக்கு வந்தாலும் அவர்களை விட்டு செல்லாது என்பதை நாம் காண முடிகிறது.

1) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?


2) ஆனைக்கும் அடி சறுக்கும்

3) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

15) பக்க நீளங்கள் 5m கொண்ட சதுர வடிவமான சுவர் ஒன்றில் 1/4 பங்கிற்கு தீந்தை பூசுவதற்கு 300 ml தீந்தை செலவானது. மீதியான பங்கிற்கு தீந்தை பூச இன்னும் எவ்வளவு தீந்தை தேவைப்படும்.


1) 910 ml 2) 900 ml 3) 930 ml

◆ 16ஆம், 17 ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.


16. 




1)


2)


3)

17. 



1)


2)


3)

◆ தரப்பட்டுள்ள பாடலைக் கொண்டு விடை எழுதுக?

| | |
|---|---|
| சின்னக் குருவி பறக்கிறது | வெயில் நன்றாய் எறிக்கிறது |
| சிறகைக் காற்றில் உதைக்கிறது | வெளியிற் பயறு காய்கிறது |
| திண்ணைக் குந்தில் இருக்கின்றேன் | பையக் குருவி வருகிறது |
| திரும்பிப் பார்த்து சிரிக்கிறது | பயற்றுப் பாயை அடைகிறது |

18. இப் பாடலை பாடியவர்
 1) அழ.வள்ளியப்பா 2) மகாகவி பாரதியார் 3) வள்ளுவர்

19. பாடலில் உள்ள அடைமொழிச் சொல் ஒன்று
 1) குருவி 2) சிறகு 3) சின்ன

◆ வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

20. 97, 89, 82, 76, 71, .............. வெற்றிடங்களில் வர வேண்டிய எண்கள் முறையே
 1) 67,63 2) 67, 64 3) 68.63

21. B,D,F,H..................... வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்து யாது?
 1) I 2) K 3) J

◆ கூட்டில் உள்ள எண்களை பயன்படுத்தி 22,23 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| 5, | 18, | 14 |
| 7, | 17, | 13 |
| | 19, | 15, 4 |

22. மிகப் பெரிய ஒற்றை எண்ணையும் மிகச் சிறிய ஒற்றை எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் எண் யாது?
 1) 25 2) 26 3) 24

23. மிகச் சிறிய இரட்டை எண்ணையும் மிகப் பெரிய இரட்டை எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் எண் யாது?
 1) 24 2) 26 3) 22

◆ கீழே தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய 24 , 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.


> சுமதி சகானாவை விட 10 புள்ளிகள் குறைவாக பெற்றாலும்
> சாந்தியை விட 15 புள்ளிகள் கூடுதலாக பெற்றாள். சாந்தி பெற்ற புள்ளி 65 ஆகும்.

24. மூன்று மாணவிகளும் பெற்ற மொத்த புள்ளிகள் எத்தனை?
 1) 235 புள்ளிகள் 2) 240 புள்ளிகள் 3) 245 புள்ளிகள்

25.சகானா பெற்ற புள்ளிகள் எத்தனை?
 1) 90 புள்ளிகள் 2) 95 புள்ளிகள் 3) 90 புள்ளிகள்


◆ எண்கள் அமைந்துள்ள விதத்தை அவதானித்து விடையை தெரிவு செய்க?

26. இக்கோலத்தில் A,B ஆகியவற்றிற்குப் பொருத்தமான எண்கள் முறையே




 1) 2,22 2)3.23 3) 4,24

27.இக் கோலத்தில் E,F ஆகியவற்றிற்கு பொருத்தமான எண்கள் முறையே




 1) 3,15 2) 4,16 3) 5, 15

◆சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

28. ஒரு அப்பிள் பழத்தின் விலை ரூபா. 65. என்னிடம் 7 ரூபாய் உண்டு. எனது அக்காவிடம் 8 ரூபாய் உண்டு. எம் இருவரிடமும் இருக்கும் பணத்தைப்போல மூன்று மடங்கு பணம் எனது தம்பியிடம் உண்டு. எம் மூவரிடமும் உள்ள பணத்தைக் கொண்டு அப்பிள் ஒன்றை வாங்க இன்னும் எவ்வளவு பணம் தேவை?
 1) ரூபா. 5.00 2) ரூபா. 10.00 3) ரூபா. 15.00

29. ஒரு வரிசையில் லதா நடுவில் நிற்கின்றாள். இவள் தொடக்கத்திலிருந்து 11 ஆவது இடத்தில் நிற்கின்றாள் எனின் அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நிற்கின்றனர்.
 1) 20 2) 21 3) 22

30. சுதாவும் மதியும் ஒரு வட்ட ஓட்டப்பந்தயப் பாதையில் ஓட ஆரம்பித்தனர். சுதா அரைச்சுற்று ஓடும் போது மதி ஒரு சுற்றை ஓடி முடித்து போட்டியை நிறைவு செய்தான். இதற்கேற்ப

1) சுதாவின் கதி மதியின் கதியிலும் இரு மடங்காகும்.
2) மதியின் கதி சுதாவின் கதியிலும் இரு மடங்காகும்.
3) மதியின் கதி சுதாவின் கதியிலும் மூன்று மடங்காகும்.

31. ஒரு வகுப்பில் உள்ள மாணவி கூறினாள் , ''எங்கள் வகுப்பறையில் ஆண் மாணவர்களின் எண்ணிக்கையில் இரு மடங்கு பெண் மாணவிகளின் எண்ணிக்கையாகும்'' வகுப்பறையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 36 எனின், வகுப்பில் உள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1) 15 2) 12 3) 16

32. சாந்தா குறித்த ஒரு எண்ணை நினைத்தாள். அவ்வெண்ணுடன் 3 ஐக் கூட்டி வரும் விடையை 6 ஆல் பெருக்கும் போது பெறப்பட்ட விடையானது 95 இலிருந்து 5 ஐ கழிக்கும் போது பெறப்பட்ட விடைக்குச் சமனாக இருந்தது எனின் சாந்தா நினைத்த எண் யாது?


1) 12 2) 10 3) 18

33. ஒரு வட்டவடிவக் கடதாசியை ஆறாகப் பிரித்து முறையே மஞ்சள், நீலம், சிவப்பு, பச்சை, ஊதா, வெள்ளை ஆகிய நிறங்கள் தீட்டப்பட்டன எனின் மஞ்சள் நிறத்திற்கு எதிரே தீட்டப்பட்ட நிறம் யாது?


1) நீலம் 2) சிவப்பு 3) பச்சை

◆ சதுரமுகி வடிவமான ஏழு மரக்குற்றிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும் போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.

34.




35.





◆ திருத்தமான கருத்தை தரும் வாக்கியத்தை தெரிவு செய்க?

36. 1) இரண்டு தாய்க்கு ஒரு பிள்ளை உள்ளது
2) பச்சைக் காகங்கள் வானில் பறந்து திரிந்தன.
3) கழுகு தனது கால்களால் புறாவை பிடித்துக் கொண்டது.

37. 1) இரவு வேளையில் வானில் சூரியன் பிரகாசித்தது.
2) யானை தனது பலத்தினால் மரத்தை முறித்தது.
3) நரி திராட்சைப் பழம் உண்ணும்.

38.



முழு உருவத்தின் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியில் பரப்பளவின் எத்தனை மடங்கு?

1) 4 2) 5 3) 6

39. தமயந்தி தன்னிடமிருந்த 32 மாம்பழங்களையும் ரூபா. 22.00 பணத்தையும் லீலாவிடம் கொடுத்து அவளிடம் இருந்த ரூபா 10.00 பெறுமதியான 15 கொய்யாப்பழங்களை வாங்கினாள் எனின் தமயந்தி வைத்திருந்த மாம்பழம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட பெறுமானம் யாது?

1) 5 2) 4 3) 8

40. சாந்தியின் தற்போதைய வயது 9 வருடங்கள். அவள் தனது தங்கையின் வயதிலும் 3 மடங்கு வயதை உடையவள். இன்னும் மூன்று வருடங்களில் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

1) 21 வருடங்கள் 2) 18 வருடங்கள் 3) 15 வருடங்கள்

இவ் வினாக்களுக்குரிய விடைகள்
நாளை வியாழக்கிழமை
(09.06.2016)
வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்

★யோகராசா - துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ்
(ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

★K.L.M.நபீல்
(ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)